DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

பஞ் சொக்கலிங்கம் BROKER
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25 வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
Canada's Other Voices
Member of National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1344
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday January 7, 2022

# வான்வெளியில் Sunwing விமானத்தின் உள்ளே ‘குடித்துக் கும்மாளம்’ போட்ட புத்திஜீவிகளை கனடிய பிரதமர் பகிரங்கமாகக் கண்டித்தார்





கடந்த 30-12-2021 அன்று மொன்றியால் விமான நிலையத்திலிருந்து பிரத்தியேக வாடகைக்கு அமர்த்தப்பட்ட **Sunwing** விமானத்தின் உள்ளே வான்வெளியில் கட்டுப்பாடுகளை மீறி ‘கும்மாளம்’ போட்ட புத்திஜீவிகளை கனடிய பிரதமர் பகிரங்கமாகக் கண்டித்துள்ளார். தங்களை புத்திஜீவிகள் என்று அறிமுகம் செய்த மேற்படி பயணிகள் குழுவின் தலைவர் தற்போது ஊடகங்களுக்கு முன்பாக தோன்ற மறுப்பதாகவும் அறியப்படுகின்ற நிலையில் மேற்படி விமானப் பயணத்தின் போது அதில் பயணம் செய்தவர்கள் மது அருந்தியும் போதை தரும் புகை பிடித்தும் ‘கும்மாளம்’ போட்டு கொரோனா தொடர்பான கட்டுப்பாடுகளை மாத்திரமல்ல. சரவதேச விமானப் பயணங்கள் தொடர்பான சட்டங்களையும் மீறியுள்ளதாகவும் ஊடகங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

*(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship;
• Super visa for parents and grandparents including health insurance;
• Citizenship;
• Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

# ஒன்றாரியோவில் கோவிட் –19 தொற்றுக்கு எதிராக தடுப்பூசி போட மறுத்த பணியாளர்கள் தொடர்பான இழுபறி நிலை நீடிக்கின்றது

கோவிட் -19 தொற்றுக்கு எதிராக தடுப்பூசி போட மறுத்ததற்காக பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட சுகாதாரத் துறை சார்ந்த தொழிலாளர்களை பணிநீக்கம் செய்ய மருத்துவமனைகள் அல்லது பிற பொதுத்துறை நிறுவனங்களுக்கு உத்தரவைப் பிறப்பிக்கும் முறையை தவிர்க்குமாறு ஒன்ராறியோ மருத்துவமனைகளின் சங்கம் மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்களையும் மாகாணத்தின் சுகாதாரத்துறை அமைச்சரையும் வேண்டியுள்ளன.

எனினும். பொதுத் தாதியர்கள் மற்றும் பிற ஊழியர்கள் ஓமிக்ரான் நோய்த் தொற்று அறிகுறிகளுடன் வீட்டிலேயே இருப்பதாலும் அல்லது தனிமைப்படுத்தப்படுவதாலும் ஒன்றாரியோ மருத்துவமனைகளில் அதிகரித்து வரும் பணியாளர் பற்றாக்குறையை எதிர்கொள்வதில் நாம் மிகுந்த சிரமங்களை அனுபவிக்கின்றோம். என்றும் ஒன்றாரியோ மருத்துவமனைகள் சங்கம் எச்சரிக்கிறது.

*(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

**உங்கள் அபிமான கனடா உதயன் ஈழத்து படைப்பாளிகளுக்கு களம் கொடுக்கும் மற்றும் மதிப்பளிக்கும் வகையில் 2022 மே மாதத்தில் “ஈழத்துச் சிறப்பிதழை” வெளியிடவுள்ளது.**

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### HOUSE for RENT

**Scarborough** நகரில்
**Markham / Ellesmere**
சந்திப்புக்கு அருகில்
**3 bedroom house, main floor with all facilities**
வாடகைக்கு உண்டு.

Close to all amenities.

**Call: (416) 724-7362**

### Cleaners Wanted

Cleaners wanted,
Woodbridge area.
Daytime and after hours.

Please contact us @
**416-412-3223**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### ஆலயத்தின் சமையலறைக்கு உதவியாளர் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள நன்கு அறியப்பெற்ற ஆலயமொன்றின் சமையலறையில். உதவியாளராகப் பணியாற்றக் கூடிய ஆண்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். தகுந்த சம்பளம் வழங்கப்படும். முன்னைய அனுபவம் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:

**சிவா 647 891 7725**

### HOUSE for RENT

மார்க்கம் நகரில் **Markham / Denison** சந்திப்புக்கு அருகில் உள்ள நான்கு அறைகள் கொண்ட வீடு, **basement** தவிர்த்து உடனடியாக வாடகைக்கு உண்டு. 4 வாகனங்களுக்கான **parking** உண்டு. 407 பெருந்தெரு, கடைகள் பாடசாலைகள் மற்றும் அனைத்து வசதிகளும் அருகில் உள்ளன.

**விபரங்களுக்கு:**
**(647) 282-0643**
**என்னும் இலக்கத்தை அழைக்கவும்.**

### நேரலை வீடியோ ஒளிபரப்பு சேவை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்திலும் கியுபெக் மாகாணத்திலும் தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெறும் சுப வைபவங்கள் மற்றும் இறுதிக்கிரிகையகள் ஆகியவற்றை நேரடியாக வீடியோ ஒளிப்பதிவு செய்வது மாத்திரமன்றி. அந்த நிகழ்வுகளை நேரடியாக முகநூல் மற்றும் இணையத் தளங்களில் நேரலையாக ஒளிபரப்பவும் எம்மை அழையுங்கள். குறைந்த கட்டணமே அறவிடப்படும் அழையுங்கள்

**சிவா 647 891 7725**


# CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

*Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.*



Our secure online application is easy to complete, just go to
gopal@driveautogroup.ca
Or call Gopal Pillai at:
**(647) 763-0210**

brimell

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# ராஜபக்சாக்களின் குடும்ப ராஜ்ஜியம் என்று எண்ணி மாங்கனித் தீவை ஆளவந்தார்களோ இந்த மகிந்த சகோதரர்கள்?

இலங்கை என்னும் மாங்கனித் தீவில் உள்ள இயற்கை வளங்களைப் பற்றி வெளிநாடுகளிலிருந்து செல்லும் சாதாரண உல்லாசப் பயணிகள் தொடக்கம். அரசு சார்ந்த உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டு செல்லும் இராஜதந்திரிகளும் விதந்து பேசுவதும் பேசுவதுமாக உள்ள விடயம் எத்தனையோ தசாப்த்தங்களாக இடம் பெறுகின்ற ஒன்றாகும்.

இலங்கையில் மிகுந்த குறைந்த நிலப்பரப்பின் உறைவிடமாக விளங்கும் மலையகத்தில் மட்டுமே மேற்கொள்ளப்படும் தேயிலை பெருந்தோட்டச் செய்கை இலங்கையை பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடைவதற்குரிய ஒரு ஏற்றுமதி உற்பத்திப் பண்டமாக விளங்கியும் கூட தற்போது தேயிலை என்னும் பணப் பண்டத்தை உற்பத்தி செய்யும் தோட்டத் தொழிலாளர்கள் போன்றே இலங்கை அரசும் பொருளாதாரத்தில் தள்ளாடுகின்ற நிலைக்கு வந்துள்ளதை உலகமே கண்டு அதிர்ச்சிக்குள்ளாகியது.

இந்த நிலைக்கு பல காரணங்கள் உண்டு என்பதை அறிந்தவர்கள் எம்மில் பலர் உள்ள நிலையில். இந்த வாரம் எமது 'கனடா உதயன்' பக்கங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து எழுதியுள்ள தனது வாராந்தக் கட்டுரையில் 'நிலாந்தன்' அவர்களும் கனடாவிலிருந்து எழுதியுள்ள தனது வாராந்தக் கட்டுரையில் "கனடா நக்கீரன்' அவர்களும் எழுதியுள்ள விடயங்களை எமது வாசகர்கள் படிப்பதற்கு முன்பாகவே வாசித்து அறிந்துள்ள ஆசிரிய பீடத்தைச் சேர்ந்தவர்களாகிய எமக்கு இந்த வார 'கதிரோட்டத்தின்' முக்கிய கருப்பொருளாக கோட்டாபாய அவர்கள் 'கொட்டாவி' விட்டவராக காணப்படும் நிலையும். அவ்வாறு இருந்தும் 'விழுந்தும் மீசையில் மண்படவில்லை' என்பது போல தங்களைக் காட்டிக் கொண்டாலும். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த. நாட்டின் ஜனாதிபதியும். பிரதமரும், நிதி அமைச்சரும் இன்னும் சில ராஜபக்ச அரசியல் வாரிசுகளும். தொடர்ச்சியாக அனைத்து தரப்பினராலும் விமர்சனங்களுக்கு உள்ளாகி வருவதைக் காண்கின்றோம்.

இலங்கையில் தற்போது காணப்படும் நிலைக்கு யார் காரணம் என்று பார்த்தால் இந்த குடும்ப அரசியலின் பிரதிநிதிகளே என்று சுட்டுவதற்கு சில வினாடிகளே போதுமானவை.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான போர்க் குற்றங்களுக்கு காரணமானவர்கள் இவர்களே என்றும். ஆரோக்கியமான பொருளாதாரத் திட்டங்கள் இல்லாத அரசியல் தலைவர் இவர்களே என்றும். நாட்டின் வளங்களை வெளிநாடுகளின் கரங்களில் தங்கத் தட்டுகளில் வைத்து கையளித்தவர்கள் இவர்களே என்றும், தொடர்ச்சியான விமர்சனங்கள் இந்த ராஜபக்சாக்களை நோக்கி நாள் தோறும் விரிந்த வண்ணமே செல்கின்றன.

ஆனால் நாட்டை இந்த நிலைக்கும் மக்களுக்கு சரியான தலைமையைக் காட்டாத அரசியல்வாதிகளாகவும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ள. இந்த குடும்ப அரசியல்வாதிகளின் 'பொருளதார வளம்' வலுவாகவே உள்ளுத என்பதை சாதாரண மக்கள் கூட அறிந்து வைத்துள்ளார்கள் என்பது ராஜபக்சாக்களுக்கு விளங்காத விடயமல்ல.

நாட்டில் வாழும் சாதாரண நடுத்தட்டு மக்கள் கூட தங்கள் தெய்வ நம்பிக்கைகளை ஆலயங்களில் சமர்ப்பணம் செய்ய தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களுக்கே செல்லத் தயங்குகின்ற இந்த வேளையில் விமானமொன்றியில் பயணித்து கடல் தாண்டிச் சென்று தங்கள் குடும்பத்தின் நலன் வேண்டி திருப்பதியில் பிரார்த்தனையும் பூஜைகளும் செய்து திரும்புகின்ற பலன் இவர்களுக்கு மட்டுமே தவிர நாட்டு மக்களுக்கு உரித்தானது அல்ல என்றே இந்த குடும்ப அரசியல்வாதிகள் கருதுகின்றார்கள்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் சிக்கல்களுக்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தீர்வுகளில் கவனம் செலுத்துவது இவர்களின் நோக்கமல்ல. அதில் பிடிவாதமாகவே உள்ளார்கள் ஆனால் இலங்கையின் பொருளாதாரம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகளாவிய உலகின் மாறுபாடுகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது என்பதை உணர்கின்றார்கள் இல்லை..

கோட்டாபய இராசபக்சாவும் அவரது குழுவினரும் இந்த முக்கியமான உண்மையைக் கவனிக்காமல் பிடிவாதமாகவே இருந்து வருகின்றார்கள் என்புத நன்கு தெரிகின்றது. மறுபுறம் கோட்டாபாயவின் மதி நுட்பக் குறைபாடுகளின் விளைவாக

இராசயன உரத்தை இறக்குமதி செய்வதைத் தடை செய்ய அவர் எடுத்த நடவடிக்கை, இப்போது நாட்டை பஞ்சத்தின் விளிம்பிற்கு கொண்டு சென்றுள்ளது. இவ்வாறான நிலையில் இலங்கையில் நடுத்தர மக்கள் மற்றும் தொழிலாளர்கள் விவசாயிகள் ஆகியோர் கட்சி வேறுபாடுகளை களைந்து வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்குவதன் மூலமே நாட்டை இந்த 'குடும்ப அரசியல்வாதிகளிடம்' இருந்து காப்பாற்றலாம் என்றே நாம் நம்புகின்றோம்.

# வான்வெளியில் Sunwing விமானத்தின் உள்ளே ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பவம் தொடர்பாக தொடர்ந்து ஊடகவியலாளர்களிடம் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட கனடியப் பிரதமர் பின்வருமாறு தனது கோபத்தை வெளிப்படுத்தினார்.





கொரோனாவை எதிர்கொள்வதற்காக வர்த்தக இழப்பு, மற்றும் பாடசாலைகளை மூடுதல் போன்ற கட்டுப்பாடுகளுக்கு கனடா தேசம் தன்னை உட்படுத்திக்கொண்டுள்ள நிலையில், எந்த விதிகளையும் மதிக்காமல் விமானத்தில் ஒரு கூட்டம் உல்லாசமாக கனேடிய சமூக ஊடக பிரபலங்கள் என்ற பெயரில் நடத்திய விவகாரம் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவில் மட்டுமல்ல உலகெங்கும் இலட்சக் கணக்கானவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ,அவர்கள் மற்ற கனேடியர்களைப் போல, தானும் அந்த விமானத்திற்குள் இடம்பெற்ற உல்லாசமான கொண்டாட்டத்தைப் பார்க்க நேர்ந்ததாகவும் வீடியோவைப் பார்த்ததாகவும், அதனால் தான் கடும் எரிச்சலடைந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மக்கள் தங்களை பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்காக எவ்வளவு சிரமப்படுகிறார்கள், கிறிஸ்துமஸ் பண்டிகை நேரத்தில் கூட குடும்ப உறுப்பினர்களை சந்திப்பதைக் கூட கட்டுப்படுத்திக்கொண்டு, முகக்கவசங்களை அணிந்துகொண்டு மக்கள் தங்களைக் கட்டுப்பாடாக வைத்துக்கொள்ள பாடுபடும் நேரத்தில், இப்படி தங்கள் சக குடிமக்களுக்கும், விமான ஊழியர்களுக்கும் அபாயகரமான சூழலை ஏற்படுத்தியுள்ள இவர்களது செயல் முகத்தில் அறைவதற்கு சமமான அவமதிக்கும் செயலாகும் என்று விசனம் தெரிவித்துள்ளார் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ.

மேற்படி விமானப் பயணத்தின் போது சட்டங்களை மீறியவர்களும் அதனை ஏற்பாடு செய்தவர்களும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிட முடியாது என்று கனடிய மத்திய போக்குவரத்து அதிகார சபை சிரேஸ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அத்துடன் பயணம் செய்த சிலர் அதை ஒளிப்படமாக்கி துணிச்சலுடன் பகிரங்கப்படுத்தியதையும் கண்டித்த அந்த அதிகாரி அவர்கள் மீதான விசாரணை ஒன்றும் தற்போது ஆரம்பமாகியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்

அத்துடன், ஒரு குற்றச்செயலுக்கு 5,000 கனேடிய டொலர்கள் வீதம், கடுமையான அபராதமும் அந்த சட்டங்களை மீறிய பங்கேற்றவர்கள் செலுத்தவேண்டிவரும் கனடிய போக்குவரத்துத்துறை அமைச்சர் ஓமர் அல்காபரா ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் பற்றிய கனடிய அரசின் போக்குவரத்து அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் விமானப் பயணத்தில் சம்பந்தப்பட்டவர்கள். அனைவரும் முகக்கவசம் அணிவது முதலான எவ்வித விமான கட்டுப்பாடுகளையோ, கொரோனா கட்டுப்பாடுகளையோ பின்பற்றவில்லை. அத்துடன், மது அருந்திக்கொண்டும், கஞ்சா புகைத்துக்கொண்டும் நடுவானில் ஆட்டம் போட்டுள்ளார்கள். இநதச் செயல் முழுமையாக கனடியர்களை அவமதிக்கும் ஒரு செயலாகும்

மேலும் இந்த சட்டத்தை மீறிய செயல்கள் தொடர்பான வீடியோக்கள் சமூக ஊடகங்களில் வெளியானதைத் தொடர்ந்து கடும் சர்ச்சை உருவாகவே, கனடிய அரசாங்கம் அவர்கள் மீது அபராதம் முதல் சிறைத்தண்டனை வரையிலான கடும் நடவடிக்கைகள் எடுக்க உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒன்றாரியோவில் கோவிட் — 19 தொற்றுக்கு எதிராக...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

"மிக எளிமையாக, பல பணியாளர்கள் தங்களுக்கும் தங்கள் நோயாளிகளுக்கும் ஏற்படும் ஆபத்தைக் கருத்திற்கொண்டு மருத்துவமனைக் கொள்கைகளுக்கு இணங்காத குறைந்த எண்ணிக்கையிலான சுகாதாரப் பணியாளர்களுடன் பணிபுரிய மறுப்பார்கள், இதனால் மருத்துவமனைகள் தற்போது எதிர்கொள்ளும் பணியாளர்கள் சவால்களை பெரிதும் அதிகரிக்கிறது." என சங்கத்தின் தலைவர் அந்தோனி டேல் ஒன்றாரியோ மாகாணத்தின் தொழில் அமைச்சர் மான்டே மெக்நாட்டனுக்கு நேற்று வியாழக்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் எனவும் கூறப்படுகின்றது .

இவ்வாறிருக்க. நோர்த் யோர்க்கில் உள்ள ஒரு மருத்துவ நிலையம் தடுப்பூசிகளை மறுத்ததற்காக பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் பணியில் அமர்த்துமாறு மருத்துவமனைகளை ஊக்குவித்தது.

தற்போதைய ஓமிக்ரான் அலையின் தீவிரத்தை மேற்கோள் காட்டி, மாகாணம் முழுவதும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுபவர்கள் அதிகரித்து வருவதைக் குறிப்பிட்டு, நயாகரா நகரத்தின் நோயாளிகளின் அதிகரிப்புக்கு பதிலளிக்கும் பொறுப்பின் பிரகாரம் தாங்கள் கவனம் செலுத்துவதற்கான "அவசர தேவை" இருப்பதாகக் அங்குள்ள வைத்தியசாலை நிர்வாகம் மாகாண அரசிற்கு அறிவித்துள்ளது

"எங்கள் மருத்துவமனையில் முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட பணியாளர்களுக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம், பின்னர் தீர்மானிக்கப்படும் நேரத்தில் நாங்கள் செயல்படுத்துவோம்" என்று ரொறன்ரோ வைத்தியசாலை ஒன்றின் தலைமை நிர்வாகி லின் குரேரிரோ கூறினார், இங்கு எந்த ஊழியர்களும் இதுவரை பணிநீக்கம் செய்யப்படவில்லை மற்றும் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத பணியாளர்களுக்கான சோதனைகளை தொடர்ந்து நடத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒன்டாரியோவின் தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர். கீரன் மூர், இது தொடர்பான தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது. உள்ளூர் நிலைமைகளைப் பொறுத்து, இந்த நிபந்தனை கட்டாயமானதா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை அந்தந்த மருத்துவமனைகளுக்கு விட்டுவிட்டதாக நேற்று வியாழக்கிழமை கூறினார்.

இந்தியா செய்திகள்
India News

# இந்தியாவில் முதல் சனி, ஞாயிறு இரு நாட்களும் 144 தடை! கொரோனா மூன்றாவது அலையின் எதிரொலி!



தலைநகர் டெல்லியில் கொரோனா நோய்த்தொற்று பரவலை தடுக்கும் விதமாக, வெள்ளிக்கிழமை 7ம் திகதி இரவு 10 மணி முதல், திங்கள்கிழமை காலை 5 மணி வரை முழு ஊரடங்கு பிறப்பித்து, அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் கொரோனா நோய்த்தொற்று பரவல் அதிகரித்து வருகிறது. இதில், மகாராஷ்டிர மாநிலத்தில் ஒருநாள் கொரோனா பாதிப்பு 9 ஆயிரத்தை நெருங்கி உள்ளது. இரண்டாவதாக கேரளா மாநிலத்தில் நோய் பரவல் தீவிரம் அதிகரித்து உள்ளது.

இதேபோல் தலைநகர் டெல்லியிலும் நோய் பரவல் தீவிரமாக அதிகரித்து வருகிறது. மேலும் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு கொரோனா நோய்த்தொற்று பரவல் உறுதியாகி உள்ளது. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை இரவு 10 மணி முதல் திங்கள்கிழமை காலை 5 மணி வரை முழு ஊரடங்கு பிறப்பித்து டெல்லி மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இருப்பினும் அத்தியாவசிய சேவைகள் மற்றும் அத்தியாவசிய கடைகளுக்கு மட்டும் விலக்கு அளிப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது. மேலும், தனியார் நிறுவனங்கள் 50 சதவீத பணியாளர்களுடன் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்படுவதாகவும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே கொரோனா மூன்றாவது அலைக்கு முழு ஊரடங்கை பிறப்பித்துள்ளது டெல்லி அரசு தான் என்பது குறிப்பிடத்தக்கது.



# மோடி பேரணியில் கருப்புக் கொடி காட்டிய காங்கிரஸ் பெண் தலைவர் மீது துப்பாக்கிசூடு

உத்தரப்பிரதேச மாநிலம் சுல்தான்பூரில் பிரதமர் நரேந்திர மோடியின் பேரணியின் போது கருப்புக் கொடி காட்டிய காங்கிரஸ் தலைவர் ரீட்டா யாதவ் மீது அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள்.

லக்னோ - வாரணாசி நெடுஞ்சாலையில் ரீட்டா யாதவின் கார் ஓட்டுநரை துப்பாக்கி முனையில் நிறுத்தி, அவர்மீது 3 நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக போலீசார் தெரிவித்தனர். சுல்தான்பூரில் உள்ள லாம்ஹீவா காவல் நிலையத்தில் அடையாளம் தெரியாத அந்த 3 நபர்கள் மீது எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இது தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

ரீட்டா யாதவின் காலில் சுடப்பட்டு, அவர் அபாய கட்டத்தை தாண்டிவிட்டதாகவும், தொடர்ந்து அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த மாதம் சமாஜ்வாடி கட்சியில் இருந்து விலகி காங்கிரஸில் இணைந்த ரீட்டா யாதவ், சுல்தான்பூரில் நவம்பர் 16 அன்று பிரதமர் நரேந்திர மோடியின் பேரணியில் கருப்புக் கொடி காட்டியதற்காக சமீபத்தில் செய்திகளில் இடம்பிடித்தார்.

# இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கான ஆவணத்தில் தமிழ்க் கட்சிகள் ஒப்பம் — மலையக, முஸ்லிம் கட்சிகள் இல்லை!



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் ஒப்படைப்பதற்காக தமிழ் பேசும் தரப்புக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆவணம் ஒன்றில் வடக்கு, கிழக்கு தமிழர்களின் கட்சிகள் இன்று ஒப்பமிட்டன.

கடந்த 21ஆம் திகதி இறுதி செய்யப்பட்ட ஆவணத்தில் சம்பந்தன் உட்பட பல தலைவர்களும் இன்று ஒப்பமிட்டனர். அது விரைவில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஊடாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிவைக்கப்பட்டவுள்ளது.

அந்த ஆவணத்தில் இரா.சம்பந்தன் (தலைவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), சி.வி.விக்னேஸ்வரன் (தலைவர் - தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி), சுரேஷ் பிரேமச்சந்திரன் (தலைவர் - ஈ.பி.ஆர்.எல்.எப்.), என்.ஸ்ரீகாந்தா (தலைவர் - தமிழ்த் தேசியக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (தலைவர் - ரெலோ), த.சித்தார்த்தன் (தலைவர் - புளொட்) ஆகியோர் இன்று ஒப்பமிட்டனர். மாவை சேனாதிராஜா (தலைவர் - இலங்கைத் தமிழரசுக் கட்சி) எந்த நேரத்திலும் அந்த ஆவணத்தில் ஒப்பமிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனை அவரது இல்லத்தில் சந்தித்தார். அவரது தரப்பினதும், முஸ்லிம்கள் தரப்பினதும் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அவர்களின் பங்களிப்பு இல்லாமலேயே பொது ஆவணத்தை பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பும் முடிவை இந்தச் சந்திப்பின்போது மனோ கணேசனுடன் நேரிலும், ரவூப் ஹக்கீமுடன் தொலைபேசியிலும் பேசி சம்பந்தன் எடுத்தார்.

கடந்த 21ஆம் திகதி கொழும்பிலுள்ள குளோபல் டவர் ஹோட்டலில் நடைபெற்ற தமிழர் தரப்புக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்ட கடிதமே இப்போது தமிழ்க் கட்சிகளின் தலைவர்களால் ஒப்பமிடப்பட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படுகின்றது.

சம்பந்தன் தலைமையிலான தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்தியத் தூதுவரைச் சந்தித்து இந்தக் கடிதத்தை அவர் மூலம் இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைப்பர் எனத் தெரிகின்றது.


பனிப்பொழிவு துவங்கும்போது நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன.




1. **பனிப்பொழிவு துவங்கும்போது, தெருக்கள் சாலைகளில் வாகனங்களை நிறுத்துவது தடை செய்யப்படுகிறது.** அனைத்து கார்களையும் சாலையைவிட்டு நகர்த்தி வைக்கவும், இதனால் பனி வாரி அகற்றும் இயந்திரங்கள் தங்கள் பணியைச் செய்ய இயலும்.
2. **பக்க வாட்டு நடைபாதைகளில் இருக்கும் பனித்துகள் மற்றும் பனிக்கட்டியை அகற்றவும்** பனிப்பொழிவுக்குப் பின்னர் அடுத்த நாள் காலையில் உங்கள் பக்கவாட்டு நடைபாதைகளில் பனியை வாரிவிடவும்.
3. ப்ராம்ப்ட்டன் ப்ளோ ட்ராக்கர் எனும் ஆன்லைன் செயலி அல்லது 311 செயலி மூலம் உங்கள் அண்டை அயலில் **பனி அகற்றும் பணியின் முன்னேற்றம் பற்றிய தடம் அறியவும்.**
4. **பனி அகற்றும் சேவையானது சாலைகளின் வகைப்படுத்தலின் அடிப்படையில் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.** அனைத்து சாலைகளிலும் 24 மணி நேரத்திற்குள்ளாக பனி அகற்றப்படும்.
5. **பிரச்சனை ஏதும் உள்ளதா?** அதைப் பற்றி தெரிவிக்க, பனிப்பொழிவு முடிந்தபின்னர் தயவு செய்து 24 மணி நேரம் காத்திருக்கவும்.

மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: **brampton.ca/snow**

311 **brampton.ca**/snow BRAMPTON


# தீபச்செல்வனின் "பயங்கரவாதி" நாவல் சென்னையில் வெளியானது



ஈழத்துக் கவிஞரும் எழுத்தாளருமான தீபச்செல்வனின் பயங்கரவாதி என்ற புதிய நாவல் வெளியாகியுள்ளது. சென்னை புத்தக கண்காட்சியை முன்னிட்டு வெளியான பயங்கரவாதி நாவலை டிஸ்கவரி புக்பலஸின் பதிப்பாளர் வேடியப்பன் வெளியிட நடிகரும் இயக்குனருமான கவிதா பாரதி பெற்றுக் கொண்டார்.

நடுகல் நாவல் வாயிலாக பெரும் கவனத்தை பெற்றுள்ள தீபச்செல்வன் புதிய நாவலான பயங்கரவாதியை வெளியிடவுள்ளதாக கடந்த ஆண்டு வெளியிட்ட அறிவிப்பும் வாசகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை தோற்றுவித்திருந்தது.

இந்த நிலையில் விரைவில் நாவல் வெளியீட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக கூறியுள்ள நாவல் ஆசிரியர் தீபச்செல்வன், இலங்கையில் இந்த நாவலை பெற்றுக்கொள்ளுவதற்கான ஏற்பாடுகளும் இடம்பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவின் ஒன்றாரியோ அரசாங்கம் அறிவித்துள்ள கட்டுப்பாடுகள் தொடர்பான விபரங்கள்



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் ஒமிக்ரான் நோய்த் தொற்று பரவலை கட்டுப்படுத்த புதிய கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார். ஒமிக்ரான் மாறுபாட்டால் எதிர்வரும் நாட்களில் அல்லது வாரங்களில் சுனாமி போல புதிய பாதிப்புகள் அதிகரிக்கும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்ததை தொடர்ந்து, ஒன்றாரியோ அரசாங்கம் புதிய கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

புதன்கிழமை (5) தொடக்கம் அரசாங்கம் நிதியளிக்கும் மற்றும் தனியா-ர் பாடசாலைகளில் இணையவழி வகுப்புகள் ஆரம்பமாகும் என ஒன்றாரியோ அரசாங்கம் அறிவித்துள்ளது. குறைந்தபட்சம் ஜனவரி 17 வரை இணையவழி வகுப்புகள் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வளாகங்களில் 50 சதவீத வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே அனுமதி. உட்புறங்களில் நடக்கும் திருமணங்கள், இறுதிச்சடங்குகள் மற்றும் மத சேவைகள், சடங்குகள் மற்றும் விழாக்களில் 50 சதவீத பேருக்கு மட்டுமே அனு-மதி.

வெளிப்புறம் நடக்கும் நிகழ்வுகளில் 2 மீட்டர் சமூக இடைவெளியை கடைபிடிக்கும் அளவிற்கு மக்கள் அனுமதிக்கப்படுவார்கள். உட்புறத்தில் அமர்ந்து உணவருந்தும் வசதிக்கொண்ட உணவகங்கள் மற்றும் குடிவகைகள் அருந்தும் நிலையங்கள் ஆகி-யன மூடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உட்புற கச்சேரி அரங்குகள், திரையரங்குகள் மற்றும் சினிமாக்கள் மூடப்படும் மற்றும் ஜிம்கள் உட்பட உட்புற விளையாட்டு, பொழுதுபோக்கு உடற்பயிற்சி மையங்களும் மூடப்படும் என ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் தேசிய ஊடகங்களுக்கும் பல் கலாச்சார ஊடகங்களுக்கும் அறிவித்துள்ளார். வர்த்தக நிறுவனங்களும் முடிந்தவரை பணியாளர்களை வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதிக்க வேண்டும் என ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் தேசிய ஊடகங்களுக்கும் பல் கலாச்சார ஊடகங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த கட்டுப்பாடுகள் குறைந்தபட்சம் 21 நாட்கள் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**(By- Arjune)**

# ஒன்றாரியோ மாகாணத்தில் கடந்த வருடத்தைப் போன்று வர்த்தக நிறுவனங்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்படுமா?



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் நேற்று தொடக்கம் மாகாண அரசாங்கத்தால் அறிவிக்கப்பெற்ற தொற்றுநோய் காரணமான வர்த்தக மையங்கள் மற்றும் பாடசாலைகள் மூடல் காரண-மாக பாதிக்கப்படவுள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது போன்று நிதி உதவிதகள் மற்றும் சலுகைகள் ஆகிய உதவிகளை ஒன்றாறியோ அரசாங்கம் பரிசீலித்து வருகிறது என்றும் ஆனால் அவசர உதவி மற்றும் எதிர்காலத்திற்கான திட்டம் விரைவில் அறிவிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றும் தொழில்துறை வழக்கறிஞர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் கடந்த 3ம் திகதி திங்களன்று ஓமிக்ரான் நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து மற்றொரு சுற்று பொது சுகாதார நடவடிக்கைகளையும் மூடல் நடவடிக்கைகளையும் அறிவித்தார், இதில் 21 நாள் உட்புறத்தில் உணவு உட்கொள்ளுதற்கு தடை, மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள், திரையரங்குகள் மற்றும் பிற இடங்களை மூடுதல் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு சேவைகளுக்கான நாட்களை அல்லது மணித்தியாலங்களைக் குறைத்தல் ஆகி-யன அடங்குகின்றன.

புதிய கட்டுப்பாடுகளுடன், கடந்த மாதம் அறிவித்த ஆதன வரி மற்றும் எரிசக்தி செலவு தள்ளுபடி திட்டத்திற்கான தகுதியானவமர்களை தெரிவு செய்வதிலும் சிரமங்கள் காணப்படுவதாகவும் மாகாண அரசின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் ஒன்றாரியோ மாகாண முதல்வரால் நேற்று விடுக்கப்பட்ட அறிவிப்பால் பாதிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களுக்கான உதவிகள் அல்லது சலுகைகள் அல்லது அரச மானியங்களுக்கான சாதகமான வாய்ப்புக்களை உருவாக்குவது உட்பட ஒன்றாரியோ மாகாணத்தில் இயங்கிவரும் வர்த்தக நிறுவனங்களுக்கான கூடுதல் நிதி உதவிகளுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்த நாங்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம்" என்று ஒன்றாரியோ மாகாணத்தின் நிதி அமைச்சர் பீட்டர் பெத்லென் அவர்கள் ஊடக மற்றும் செய்தித் தொடர்பாளர் எமிலி ஹோக்வீன் செவ்வாயன்று ஊ்டகங்களின் பிரதிநிதிகளுக்கு தெரிவித்தார்.

இது தொடர்பாக வர்த்தக நிறுவனங்களின் சபையின் பிரதிநிதி ஒருவர் கருத்து தெரிவிக்கையில். "எங்களிடம் உடனடி உதவிகளை வழங்க நிதி வசதிகள் இல்லை என்று மாகாண அரசு தெரிவித்தால் அது வெட்கக்கேடானது" என்று தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஒன்றாரியோ அரசு மாகாணத்திற்குள் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு இரண்டு தடவைகள் 10,000 டாலர்கள் தொடக்கம் 20,000 டாலர்கள் வரை ரொக்கப் பணம் வழங்கியதை ஒப்புக்கொண்ட மாகாணத்தின் நிதி அமைச்சர் மேற்படி நிதி உதவித் திட்டத்தை அரசாங்கம் விரைவில் மீண்டும் திறந்திருக்க வேண்டும் என்றும் ஆனால் கடந்த தடவை ஒன்றாரியோ மாகாணத்தில் கணக்காய்வாளர் நாயகம் தனது அறிக்கையில் மேற்படி நிதி உதவித் திட்டத்தின்படி மாகாண ஆயிரக்கணக்கான எவ்வித தகுதியற்ற வர்த்தக நிறுவனங்களுக்கு தவறுதலாக 210-மில்லியன் டாலர்கள் வழங்கப்பட்டது என்று தெரிவித்ததையும் நிதி அமைச்சர் நினைவூட்டினார்.

**- கணேஸ்**

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா




கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843



எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

உலக செய்திகள்
World News

# அமெரிக்காவில் சுனாமியாக வீசும் கொரோனா; ஒரே நாளில் 10 லட்சம் பேர் பாதிப்பு



அமெரிக்காவில் சுனாமியாக வீசும் கொரோனர் ஒரே நாளில் 10 லட்சம் பேர் பாதிப்பு.

கொரோனா தொற்று ஏற்பட்டது முதல் இதுவரை இல்லாத வகையில் அமெரிக்காவை சுனாமியாக தாக்கியுள்ளது. அங்கு முதன்முறையாக கடந்த 24 மணிநேரத்தில் 10 லட்சம் பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒமைக்ரான் பரவல் வேகம்

கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து மெல்ல மெல்ல அதிகரித்து வந்த கொரோனா தொற்று, ஒமைக்ரான் கண்டறியப்பட்ட பின், பரவலில் வேகமெடுத்துள்ளது. தென் ஆப்பிரிக்காவிலிருந்து கடந்த மாதம் முதன்முதலில் அறிவிக்கப்பட்ட ஒமைக்ரான் கொரோனா வைரஸ் மாறுபாடு உலக அளவில் ஆயிரக்கணக்கான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக பிரிட்டன், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் ஒமைக்ரான் பரவல் வேகம் அதிகரித்துள்ளது.

ஆனால், தென் ஆப்பிரிக்காவில் கொரோனாவால் புதிதாக பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை கடந்த சில நாட்களாக குறைந்து வருகிறது. அதேபோல பிரிட்டன், டென்மார்க்கில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

ஆனால் அமெரிக்காவில் கொரோனா தொற்று கடந்த சில நாட்களாக மிக அதிகமாக உயர்ந்து வருகிறது. இதனால் உலக அளவில் கடந்த வாரம் கொரோனா தொற்று 11 சதவீதத்துக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

புதிய உச்சம்

தினசரி பாதிப்பில் புதிய உச்சமாக, அமெரிக்காவில் கடந்த டிசம்பர் 31-ம் ததி மணி நேரத்தில் 5,72,093 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இது இதற்கு முன்பு இதுவரை இல்லாத பாதிப்பாக இருந்தது.

இதன் பிறகு தொடர்ந்து அங்கு கொரோனா தொற்று புதிய உச்சத்தை எட்டி வருகிறது. 4 நாட்களுக்கு முன்பு 5,90,000 என்ற எண்ணிக்கையில் தொற்று உறுதியானது. இது முந்தைய அதிகபட்ச எண்ணிக்கையை விட அதிகமாகும்.

இந்தநிலையில் அங்கு முதன்முறையாக கடந்த 24 மணிநேரத்தில் 10 லட்சம் பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக தரவுகளின்படி 10,42,000 என்ற எண்ணிக்கையில் தொற்று ஏற்பட்டுள்ளது.

எனினும் அனைத்து மாகாணங்களும் சரியான அறிக்கை அளித்துள்ளனவா என்பதை உடனடியாக உறுதி செய்ய முடியவில்லை எனவும், அதிக எண்ணிக்கையிலான தொற்று பதிவாகியுள்ளதை மட்டும் உறுதி செய்ய முடிவதாகவும் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் தரவுகள் தெரிவிக்கின்றன.

கொரோனா அதிகமான பிறழ்வு மாறுபாடு காரணமாகவே அமெரிக்காவில் இந்த எண்ணிக்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து எந்த நாடும் இதுவரை சந்தித்திராத அளவுக்கு ஒரு பெரிய வித்தியாசத்தில் பாதிப்பு அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் நான்கு நாட்களுக்கு முன்பு சுமார் 5,90,000 என்ற முந்தைய அதிகபட்ச எண்ணிக்கையை விட கிட்டத்தட்ட இரட்டிப்பாகும். இந்த எண்ணிக்கை எந்த நேரத்திலும், வேறு எந்த நாட்டிலும் இதுவரை இல்லாததாகும். இந்தியாவின் டெல்டா பாதிப்பின் போது மே 7, 2021 அன்று 414,000 க்கும் அதிகமான மக்களுக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இது அமெரிக்காவிற்கு வெளியே அதிக எண்ணிக்கையாக இருந்தது.

இதுமட்டுமின்றி அமெரிக்காவில் வெளியிடப்படும் இந்த எண்ணிக்கையைவிட உண்மை எண்ணிக்கை சற்று அதிகமாக இருக்கலாம். பல அமெரிக்கர்கள் தாங்கள் வீட்டிலேயே மேற்கொள்ளும் சோதனைகளை செய்து கொள்கின்றனர். இந்த முடிவுகள் அதிகாரப்பூர்வ அரசு அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படவில்லை. எனவே உண்மையான பாதிப்பு எண்ணிக்கை அரசு வெளியிடும் புள்ளி விவரங்களை விடவும் அதிகமாக இருக்கலாம் எனத் தெரிகிறது.

இட்லி குக்கர் விற்பனைக்கு உண்டு

ஒரே நேரத்தில் 100 இட்லி செய்யக்குடிய இட்லி குக்கர விற்பனைக்கு உண்டு.

$ 200

தொடர்புகளுக்கு: (905) 472-9601



காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும் ஒரு நம்பிக்கையான நிறுவனம்

FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED



Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct 416.918.9771
Business 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table
Life100 INSURANCE & INVESTMENTS INC.
- digi Media -
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
La Capitale | IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life | BMO Insurance
Are you getting Million Dollar advice?

# தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தமிழரின் சுயநிர்ணய உரிமையை மீறுவதாக இருக்க முடியாது

## அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை வலியுறுத்துகின்றது

International Council of Eelam Tamils
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

அண்மையில் அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை யின் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் பின்வரும் விடயங்களை அது வலியுறுத்துகின்றது.

**ஒற்றையாட்சி முறையில் தமிழர்களுக்கு பாதுகாப்பில்லை:**

இலங்கையின் ஒற்றையாட்சி குடியரசு அரசியலமைப்பு, முதலில் 1972 இல் உருவாக்கப்பட்டு 1978 இல் அனைத்து திருத்தங்களுடனும் அமுல்படுத்துப்பட்டது. இந்த அரசியல் அமைப்பானது தமிழ் மக்களின் பங்களிப்பு இல்லாமலேயே இயற்றப்பட்டது. 1947 இல் கொண்டுவரப்பட்ட சோல்பரி அரசியலமைப்பு ஈழத் தமிழர்களின் ஆணையைக் கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இது குறைந்தபட்சப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு விதியைத் (பிரிவு 29) தமிழர்களுக்கு வழங்கியது. மேலும் இந்த அரசியலமைப்பால் வழங்கப்படும் பாதுகாப்புக்கள் மீறப்பட்டால், ஐக்கியராச்சியத்தில் உள்ள கோமறை மன்றத்தில் (Privy Council) மேன் முறையிட்டு உரித்தை தமிழர்களுக்கு வழங்கியிருந்தது. இலங்கைக் குடியரசின் 1972ம் ஆண்டு அரசியலமைப்பு பிரித்தானிய முடி அரசுடனான உறவுகளைத் துண்டித்ததோடு இங்கிலாந்தில் உள்ள கோமறை மன்றத்தில் (Privy Council) தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தவொரு அத்துமீறல்களிற்கும் மேல்முறையீடு செய்யும் தமிழ் மக்களின் உரிமையைப் பறித்தெடுத்தது.

இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்புச் சட்டமானது இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியம் இருப்பதை முறையாக அங்கீகரிக்கத் தவறிவிட்டது. சிங்கள மொழியையும் பௌத்த மதத்தையும் அரசு முதன்மைப்படுத்தியதனூடாக, சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கான அடிப்படையை அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தியது. பல் தேசிய இனங்களின் உண்மையான சமத்துவத்தை உறுதி செய்யாத அரசியலமைப்பாகும். இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியத்தின் இருப்பை சிதைக்கும் நோக்கிலான கொள்கையை முன்னெடுத்து வருகின்றன. தமிழர்களைத் துன்புறுத்துதல், பாகுபாடு காட்டுதல், அரச வன்முறை, அரசால் கட்டவிழ்த்து விடப்படும் குழு வன்முறைகள், இனப்படுகொலைகள், நில அபகரிப்புகள், மறுதலிக்கப்பட்டு வரும் தமிழர் உரிமைகள் என்பன திட்டமிட்டு தொடர்ந்து இடம் பெறுகின்றது. எனவே, தமிழ்த் தேசியத்தை அங்கீகரிக்காத எந்த ஒரு தீர்வுத்திட்டத்தாலும் இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் தமிழ் இன அழிப்பை தடுத்து நிறுத்த முடியாது.

**13வது திருத்தச் சட்டம்:**

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இருந்து பெறப்பட்ட இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்கான தொடக்கப் புள்ளியாகக் கூடக் கருத முடியாது என்பதே நிதர்சனமான உண்மை. 13வது திருத்தம் ஈழத் தமிழர் தேசத்தின் அத்தியாவசிய கூறுகளை சிதைக்கும் மாகாண சபை முறைமையை வழங்குவதோடு இந்த சட்டமூலம் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தை நிரந்தரமாகப் பிரிப்பதோடு அர்த்தமுள்ள சுயாட்சி முறையை முற்றாக இல்லாதொழிக்கும் நோக்கம் கொண்டது. சிக்கல் நிறைந்த பரிமாணங்களைக் கொண்ட தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு எந்த வகையிலும் செம்மையான தீர்வை வழங்காத 13வது சட்டத் திருத்தம் நிரந்தர அரசியல் தீர்வாக என்றுமே அமையாது. சிங்கள பௌத்த பேரினவாதக் கொள்கைகள் தமிழ்த் தேசத்தை அடிபணியச் செய்ய அனுமதிக்கும் அரசியலமைப்பு அம்சங்கள் இன்னமும் இலங்கையின் அரசியலமைப்பில் வேரூன்றியுள்ளன.

பாரம்பரியமாக நாம் வாழ்ந்து வரும் எமது தாய் மண், தனித்துவச் சிறப்புடைய எமது கலாச்சாரம், மகத்துவமானதும் பழமையானதுமான எமது தாய்மொழி, தமிழருக்கே உரித்தான வாழ்க்கை முறை, 2600 வருடங்களுக்கு மேற்பட்ட எமது வரலாறு, இந்தப் பண்புகளால் ஒரு தனித்துவமான தேசிய இனமாக நாம் அமையப் பெற்றிருக்கிறோம். ஒரு அர்த்தமுள்ள தீர்வு என்பது தமிழ் மக்களின் அடிப்படை மற்றும் பிரிக்க முடியாத சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கப்பதாக இருக்கவேண்டும். பொருளாதார விவகாரங்கள், நிதி விவகாரங்கள், நீதித்துறை விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு விவகாரங்கள் உட்பட, தமிழரின் பாரம்பரிய தாயகத்தில் உள்ள அனைத்து நிர்வாக கட்டமைப்புகள் மற்றும் பணியாளர்கள் மீதான கட்டுப்பாட்டை நாமே உறுதிசெய்வதோடு, உள்கட்டமைப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளின் வளர்ச்சி. தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் நிலம் மற்றும் கடல் அனைத்துக்கும் அதிகாரம் இருக்கவேண்டும்.

தமிழ்த் தேசியத்தை அடிப்படையாக ஏற்று, தமிழ் மக்களிடன் ஆணை பெற்று, தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள், 13 ஒரு ஆரம்பப்புள்ளியாகக்கூட இல்லை என்பதை உணர்ந்து, தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய அரசியல் தீர்வை அனைத்துலகத்திடம் முன் வைக்கவேண்டும்.

அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டு வெறுமையாக உள்ள 13ல் மாகாணசபைக்கு கூட எந்த அதிகாரங்களும் இல்லை. அரைகுறையாக கொடுக்கப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கூட நடைமுறைப்படுத்தப்படாத 13ஐப் பெற்று தமிழர்களால் எந்த அரசியல் தீர்வுகளையும் பெறமுடியாது. பறிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அப்பால் மிகுதியாக உள்ள அதிகாரங்கள் மகாகாணசபையில் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் கொடுக்காமல் ஆளுநரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டுக் கூறவேண்டுமானால், ஒரு நகரசபைக்கு உள்ள சுயாதீன அதிகாரங்கள் கூட மாகாண சபைகளுக்கு இல்லை என்பதே உண்மை.

**சர்வதேச சமூகத்தின் பொறுப்பு:**

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வைக் காண்பதில் சர்வதேச சமூகம் தோல்வியடைந்தால் தமிழ் மக்கள் நிரந்தரமாக சகல உரிமைகளையும் இழக்க வைக்கும் திசையில் இலங்கை அரசாங்கத்தைச் செல்ல ஊக்குவிக்கும். இதன் மூலம் உலகளாவிய தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளில் அசாதாரண நிலையை இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஏற்படுத்த வழி வகுக்கும். இந்தோ-பசுபிக் பிராந்திய அரசியலில் இன்றும் தமிழர்கள் ஒரு முக்கிய புள்ளியாக இருப்பதால் சர்வதேசம் இனியாவது நேர்மையாக தமிழருக்கான நிரந்தர அரசியற் தீர்வை ஈட்டித்தர இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும். சீனாவின் ஒரு பட்டி ஒரு வீதி முன்முயற்சி (Belt and Road Initiative) ஐரோப்பிய ஒன்றியத்தின் உலகளாவிய நுழைவாயில் (Global Gateway) போன்ற சர்வதேசத்தின் பொருளாதார முன்னெடுப்புகளில் ஈழத்தமிழரின் பங்கு தவிர்க்க முடியாதது.

**அர்த்தமுள்ள நிரந்தரத் தீர்வு:**

எமது மக்களுக்கு எதிரான பேரினவாத ஒடுக்குமுறை இனவழிப்பாக உருவெடுத்த போது சிங்கள மற்றும் தமிழ்த் தேசிய இனங்கள் மத்தியில் முரண்பாடு முற்றி விரிசல் உண்டானபோது, ஒற்றையாட்சி முறையின் கீழ் ஐக்கியமாக வாழ முடியாது என்ற நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்ட போது, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் வகையில் தமிழர்கள் பிரிந்து செல்லும் கட்டாய சூழலுக்குத் தள்ளப்பட்டோம். தமிழ் மக்கள் கடந்த ஏழு தசாப்தங்களாகத் தொடர்ச்சியாக மாறி மாறி ஆட்சியமைத்த சிங்கள அரசுகளால் மனிதாபிமானமற்ற மகாபாதக அடக்குமுறைகளுக்கு உள்ளாகியுள்ளனர். ஆகவே, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை அங்கீகரித்து இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தும் அர்த்தமுள்ள தீர்வை சர்வதேச சமூகம் வழங்க முடியாவிட்டால், தமிழ்த் தேசம் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது 1976 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு சுதந்திரமான இறையாண்மை கொண்ட மதச்சார்பற்ற அரசை உருவாக்குவதற்கான அமோகமான மக்களாணை சனநாயக ரீதியாக முன்கூட்டியே வழங்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

- அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை -
Email: media.icet@gmail.com

# யாழ்ப்பாணத்தில் படகு கட்டும் தொழிற்சாலை, பயிற்சி நிலையம் என்பவற்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்துவைத்தார்





யாழ். மண்கும்பான் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள படகு கட்டும் தொழிற்சாலை மற்றும் பயிற்சி நிலையம் என்பன கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வியாழக்கிமை (6) அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்பட்டது.

வெளிநாட்டு மற்றும் இலங்கை தனியார் கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ள குறித்த படகு கட்டும் தொழிற்சாலை மூலம் மண்கும்பான் பிரதேசத்தினை சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதுடன் பிரதேசத்தின் வளர்ச்சிக்கான பொருளாதார நன்மைகளையும் உருவாகும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

2009 இற்கு பின்னரான சூழலில் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்திகளை உருவாக்கி, அழிந்த வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்ப வேண்டும் என்ற வேலைத் திட்டத்தின் வெளிப்பாடாக இவ்வாறான தொழிற்பேட்டைகள் எமது பிரதேசங்களில் தற்போது உருவாகி வருவதாக இந்த படகு கட்டும் தொழிற்சாலையை அங்குரார்ப்பனம் செய்து உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



# கடனைத் தீர்க குடிமக்களை அடமானம் வைத்த அரசு

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)**

இராமாயணம் மற்றும் மகாபாரதத்தில் வரும் பாத்திரங்கள், கதைகள் மற்றும் சம்பவங்கள் ஆகியவை பன்னெடுங்காலமாக மக்கள் மனதில் நீடித்து நிற்கின்றன. அப்படியாக படைப்பிலக்கியம் மற்றும் செவிவழிச் செய்திகளாகக் கூறப்படும் போது மிகவும் ருசிகரமாகவும், தனி நபர்கள் மற்றும் சமூகத்தின் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சில சம்பவங்கள் அல்லது கதைகள் நம்புவதற்கு கடினமாக இருந்தாலும் அவை கூறும் செய்தி என்னவோ மனதில் நிலைத்திருக்கும்.

இராமாணயத்தில் இராமர் சிறு வயதில் அரக்கர்களை வென்றதாகவும் பின்னர் இராவணனுடன் போர் புரிந்து அவரை வென்றதாகவும் கூறப்படுபவை, சீதையை கவர்ந்து செல்ல இராவணன் புஷ்பக விமானத்தில் பறந்து வந்தது, வானரப் படைகளுடன் இராமர் இந்தியா இலங்கை பாலம் அமைத்து போருக்குச் சென்றது ஆகியவை நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு அப்படியான விஷயங்கள் எப்படிச் சாத்தியமாயிற்று என்பதை இன்றளவும் சிந்திக்க வைக்கிறது.

உலகின் மிகவும் நீண்ட காவியம் என்று அறியப்படும் மகாபாரதத்தில் முக்கிய கதையோட்டத்துடன் பல கிளைக் கதைகள் மிகவும் ருசிகரமானவை. அந்த காவியத்தில் கூறப்படும் மையநீரோட்டக் கதைகளும் உபகதைகளும் இராமாயணத்தைப் போலவே பல வாழ்க்கைப் பாடங்களைக் கொண்டது. இந்த இரு காவியங்களிலும் பிறன்மனை நோக்கியதும் ஆட்சியில் இருந்தவர்களின் அராஜகமும் பேரழிவை ஏற்படுத்தியது.

அது வெவேறு வடிவங்களில் வந்தது. இரண்டிலும் பிறன்மனை நோக்குதல் மற்றும் அதை கவர்வதற்குச் சூது ஒரு சூழ்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டது. இதைத் திருவள்ளுவர் இரண்டே அடிகளில் மிகவும் அற்புதமாக விளக்கியிருப்பார். அதே போன்று ஒரு அரசன் எப்படிச் செயல்பட வேண்டும் அவனுடைய குணாம்சங்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதையும் வள்ளுவர் விளக்கியுள்ளார்.

அரசாட்சி மற்றும் பிறன்மனை நோக்குதல் குறித்து திருவள்ளுவர் கூறியுள்ளவை எக்காலத்திற்கும் பொருந்தும். அந்தப் பெருந்தகை பொருட்பால், அரசியல்-இறைமாட்சியின் கீழ் 381 ஆவது குறளாகக் கூறியுள்ளதை இந்தக் கட்டுரையுடன் பொருத்திப் பார்ப்பது சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"




பெரியோர்கள் பலர் இந்தக் குறளுக்கு எழுதியுள்ள பொழிப்புரையில், "இந்தக் குறளில் நாட்டை இறையாண்மையுடன் பாதுகாக்கும் பொறுப்பு கொண்ட வீரர்களைக் கொண்ட படை, நல்ல குடிமக்கள், காத்திரமான பொருளாதார அடிப்படைகளை ஏற்படுத்தி (நாட்டில் குறையாத செல்வம், மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவது உட்பட) நாட்டிற்குச் சிறப்பு சேர்ப்பது, நாட்டை ஆளும் அரசனை அனைத்து விஷயங்களிலும் வழிநடத்தி அரசன் நேர்மையாக நன்னடத்தையுடன் பேதமின்றி அனைத்து குடிமக்களின் நலனை மையாக வைத்து செயல்பட்டு நாட்டின் எல்லைகளைப் பாதுகாத்து, இதர நாடுகள் நாட்டை ஆக்கிரமிக்காமல் செய்வதே சிறந்த அறம் அதற்கான முழுப் பொறுப்பு அரசனையே சாரும்" என்று கூறியுள்ளனர்.

மகாபாரதத்தில் யுதிஷ்டிரர் (தருமர்) துரியோதனுடன் அறிந்தும் சூதாடச் சென்றது மிகவும் பேசப்பட்டு விவாதிக்கப்படும் ஒரு சம்பவம் அல்லது கதையாகும். ஒரு அரசனுக்குரிய நிலையிலிருந்து அவர் சிந்திக்காமல் சூதாடச் சென்றது, ஒவ்வொன்றாக பணயம் வைத்து இழந்து பின்னர் உடன்பிறந்த சகோதரர்கள் மற்றும் கட்டிய மனைவி திரௌபதியையும் அவர் சூதாட்டத்தில் இழந்து போது, இழந்த மனைவியை சபைக்கு அழைத்து வருமாறு துரியோதனன் கட்டளையிட அவரை அழைத்துச் செல்வதற்கான வந்தவனிடம் திரௌபதி கேட்ட கேள்வி மிகவும் சிந்திக்கத்தக்கது.

"தன்னை இழந்தபின் என்னை இழந்தாரா அல்லது என்னை இழந்தபின் தன்னை இழந்தாரா"

தருமர் தன்னையே இழந்திருந்தால், அவர் எப்படி திரௌபதியை இழக்க முடியும், அதாவது அவர் தன்னை இழந்தபிறகு-அவரின் ஒரு அங்கமான தன்னை- எப்படி தன்னை பணயம் வைக்க முடியும் என்பதே அவரின் கேள்வி. இதில் ஒரு தத்துவம் உள்ளது அதாவது தனக்கு உரிமையில்லாத ஒருவரை அல்லது ஒரு பொருளை எப்படி ஒருவர் அடமானம் அல்லது பணயம் வைக்க முடியும் என்பதே? இது மிகவும் சரியான மற்றும் பொருத்தமான கேள்வியே.

அன்று திரௌபதி கேட்ட அதே கேள்வியைத்தான் இன்று இலங்கையின் மலையகத்திலுள்ளவர்கள் கேட்கிறார்கள். அதாவது இலங்கை அரசு இரானிடம் வாங்கிய கடனுக்காக மொத்த மலையக சமூகத்தையும் இப்போது இரான் அரசிடம் பணையம் வைத்துள்ளது பெரும் சர்ச்சை மற்றும் மனித உரிமை மீறல் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

இலங்கையில் சிங்களவர், (இலங்கை) தமிழர்கள், முஸ்லிம்கள், இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள், வெத்தா என்றழைக்கப்படும் பழங்குடியினர், பர்கர்கள் என்று பல்லின சமூகத்தினர் இருக்கும் போது தொடர்ச்சியாக இலங்கை அரசு வாங்கிய கடன்களுக்கு மலையகத்தில் வசிக்கும் இந்திய வம்சாவளித் தமிழர்களைப் பணையம் வைத்து அவர்களை அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கொத்தடிமைகளாக ராஜபக்சக்கள் தலைமையிலான இலங்கை அரசு எப்படி அடமானம் வைக்க முடியும் என்பதே கேள்வி.



இரானிடம் இலங்கை அரசு சுமார் 250 மில்லியன் டொலர் அளவுக்கு கச்சா எண்ணெயைப் பெற்றுள்ளது. பல ஆண்டுகளாக வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த முடியாத அரசு இப்போது கடனை அடைக்க மலையக மக்களின் உழைப்பை பணையமாக வைத்துள்ளது.

வாங்கிய கடனுக்காக மாதம் ஒன்றிற்கு ஐந்து மில்லியன் டொலர் அளவுக்கான தேயிலையை இலங்கை இரானுக்கு அனுப்பி கடனை அடைப்பதாக இருநாட்டு அரசுகளும் கடந்த ஆண்டின் இறுதியில் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டன. அவ்வகையில் இரானின் எண்ணெய் கடனைத் தீர்க்க இலங்கைக்கு குறைந்தது 50 மாதங்கள் தேவைப்படும்.

ஒரு அரசு வாங்கிய கடனிற்கு ஒரு சமூகம் மட்டுமே உழைத்து அதை அடைக்க வேண்டும் என்கிற முடிவு ஏற்கெனவே நவகாலனித்துவ அடிமைகளாக இருக்கும் மலையக மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. 251 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமான கடனுக்கு மலையகப் பகுதியில் அன்றாடம் கூலித் தொழிலாளர்களாக எவ்விடமான அடிப்படை வசதிகளுமின்றி நாட்டிலுள்ள அனைத்து தரப்பினராலும் புறந்தள்ளப்பட்டு, லயம் எனப்படும் ஒரு அறையைக் கொண்ட வீடுகளில் அடிமைகளாகப் பிழைப்பதற்கு வேறு வழியின்றி தத்தளித்துக் கொண்டிருக்கும் சுமார் 18 லட்சம் மலையக இந்திய வம்சாவளித் தொழிலார்கள் மட்டும் எப்படிப் பொறுப்பாக முடியும் என்ற கேள்விக்கான அரசின் பதில் என்ன?



திரௌபதி கேட்ட அதி முக்கியமான கேள்வியைப் போன்று, இலங்கை அரசு இரானிடமிருந்து எண்ணெயை கடனாகப் பெற்ற போது அதற்கு ஈடாக தேயிலையை அளித்து கடனைச் செலுத்துவோம் என்று கூறியதா அல்லது 251 மில்லியன் டாலருக்கான பணத்திற்கு அன்றாடம் காய்ச்சிகளாக இருக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பொறுப்பு என்று ஒப்பந்தம் செய்யப்பட்டதா என ஓராயிரம் வினாக்கள் இதிலுள்ளன.

மலையகத்தில் சந்தா அரசியலை முன்னெடுத்து வரும் அரசியல் கட்சிகளும் இதுவரை இந்த விடயத்தில் மௌனமே காத்துள்ளன.

இலங்கையின் வரலாற்றிலேயே வாங்கிய கடனிற்கு ஈடாக மற்றொரு பொருளைப் பண்டமாற்று முறையில் அளிக்கவுள்ளது. இது பண்டமாற்று முறையின் கீழ் வருகிறது என்று ஒரு வாதத்திற்கு வைத்துக் கொண்டால் கூட அதற்கு ஒரு சாரார் மட்டுமே பொறுப்பேற்க வேண்டும் என்பது எவ்வகையிலும் ஏற்க முடியாது.

சீனாவிற்கும் இந்தியாவிற்கும் கொழும்பு துறைமுக கொள்கலன் விரிவாக்கம் மற்றும் அது தொடர்பிலான வர்த்தகத்தைப் பிரித்தளித்த இலங்கை அரசு, அதில் ஒரு பகுதி அபிவிருத்தி மற்றும் வர்த்தகத்தை இரானிடம் அளித்திருக்கலாமே என்பது போன்ற குரல்கள் எழுந்துள்ளன.

இதில் மேலுமொரு கேள்வி எழுந்துள்ளது. மலையக பெருந்தோட்ட உழைப்பாளிகளைச் சுரண்டு மாதம் தோறும் 5 மில்லியன் டாலர் அளவுக்கான தேயிலையை இரானுக்கு ஏற்றுமதி செய்துவிட்டால் அந்நியச் செலாவணியை ஈட்டும் நோக்கில் இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் அளவு குறைந்துவிடும். அதை எப்படி ராஜபக்ச அரசாங்கம் ஈடுசெய்யப் போகிறது?

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு மிகவும் தேவையான அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்கு இந்த பண்டமாற்று ஏற்றுமதி உதவும் என்று அரசு கூறுகிறது. ஆனால் முதலாளிமார் சம்மேளனம் இந்த கருத்துடன் முரண்படுகிறது. பண்டமாற்று முறையில் எண்ணெய் கடனிற்கு தேயிலை எனும் நிலைப்பாடு பொருளாதார நெருக்கடிக்கு மேற்பூச்சாக இருக்குமே தவிர தீர்வாக அமையாது என்று கூறியுள்ளார்.

"சுதந்திரமான சந்தை வர்த்தகத்தில் அரசின் இந்த முடிவு ஏற்றுமதியாளர்களுக்குப் பயன்படாது ஏனென்றால் அந்த பணம் இலங்கை ரூபாயில் அளிக்கப்படும், அது எமக்கு எந்த வகையிலும் பயனுள்ளதாக இருக்காது" என்று முதலாளிமார் சம்மேளனத்தின் பேச்சாளர் கூறுகிறார்.

இலங்கை ஆண்டொன்றுக்கு 340 மில்லியன் கிலோ தேயிலையை உற்பத்தி செய்கிறது. அதில் 265 மில்லியன் கிலோ ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதன் மூலம் நாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் 1.2 பில்லியன் டாலர்கள் வருமானம் கிடைக்கிறது என்றாலும், மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் எந்த வகையிலும் உயரவில்லை. அதுமட்டுமின்றி இந்த ஆண்டு இலங்கை திருப்பியளிக்க வேண்டிய கடன்கள் மிக அதிகளவில் உள்ள நிலையில், நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு 1.6 பில்லியன் டாலர்களாகக் குறைந்துள்ளது.

நாட்டின் தவறான பொருளாதார கொள்கைகள், ஆடம்பரமான செலவுகள், தேவைக்கும் மிகவும் அதிகமான எண்ணிக்கையில் இராணுவம் மற்றும் பாதுகாப்பு படைகள் மற்றும் அவர்களுக்கான செலவினங்கள், பித்தளை, வெற்றிலை, உப்பு, புளி, பருப்பு, உற்பத்தி செய்யப்படாத ரயில் பெட்டிகளைப் பராமரிக்க ஒரு துறை என்று 70க்கும் மேற்பட்ட அமைச்சர்களுக்கான "தண்டச் செலவுகள்" போன்றவற்றை அதிரடியாக குறைத்தால் கணிசமான அளவுக்கு பணத்தை மிச்சப்படுத்தலாம்.

எதிர்பாராத வகையில் காலநிலை மாற்றம் காரணமாகத் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டாலோ, அல்லது பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டால் இரானுக்கு கொடுத்த வாக்குறுதி என்னவாகும் என்பதை அரசு சிந்தித்ததாகத் தெரியவில்லை.

சமூகத்தில் மிகவும் வறிய நிலையிலுள்ள மக்களின் இரத்தம் உறிஞ்சப்பட்டு அவர்களின் வாழ்க்கை சுரண்டப்பட்டால் அதை யாரும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை இலங்கை அரசு உணர்ந்து கொண்டால் அது அவர்களுக்கும் நாட்டிற்கும் நல்லது.

திரௌபதியின் சாபம் ஏற்படுத்திய விளைவுகளை கடன் வாங்கியவர்கள் அறிந்திருந்தால் மோசமான இந்த முன்னெடுப்பைச் செய்திருக்க மாட்டார்கள்.

நாடு வாங்கிய கடனிற்காக ஒரு சமூகம் அடமானம் வைக்கப்படுவதை உலகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

"பலர் வாட வாட சில வாழ வாழ ஒரு போதும் தெய்வம் பொறுத்ததில்லை"

# மூன்றாம் பாலினத்தின் முன்னேற்றம்

**வே. பாலகிருஷ்ணன், இ.கா.ப**
**(மண்டலக் காவல்துறைத் தலைவர், மத்திய மண்டலம், திருச்சி)**



ஒவ்வொரு வருடமும் `Born to win` என்ற திருநங்கைகளுக்கானத் தன்னார்வத் தொண்டு நிறுவனம் நடத்தும் அங்கீகார விழாவில் பங்கெடுக்கும் போது இத்தனைத் திறமை உடையத் திருநங்கைகள் வாழ்வு ஏன் மேம்படவில்லை என்றக் கேள்வி என்னுள் எழுவதுண்டு.

அதற்கு விடைகாணும் முயற்சியே எனது இந்தக் கட்டுரை.

பாலினங்களில் பல்வகை இருந்தாலும் முப்பால் திருக்குறளில் இருப்பது போல் மனிதனில் மூன்று பாலினங்கள் முக்கியமான பிரிவுகளாக கருதப்படுகின்றன. பாலினம் பற்றிய அறிவு, உலகம் முழுவதும் இருந்து வந்தாலும், ஆண், பெண் இருபாலருக்கும் இடையேயான வேறுபாடுகள் மற்றும் அதனை நெறிப்படுத்துதல் பற்றி பேசப்பட்ட அளவிற்கு மற்ற பாலின வேறுபாடுகள், பற்றிப் பேசப்படவில்லை. முக்கியமாக மூன்றாம் பால் பற்றிய விழிப்புணர்வும், அவர்களின் பிரச்சனைகள், தனித்துவம், உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு ஆகியவை சமீப காலங்களில் பேசப்பட்டாலும் இன்னும் போதுமானதாக இல்லை.

சமூக, அரசியல், சட்ட தளங்களில் மூன்றாம் பால் மற்றும் அதிலுள்ள பிரிவுகளைப் பற்றிய விவாதங்களும், கொள்கை விவாதங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இருப்பினும் அவர்களின் சமூக பொருளாதார தேக்க நிலையும், அவர்களின் தனித்துவம் அடிப்படையிலான அங்கீகாரத் தேவையும் இன்னும் தனிப்பட்ட மற்றும் சமூக அளவில் முழுமையாக உணரப்படவில்லை.

அரசியல் ரீதியாக தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கக்கூடிய எண்ணிக்கையில் இல்லாததும், மூன்றாம் பாலினருக்கான பிரதிநிதித்துவம் சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றத்தில் இல்லாமையும் அரசியல் ரீதியாக அவர்களுக்கு ஆதரவையும் அதன் மூலம் வரும் மாற்றத்தையும் பெரிய அளவில் கொண்டு வரவில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் முன்னாள் முதல்வர் திரு. மு.கருணாநிதி அவர்கள் மூன்றாம் பாலினத்திருக்கான வாரியத்தை அமைத்தாலும் அதன் பின் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் அது இன்னும் முழுமையான செயல்பாட்டுக்கு வரவில்லை.

சட்டரீதியில் உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் மூன்றாம் பாலினருக்கான உரிமைகள், வேலைவாய்ப்புப் பற்றி பல்வேறு தீர்ப்புகளில் கூறியுள்ள போதிலும் மாற்றங்கள் மெதுவாக தான், நடந்து வருகின்றன. பொருளாதாரத் தளத்தில் பல்வேறு தனியார் தொண்டு நிறுவனங்கள் மூன்றாம் பாலினருக்கான தொழில் பயிற்சி கல்வி போன்றவற்றை அளித்தாலும் ஒரு சிலரை தவிர மீதி பேர் எளிதாக பணம் அதிகம் கிடைக்கும் பாலியல் தொழிலுக்கு திரும்பி சென்று விடுகின்றனர். அவர்கள் சார்ந்திருக்கும் "ஜமாத்" என்பது அவர்களுடைய சமூக மற்றும் பொருளாதார நிலையை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அதன் கட்டுப்பாடுகளில் இருந்து விலகி வருவது மிக கடினம்.



மூன்றாம் பாலினரின் வாழ்க்கையை பாதிக்கும் முக்கியமான முடிவுகளை ஜமாத்காரர்களே எடுக்கின்றனர். ஆக சமுதாய தளத்தில் மாற்றம், முன்னேற்றம் வராத காரணத்தால் அவர்கள் வாழ்வில் விடிவு காலம் இன்னும் விடியாக் கனவா-கவே உள்ளது.

காவல் துறையினருக்கும் மூன்றாம் பாலினத்தவருக்கும் ஒரு சில நேரங்களில் முரண்பாடுகள் இருந்தாலும் இக்கட்டான சூழல்களில் காவல்துறை அவர்களுக்கு கைகொடுக்கத் தவறுவதில்லை.

2013-ஆம் ஆண்டு அவர்களுடைய சமூக மற்றும் பொருளாதார நிலைகளை ஒருசேர மேம்படுத்தும் வகையில் முதல் கட்டமாக 14 திருநங்கைகளை மதுரை மாவட்டக் காவல்துறையில் ஊர்க்காவல் படையில் நான் சேர்த்தேன். அது காக்கி உடையோடு சேர்ந்து வரும், சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட காவல்துறையின் அதி-காரமும், அந்தஸ்தும் ஒருசேர கிடைக்கப் பெற்றதால் சமூக நிலை உயர்ந்ததோடு பொருளாதாரச் சூழலும் மேம்படுவதற்கு உதவியாக இருந்தது. அதன் பின் உச்சநீதி மன்ற உத்தரவின் அடிப்படையில் காவல் துறையில் காவலர் தேர்வில் அவர்கள் பங்கெடுத்து காவலர்களாகவும், உதவி ஆய்வாளர் களாகவும் தேர்வு பெற்றிருக்கிறார்கள். இது பெரிய புரட்சியை ஏற்படுத்தி வருகிறது.

கோவிட் பெருந்தொற்று காலகட்டத்தில் காவல்துறை, கடமையை தாண்டி பல்வேறு தரப்பட்ட மக்களின் நல்வாழ்வை பேணுதலையும் குறிப்பாக திருநங்கைகள், திருநம்பிகளின் நலனை காக்க உணவு, உடை போன்ற அத்தியாவசிய பொருட்களை தன்னார்வ தொண்டர்களின் மூலமும், தனிப்பட்ட நன்கொடைகள் மூலமும் கொடுத்து கொடிய கொரோன வைரஸ் நோயிலிருந்தும், அதனால் ஏற்பட்ட துயரங்களிலிருந்தும் விடுவிப்பதற்கும் உதவி செய்தது.

சென்னை சூளைமேட்டில் திருநங்கைகள் வாழும் பகுதியான நமச்சிவாயபுரத்தில் காவல்துறை மூன்றாம் பாலினரிடம் நெருங்கிப் பழகி அவர்களின் துயரங்களை அகரம் பவுண்டேஷன் மூலம் துடைத்ததன் விளைவு இன்று அந்தப் பகுதியே சுற்றுப்புற சூழல், மற்றும் மூன்றாம்பாலினத்தவரின் மனநிலையில் மாற்றம் ஆகி-யவை ஏற்பட்டு மற்றப் பகுதிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. காவல் ஆய்வாளர் ஆனந்தின் முயற்சியும், ஈடுபாடும் இந்த மாற்றத்திற்கு அடிப்படையாகத் திகழ்ந்தது.

ஒரு சில மாற்றங்கள் இயற்கையாகவே, இயல்பாகவே நடைபெறக் கூடிய-தாக இருக்கும் ஒரு சில மாற்றங்கள் புரட்சி வெடிப்பதன் மூலமாக ஏற்படும் ஒரு சில மாற்றங்கள் மக்களாட்சியின் தூண்களாகிய பாராளுமன்றம் அல்லது நீதித்துறை அல்லது ஆட்சியாளர்கள் ஆரம்பித்து அதன் மூலம் வருவதாக இருக்கும். மூன்றாம் பாலினத்தவரைப் பொறுத்தவரைக்கும் அவர்களுடைய சுயமரியாதை மற்றும் நலன் காக்க, மாற்றம் அவர்களிடமிருந்தும், ஆட்சியாளர்களிடமிருந்தும், நீதிமன்றங்கள் மூலமாகவும், சமூக மாற்றங்கள் மூலமாகவும் பல கோணங்களில் தொடங்கி இன்று வேகமாக மாறி வருகிறது. இருந்த போதிலும் இன்று அவர்களைப் பற்றி



முழுமையான விழிப்புணர்வு மற்றும் அவர்கள் நலன் காக்கும் எண்ணம் அரசின் அனைத்து நிலையிலும் இன்னும் முழுமையாக ஏற்படவில்லை.

பாலியல் ரீதியாக தொழிலுக்குப் பழகிப்போன மூன்றாம் பாலினத்தவரை அதன் மூலம் கிடைக்கும் பணம் மாற்று வழியில் உழைத்தால் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி அதற்கேற்ற வகையில் வழிவகை செய்தால் அவர்களின் நீண்ட கால நலனுக்கு சிறப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அரசும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் அவர்களுக்கு தொழில் பயிற்சி மற்றும் கல்வி வழங்கி அவர்களின் வாழ்வை சீர்படுத்த எடுக்கும் முயற்சிகள் ஒரு சில மட்டுமே வெற்றி பெற்று இருக்கின்றன. அதனால் எதிர்பார்த்த அளவுக்கு பெரிய முடிவுகள் கிடைக்கவில்லை. தோல்விக்கானக் கரணங்களைக் கண்டறிந்து அவர்களின் நிலை சமூகத்தில் சரிசமமாக மாற உழைக்க வேண்டியக் கடமை நம்மில் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

# மன்னாரில் அமைக்கப்படவுள்ள "மடுமாதா" வைத்தியசாலைக்கு ஆயர் தலைமையில் அடிக்கல்



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் அமைக்கப்படவுள்ள "மடு மாதா" வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு வியாழக்கிழமை (6) காலை 10 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மக்களின் நலனை கருத்தில் கொண்டு சகல வசதிக-ளுடன் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளும் வகையில் அமைக்கப்படவுள்ள குறித்த வைத்தியசாலைக்கான அடிக்கல்லை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை நாட்டி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கில்றோய் பீரிஸ் உள்ளடங்களாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், ஆயரின் செயலாளர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் இணைந்து அடிக்கல்லினை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**



# யுத்தவெற்றியைச் சாப்பிட முடியாது?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

அச்சக உரிமையாளர் ஒருவர் சொன்னார் புது வருஷப் பிறப்புக்கு கலண்டர் அடிப்பதற்கு முடியாமல் இருப்பதாக. ஏனென்றால் கலண்டர் மாத இதழ்களை ஒன்றாகச் சேர்த்துப் இணைப்பதற்கு ஒரு உலோக பட்டி பயன்படுத்தப்படுத்தப்படுகிறது. இந்த உலோக பட்டி வெளிநாட்டில் இருந்து வருகிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடியால் அதன் விலை அதிகரித்து செல்வதோடு அது அரிதான பொருளாக மாறிவிட்டது. எனவே காலண்டர்களை அடிக்க முடியவில்லை என்று அவர் சொன்னார்.

கலண்டருக்கும் தட்டுப்பாடான ஒரு புது வருசம் பிறந்திருக்கிறது. கலண்டருக்கு மட்டுமல்ல பால் தேநீர், சமையல் எரிவாயு உள்ளிட்ட பல பொருட்களையும் சந்தையில் பெறமுடியவில்லை. கர்ப்பிணிகளுக்கு திரிபோஷா இல்லை. ஏனென்றால் திரிபோஷா மாவில் சேர்ப்பதற்கு சோளம் இல்லை. தேநீர்க் கடைக்காரர்களின் சங்கம் இனி கடைகளில் பால் தேநீர் விற்பதில்லை என்று அறிவித்திருக்கிறது. கடைகளில் மட்டுமில்லை வீடுகளிலும் பிளேன் ரீ தான். நாடு முழுவதும் பெருமளவு சாப்பாட்டுக் கடைகள் மூடப்பட்டுள்ளன காரணம் சமையல் எரிவாயு இல்லை. தெருவோர சிறிய சாப்பாட்டுக் கடைகளில் மட்டுமல்லை பெரிய நட்சத்திர அந்தஸ்துடைய உல்லாச விடுதிகளிலும் சில சமயம் பால்ரீ தட்டுப்பாடாக இருக்கிறது. சிறிய அங்கர் பால்மா பெட்டி ஒன்றை வாங்குவதாக இருந்தால் அதோடு சேர்த்து 4 அல்லது 6 அங்கர் யோகட்களையும் வாங்க வேண்டியிருக்கிறது. அங்கர் பால்மா கொம்பனிதான் அவ்வாறு விற்குமாறு தமக்கு கூறியதாக கடை முதலாளிகள் கூறுகிறார்கள். இது ஒரு மோசமான சுரண்டல். இதை கடை முதலாளிகள் செய்கிறார்களா? அல்லது அங்கர் கொம்பனி அவ்வாறு செய்யச் சொன்னதா? தெரியவில்லை. ஆனால் பால் மாவுக்காக எவ்வளவு விலையையும் கொடுக்க ஒரு பகுதி நடுத்தரவர்க்கம் தயாராக காணப்படுகிறது. அதை எல்லாருமாகச் சேர்ந்து சுரண்டுகிறார்கள்.

கொழும்பின் மிகப்பெரிய சுப்பர் மார்க்கெட்களில் ஒன்றாகிய ஆர்பிகோ சுப்பர் மார்க்கெட்டில் விறகுக் கட்டுக்கள் விற்கப்படுகின்றன. ஒரு பொதி 150 ரூபாயிலிருந்து 250 ரூபாய் வரை போகிறது. சுப்பர் மார்க்கெட்களில் விறகை விற்கும் ஒரு காலம். இப்படித்தான் இந்தமுறை புதிய ஆண்டு பிறந்தது. கடந்த திங்கட்கிழமை புத்தாண்டு பிறந்து இரண்டு நாட்களின் பின் அரசாங்கம் முட்டை விலை இரண்டு ரூபாயாலும் இறைச்சிக் கோழியின் விலை 50 ரூபாயாலும் குறைக்கப்படுவதாக அறிவித்தது. ஆனால் கடைகளில் ஏறிய விலை ஏறியதுதான். மூத்த வர்த்தகர் ஒருவர் சொன்னார் இலங்கை போன்ற நாடுகளில் ஏறிய விலை இறங்குவது மிக அரிது என்று. இலங்கை இப்பொழுது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி அசாதாரணமானது. எனவே பொருளாதாரம் ஸ்திரத்தன்மைக்கு வந்ததும் இப்பொழுது ஏறியிருக்கும் விலைகள் இறங்கத்தானே வேண்டும் ?என்று அவருக்குச் சொன்னேன். அவர் சொன்னார் என்னுடைய இதுவரை கால அனுபவத்தின்படி ஏறிய விலைகள் இறங்குவது குறைவு என்று.

அவர் கூறுவது சரியாக இருந்தால் வரப்போகும் மாதங்களில் நிலைமை இன்னும் மோசமாக மாறலாம். “2022ஆம் ஆண்டும் மக்கள் அத்தியாவசிய பொருட்களுக்கு கஷ்டப்படவேண்டிய வருடமாகவே அமையும் நிலையே இருக்கின்றது” என்று கூறியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார.

தெற்காசிய பிராந்தியத்திலேயே அதிக பணவீக்கம் பதிவாகியுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடம் பெற்றுள்ளது. 2021 நவம்பரில் 9.9% ஆக இருந்த நாட்டின் பணவீக்க விகிதம் 2021 டிசம்பரில் 12.1% ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஆனால் நாட்டின் ஜனாதிபதி யுத்தகளத்தில் தான் செய்த சாதனைகளை இப்பொழுதும் நினைவூட்டிக் கொண்டிருக்கிறார். நாட்டின் முதற்பிரஜையாக தன்னைத் தெரிவு செய்வதற்காக பல தியாகங்களை செய்த சிங்களவர்களின் பாதுகாப்பும் அவர்களது பாரம்பரியத்தை பாதுகாப்பதும் தனது தலையாய பொறுப்பு எனத் தான் உறுதியாக நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார். கோட்டை கல்யாணி சாம ஸ்ரீ தர்ம மகா சங்க சபையால் அவருக்கு “ஸ்ரீலங்காதீஸ்வர பத்மவிபூஷன” விருது கடந்த இரண்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டபொழுது ஆற்றிய உரையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றிதான் அவருடைய ஒரே அரசியல் முதலீடு. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியின் பின்னரும் அவர் தன்னுடைய சாதனை என்று பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் யுத்தத்தை வெற்றி கொண்டதையே சிங்கள மக்களுக்கு திரும்பத் திரும்ப நினைவூட்டுகிறார். அதேசமயம் வைரஸ் தொற்றில் இருந்து நாட்டை பாதுகாத்ததையும் அவர் தனது சாதனையாக கூறுகிறார். அதற்கும் அப்பால் அவருடைய கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சி குறித்து அவர் பெருமையோடு சுட்டிக்காட்ட வேறு எதுவும் இல்லை.கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில் ஏற்பட்ட எல்லாச் சறுக்கல்களுக்கு பின்னரும் அவர் தன்னை சிங்கள பௌத்தர்களின் தலைவராகவே காட்டுகிறார்.

ஆனால் அவருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வழங்கிய சிங்கள மக்கள் இப்பொழுது ஆத்திரத்தோடும் விரக்தியோடும் காணப்படுகிறார்கள். அவர்கள் அடுத்த தேர்தலில் அவருக்கு எதிராகவே வாக்களிப்பார்கள் என்று எதிர்க்கட்சிகள் நம்புகின்றன. மூன்றிலிரண்டு பெரும்பான்மை எப்பொழுதோ காலாவதியாகிவிட்டது என்றும் எதுக்கு கட்சிகள் நம்புகின்றன. அண்மை வாரங்களில் தென்னிலங்கையில் உள்ள பிரதேச சபைகளில் நிகழும் பட்ஜெட் வாக்கெடுப்புக்களின் முடிவுகள் அதைத்தான் நிரூபிக்கின்றன. கடந்த மாதம் மாத்தறை மாவட்டத்தில் உள்ள நாட்டின் மிகப்பெரிய பலநோக்கு கூட்டுறவுச் சபைக்கான தேர்தல் நடந்தது. அத்தேர்தல் முடிவுகளும் அதைத்தான் உணர்த்துகின்றன. அதேபோல கடந்த மாதம் நிகழ்ந்த தாதியர் சங்கத்துக்கான தேர்தல் முடிவுகளும் அதைத்தான் உணர்த்துகின்றன.

அமைச்சுக்களின் செயலர்களும் பிரதான அதிகாரிகளும் பதவி விலகுவதும், பதவி மாற்றப்படுவதும் அதைத்தான் உணர்த்துகின்றன. இந்த வாரம் ராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த பதவி நீக்கப்பட்டார். தெல்கந்த சந்தையில் வைத்து அரசாங்கத்தை பகிரங்கமாக விமர்சித்த காரணத்தால் அவர் பதவியில் இருந்து தூக்கப்பட்டிருக்கிறார். கடந்த ஞாயிற்றுக்கிழமை சுசில் பிரேம்ஜயந்த தெல்கந்த சந்தைக்குப் போயிருக்கிறார். அங்கே பச்சை மிளகாய் ஒரு கிலோ 1200 ரூபாய்க்கு விற்கப்படுவதை சுட்டிக்காட்டி ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் கேள்வி கேட்டிருக்கிறார். “விவசாயத்துறை அமைச்சு தோல்வி கண்டுவிட்டது. விவசாயத்துறை தொடர்பில் அரசின் கொள்கை முழுத் தோல்வி கண்டு விட்டது” என்று அவர் கூறியுள்ளார். அதனால்தான் பதவியில் இருந்து தூக்கப்பட்டிருக்கிறார். அவர் மூன்று ஜனாதிபதிகளின் கீழ் சுமார்18 ஆண்டுகளாக சிரேஷ்ட அமைச்சுப் பதவிகளை வகித்தவர். “அரசுத் தலைமையின் இந்த அணுகுமுறையானது, 2022இல் நடக்கப்போகிற விபரீதங்களை இந்த அரசு சரியாகக் கையாளப் போவதில்லை என்ற சமிக்ஞையைத்தான் சுட்டுகிறது” என்று தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன.

ஆளும் தரப்புக்குள்ளேயே அமைச்சர்களும் உயர்மட்டத் தலைவர்களும் பங்காளி கட்சிகளும் கடுமையான அதிருப்தியோடு இருக்கிறார்கள். சுசில் பிரேம் ஜயந்த ஒரு அரை அமைச்சர்தான். ஆனால் முழு அமைச்சர்களாக உள்ள வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போன்றோர் அரசாங்கத்துக்கு உள்ளே இருந்தபடியே அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து வருகிறார்கள். அரசாங்கம் தனக்கு உள்ளேயும், வெளியேயும் எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதற்காக எதிர்க்கட்சிகள் நம்புவது போல ராஜபக்சக்களை இலகுவாக தோற்கடிக்க முடியாது.

முதலாவது காரணம் எதிர்க்கட்சிகள் ஒரு பலமான தலைமையின் கீழ் ஒன்று திரண்ட சக்தியாக இன்றுவரை மேலெழவில்லை. இரண்டாவது காரணம் ராஜபக்சக்கள் இனிமேலும் யுத்த வெற்றி வாதத்திற்கு தலைமை தாங்க முடியும். யுத்த வெற்றி வாதம் எனப்படுவது 2009க்கு பின்னரான சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் புதிய வடிவம். அதை அவர்கள் ஈஸ்டர் குண்டுவெடிப்பின் மூலம் அடுத்தடுத்த கட்டத்துக்கு அப்டேட் செய்து கொண்டார்கள். எனவே தென்னிலங்கை அரசியலில் தமிழின எதிர்ப்பும் முஸ்லிம் எதிர்ப்பும் தொடர்ந்தும் தீர்மானிக்கும் சக்திகளாக உள்ளவரை ராஜபக்சக்கள் யுத்த வெற்றி வாதத்திற்கு தலைமை தாங்கலாம்.

யுத்த வெற்றி வாதத்தை எதிர்கொள்வதற்கு எதிர்க்கட்சிகளுக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது என்னவெனில் மூவினத் தன்மை பொருந்திய ஒரு கூட்டுக்குப் போவது. மூன்று இனத்தவர்களின் வாக்குகளையும் திரட்டும் போதுதான் யுத்த வெற்றி வாதத்தை அதாவது 2009க்கு பின்னரான சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தை தோற்கடிக்கலாம் என்பது 2015ஆம் ஆண்டு நிரூபிக்கப்பட்டது. அவ்வாறு மூன்று இனத்தவர்களின் வாக்குகளையும் கவர்வதற்கு ஒரு ஜனவசியம் மிக்க தலைவர் வேண்டும். ஒப்பீட்டளவில் ரணில் விக்கிரமசிங்க அப்பொழுது அப்படியொரு தலைவராக தோன்றினார். இப்பொழுது அப்படி ஒரு தலைவரை கண்டுபிடிக்க எதிர்க்கட்சிகளால் முடியவில்லை. எதிர்க்கட்சிகள் அப்படி ஒரு தலைவரைக் கட்டியெழுப்பாதவரை ராஜபக்சக்கள் நிம்மதியாக இருப்பார்கள். ஏழைச் சிங்கள மக்கள் யுத்த வெற்றியைச் சாப்பிட முடியாது என்று உணரும் ஒருநாள் வரும்வரையிலும் அவர்கள் நிம்மதியாக இருப்பார்கள்.

### வீணாவின் கவிக்கணை

கனவுகள் நீ காண்பதற்கு,
வாழ்வில் நீயும் ஜெயிப்பதற்கு,
இன்று நீ கடினமாக உழைத்துவிட்டால்,
விடா முயற்சியும் செய்துவிட்டால்,
நிகழ்வில் நீயும் ஆனந்தமாய்,
உற்றார் உறவினர் வாழ்த்திடவே,
பெருமிதத்தோடு வாழ்ந்திடுவாய்!

# புலம்பெயர் தமிழர்களை இலக்கு வைத்தா 'பாதுகாப்பு தடை நீக்கல் சான்றிதழ்'?

**- பார்த்தீபன்**

வெளிநாட்டவர்களை திருமணம் செய்ய எதிர்பார்க்கும் இலங்கையர்கள் ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சிலிருந்து "பாதுகாப்பு தடை நீக்கல் சான்றிதழ்" தேவை என்ற அறிவிப்பு கடந்த டிசம்பர் 27ஆம் திகதி வெளியாகியுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கு அமைய இச் சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டவர்கள் ஸ்ரீலங்காவில் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுவதை தடுக்கவே ஜனவரி 01 முதல் இச் சட்டம் நடைமுறைக்கு வருவதாக ஸ்ரீலங்காவின் பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். பொருளாதார நெருக்கடியால் ஸ்ரீலங்கா அதளபாளத்தை நோக்கி தள்ளப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு தலைவிரித்தாடுகிறது. பசியினால் மடிய வேண்டிய நிலை ஏற்படுமா என்று மக்கள் அச்சத்தில் உள்ளனர். இப்படியொரு நெருக்கடி நிலையிலும் ஏன் "பாதுகாப்பு தடை நீக்கல் சான்றிதழ்" என்ற இராணுவ நடவடிக்கைக்கான அறிவிப்பு?

ஈழத்தில் இனவிடுதலைக்காக போராடிய மக்களை மாபெரும் இனப்படுகொலையை நிகழ்த்தி ஒடுக்கியது இலங்கை அரசு. மக்களின் சுதந்திரத்திற்காகவும் தனித் தேசத்திற்காகவும் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மௌனிக்கச் செய்து முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நிகழ்த்தியது சிங்கள தேசம். அதற்குப் பிறகு முழுமையான சிங்கள இராணுவ அடக்குமுறை ஆட்சியை மேற்கொள்ளும் ஸ்ரீலங்கா அரசு, ஈழத் தமிழ் மக்கள் தமது உரிமைகள் குறித்தோ, தம்மீதான ஒடுக்குமுறைகளைக் குறித்தோ குரல் எழுப்ப முடியாத சர்வாதிகார இனவொடுக்குமுறை ஆட்சியில் வடக்கு கிழக்கு தமிழர் தேசத்தை அமுங்க வைத்திருக்கிறது.

எனினும் மிகத் தெளிவாக வெளித்தெரியும் வகையில் ஈழம் எரியும் பிரச்சினைகளை இன்னும் சுமந்தபடியிருக்கிறது. நிலத்திற்கான போராட்டமும், தொன்மங்களை சிதைப்பதற்கு எதிரான போராட்டமும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலைக்கான போராட்டமும், இனப்படுகொலைக்கான நீதிக்கான போராட்டமும் தமிழ் சனங்களில் நெஞ்சில் தீயாய் எரிகின்றது. சாத்வீக வெகுசனப் போராட்டங்களை பெருமெடுப்பில் மேற்கொள்ள முடியாத நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பும் அச்சுறுத்தலும் ஈழ மண்ணை மிரட்டிக் கொண்டிருக்கிறது. தாம் எப்படியான அடக்குமுறையில் வாழ்கிறோம் என்பதைக்கூட சொல்ல முடியாத பேரினவாத அடக்குமுறை நிலவுகிறது.

இந்த நிலையில் ஈழ நிலத்திற்காக குரல் கொடுக்கும் உன்னத பணியை புலம்பெயர் தேசம் மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் ஈழத்தில் நடந்த இனப்படுகொலைக்கு பன்னாட்டு விசாரணை தேவை என்ற ஈழ மக்களின் குரலை சர்வதேச அரங்கில் அதிர்வுடன் கொண்டு சேர்க்கும் பணியில் புலம்பெயர் சமூகம் உழைக்கிறது. இனவழிப்புப் போரினால் புலம்பெயர்க்கப்பட்ட இம் மக்களே அதற்கு எதிராக சர்வதேச அரங்கில் குரல் எழுப்ப வேண்டிய தார்மீகப் பணியை ஆற்றுகின்றனர். ஈழத்தில் மக்கள் எத்தகைய அடக்குமுறை சூழலில் வாழ்கிறார்கள் என்றும் உண்மையில் இன்று ஈழ மக்கள் எதிர்பார்க்கும் தீர்வுதான் என்ன வென்றும் புலம்பெயர் மக்கள் குரல் கொடுக்கின்றனர். ஈழத்தின் ஆத்மாகவும் மனசாட்சியாகவும் குரலாகவும் புலம்பெயர் தேச மக்களின் முகங்களும் குரல்களும் ஒலிக்கின்றன.

இந்த நிலையில் புலம்பெயர் தேசத்தின் குரலை முறியடிக்க ஸ்ரீலங்கா அரசு பல்வேறு சூழ்ச்சிகளை கையாண்டு வருகின்றது. அதற்காக பல்வேறு அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகின்றது. சில ஆண்டுகளின் முன்னர் பிரித்தானியாவில் உள்ள ஸ்ரீலங்கா தூதரகத்தில் அதிகாரியாக கடமையாற்றும் சிங்கள இராணுவத்தின் பிரிக்கேடியர் பிரியங்க பெர்னான்டொ "தமிழர்களின் கழுத்தறுப்பேன்" என்று உடல்மொழியில் பகிரங்கமாகக் கொலை மிரட்டல் விடுக்கும் வகையில் செயற்பட்டமை சர்வதேச அளவில் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. ஸ்ரீலங்கா இராணுவத்தின் நோக்கையும் போக்கையும் குறித்த செயலின் வாயிலாக பிரியங்க பெர்னாண்டோ வெளிப்படுத்தியிருந்தார்.

அத்துடன் தற்போதைய ஆட்சியாளர்கள் கடந்த 2014ஆம் ஆண்டில் புலம்பெயர் தமிழர்கள் பல நூற்றுக் கணக்கானவர்களுக்கு நாட்டிற்குள் நுழையத் தடைவிதித்திருந்தது. வர்த்தமானி அறிவித்தல் ஊடாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கையில் ஈழத் தீவின் சொந்த மக்களுக்கே உள்நுழைவதற்கான தடை அரச சட்டமாக விதிக்கப்பட்ட கொடுமை ஸ்ரீலங்காவில் நடந்தது. புலம்பெயர் தேசத்தில் தமிழர்களின் உரிமை மற்றும் அவர்கள்மீதான மீறல்களை சுட்டிக்காட்டி செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மீதே இத்தகைய தடையை ஸ்ரீலங்கா அரசு விடுத்திருந்தது.

அத்துடன் புலம்பெயர் தேசத்தில் உள்ள அமைப்புக்களையும் ஈழப் போராட்டச் செயற்பாட்டாளர்களையும் குழப்பும் வகையில் பல்வேறு அரசியல் இராணுவ நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டு வருகின்றது. இதற்காக எழுத்தாளர்கள், கலைஞர்கள் என்ற போர்வையில் சிலர் களமிறக்கப்பட்டு தமிழ் தேசத்தையும் விடுதலைப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தும் வகையில் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் முயற்சிகளும் இடம்பெறுகின்றன. அத்துடன் இத்தகைய நபர்களை வைத்து இனவழிப்புக்கான நீதிக்காக போராடுபவர்களை பின்னால் இழுக்கும் சூழ்ச்சிகளையும் புலம்பெயர் தேசம் கண்டு முறித்து வருகிறது.


ஈழத்தில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி வைத்துக் கொண்டு இருந்த போதும் புலம்பெயர் தேசம் உரத்துக் குரல் கொடுப்பது சிங்கள தேசத்திற்குச் சிக்கலாக இருக்கின்றது. இதனால் புலத்தை அடக்க எல்லை கடந்த இராணுவ நடவடிக்கையை அல்லது எல்லை கடந்த இனவழிப்பை மேற்கொள்ள ஸ்ரீலங்கா முனைகின்றது. அத்துடன் ஈழத்தில் இனவிகிதாரத்தை வீழச்சியுறச் செய்வதில் வெற்றி காணப்பட்டுள்ள நிலையில் புலம்பெயர் தேச தமிழ் இளைஞர்கள் யுவதிகள் தாயக உறவுகளை திருமணம் செய்யத் தடுப்பதன் வாயிலாக புலம்பெயர் தேசத்திலும் இனவிகிதாசாரத்தை வீழச்சியுறச் செய்யலாம் என ஸ்ரீலங்கா திட்டமிடுகிறது. அதற்காகவே "பாதுகாப்பு தடை நீக்கல் சான்றிதழ்" எனும் ஒப்பிரேஷன் டயஸ்போரா.

ஈழத்தில் இனவழிப்புப் போரினால் தமிழர்கள் சிதறிப் பரந்துள்ள போதும் இன்றைக்கு புலம்பெயர் தேச மக்கள் இலங்கைத் தீவின் பொருளாதாரத்திற்குப் பெரும் பங்கை அளிக்கின்றனர். அங்கிருந்து தாயக உறவுகளுக்காக அனுப்பப்படும் நிதி இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பு எனலாம். ஈழத் தமிழர்களின் உரிமையை வழங்கி அவர்களின் தனித்தேசப் போராட்டத்தை அங்கீகரித்திருந்தால் இன்றைக்கு ஸ்ரீலங்காவின் பொருளாதார நெருக்கடிக்கு தமிழீழ தேசம் அள்ளியள்ளி நிதிக்கொடையை வழங்கியிருக்கும். ஆனால் ஸ்ரீலங்கா அரசோ ஈழத் தமிழ் மக்களை மாத்திரமின்றி ஈழ மண்ணில் நிலைத்திருந்த தமிழீழப் பொருளாதார வளத்தையும் பூச்சியத்திற்குச் செல்லும் அளவுக்கு அழித்திருந்தது.

ஈழத் தமிழ் மக்கள் இனப்படுகொலையில் இருந்து மீண்டெழ பொருளாதார ரீதியாக புலம்பெயர் தேச மக்கள் பெரும் பங்களிப்பை வழங்கியதுடன் ஈழ இனப்படுகொலைக்கான நீதியை வலியுறுத்துவதில் சர்வதேச அரங்கில் களமாடுகின்ற பணியையும் செய்து வருகின்றனர். இன்றைக்கு புலம்பெயர் நாடுகளில் கணிசமான அளவுக்கு தமிழ் மக்கள் வாழ்ந்து அங்கு அரசியல் மற்றும் நிர்வாகத்தில் செல்வாக்கு செலுத்தும் நிலையில், அவர்களின் எண்ணிக்கையை வீழ்ச்சியடைய வைத்து ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சிதைப்பதுவே சிங்கள அரசின் நோக்கமாகும்.

DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy



DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan

ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

# உலக சாதனை நிகழ்வு

## 31 நாள் 1330 திருக்குறள் முற்றோதல் மார்கழித் திருவிழா 16-12-2021- 15-01-2022 வரை




உலகத் திருக்குறள் மையம் சென்னை அதன் ஒன்பது புலனங்களில் ஒன்றான உலகத் திருக்குறள் பரப்பு மையம், திருக்குறள் முற்றோதல் பயிற்றகம் தஞ்சாவூர் - 5 இணைந்து நடத்தும் 31 நாள் 1330 திருக்குறள் முற்றோதல் மார்கழித் திருவிழா 16-12-2021 - 15-01-2022 வரை நாளாந்தம் நடைபெற்றுவரும் உலகச் சாதனை நிகழ்வு.

மேற்படி நிகழ்வு தஞ்சாவூர் 5. திருக்குறள் கோ.சீ.பிரதிப்பா குமரன் இல்லத்தில் திருவள்ளுவர் சிலை நிறுவும் பணி நடைபெற்று வருகின்றன. தைப்பொங்கலுக்கு மறுநாள் திருவள்ளுவர் தினத்தில் திருவள்ளுவர் சிலை நிலைநிறுத்தப் படவிருக்கின்றது. இதனை ஒட்டி 1330 குறள்களை முற்றோதல் செய்யும் நிகழ்வு இணையவழியில் தினமும் நடைபெறுகின்றது. 1330 திருக்குறள்களையும மனனம் செய்த குழந்தைகள் முற்றோதி வருகின்றனர்.

கடந்த ஜனவரி 5ம் திகதி முடிவுற்ற 21 நாட்களில் 44 குழந்தைகள் பங்குபற்றி சிறப்பாக முற்றோதல் செய்து முடித்துள்ளனர். 32 குழந்தைகள் தஞ்சாவூர் முற்றோதல் பயிற்றகத்தைச் சேர்ந்தவர்கள். மேலும் 6 பேர் பிறமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், மீதி 6 பேரும் பெற்றோராவர்.

1991ம் ஆண்டு திருக்குறள் தூதர் அ.கோபிசிஞ் அவர்களால் தஞ்சாவூரில் ஆரம்பிக்கப் பட்டதே திருக்குறள் முற்றோதல் அமைப்பாகும். அவர் கடந்த 32 வருடங்களாக இந்தப் பணியைச் செய்துவருகின்றார். அவரது இல்லத்தில் நடைபெறும் திருமணம், பிறந்த நாள் விழா மற்றும் மரண சடங்கு உட்பட அனைத்து நிகழ்வுகளும் திருக்குறள் படியே நடைபெறுகின்றன. மற்றும் அவரது மகள் பிரதிப்பா கோபிசிஞ் குமரன் அவர்களும் 1330 குறள்களையும் மனனம் செய்து தமிழ்நாடு அரசாங்கத்தின் விருதும் ரொக்கப்பணமும் பரிசாகப் பெற்றவர்.

மேலும் ஐயா கோபிசிஞ் அவர்களால் பயிற்றுவிக்கப்படும் குழந்தைகள் தமிழ்நாடு அரசாங்கத்தின் தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்படும் திருக்குறள் தேர்வில் பங்கு பற்றி தேர்ச்சி பெற்றுள்ளனர். இதுவரை 32 குழந்தைகள் சான்றிதழும் ரொக்கப் பணமும் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டில் இடம் பெற்ற தேர்வில் மேலும் 10 குழந்தைகள் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். இவர்களுக்குரிய பரிசுத்தொகையை தற்போதைய அரசு ரூபா.25000.00 அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்படி முற்றோதல் முதலாம் நாள் நிகழ்வை குறள் ஞானி, திருக்குறள் தூயர், செம்மொழி விருதாளர், பேராசிரியர், முனைவர் கு.மோகனராசு அவர்கள் தொடக்கவுரையாற்றி ஆரம்பித்து வைத்தார். அவரைத் தொடர்ந்து கலிபோர்னியாவைச் சேர்ந்த டாக்டர் செந்தமிழ்ச் செல்வி முருகேசன், கனடா கணனி பொறியலாளர் கவிஞர் அகணி சுரேஷ், கவிஞர் க.குமரகுரு,
கவிஞர் புஸ்பா கிருஸ்டி கனடா திரு. நெடுஞ்சேரலாதன் திருமதி சாளினி நெடுஞ்சேரலாதன் ஆகியோர் உட்பட பலர் தொடக்கிவைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் எதிர்வரும் திருவள்ளுவர் தினத்தன்று 133 அதிகாரங்களையும் மன னம் பண்ணிய 133 பேர் முற்றோதல் செய்யவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி 31 நாள் முற்றோதல் நிகழ்வை திருக்குறள் தூதர் அ.கோபிசிங் அவர்கள் ஒருங்கினைப்புச் செய்துவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தகவல். குமரகுரு கணபதிப்பிள்ளை.**





# இந்தியாவை இலக்கு வைத்து இலங்கையில் கால் பதிக்கிறதா சீனா?

**- தமிழ் இந்துவில் தீபச்செல்வன்**

ஈழத் தீவு முழுவதும் ஈழத் தமிழர்கள் பரந்து வாழ்ந்தார்கள் என்பதற்கு ஈழத்தின் நாற்புறமும் உள்ள சிவாலயங்கள் சாட்சியாக இருக்கின்றன. ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்கள் எனப்படும் இந்தக் கோயில்கள் பல்லவர் காலத்தில் நாயன்மார்களால் பாடல் பெற்றவை. அவற்றின் வரலாறு கிறிஸ்துவுக்கு முந்தைய தொன்மைக்கும் முந்தையவை. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் ஈழத்தில் வாழ்ந்த இரவணன் என்ற தமிழ் மன்னன், சிவபக்தனாக இருந்திருப்பதும் தொன்மையின் ஆதாரமாகும். இப்படிப்பட்ட தொன்மையைக் கொண்ட ஈழத் தமிழ் மக்கள் இன்றைக்கு தாம் எஞ்சியுள்ள வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தின் வாழ்வுரிமையை, ஆட்சியுரிமையைக் கேட்டு மிகப் பெரும் தியாகங்களின் மத்தியில் போராடினார்கள். அந்தப் போராட்டத்தைப் பயங்கரவாதப் போராட்டம் என்று சொல்லி ஒடுக்கியது இலங்கை அரசு.

ஈழ மண்ணின் சொந்த மக்களை கொன்று அவர்களை புதைத்து தாய்நிலத்தை மயானமாக்கி இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசு இப்போது இலங்கைத் தீவைத் துண்டாடி கூபோட்டு விற்றுக்கொண்டிருக்கிறது. இலங்கையின் தலைநகரம் கொழும்புவில் உள்ள துறைமுக நகரம் சீனாவுக்கு குத்தகைக்கு என்ற பெயரில் தாரை வார்க்கப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக நகரில் நுழைகையில் சீனாவின் மாநிலம் ஒன்றுக்குள் நுழையும் உணர்வைத்தான் தருகிறது. ஆம் இலங்கைக்குள் சீனா ஒரு மாநிலத்தை உருவாக்கியுள்ளது. முழுக்க முழுக்க சீன மொழியிலான அந்த வர்த்தக நகரம் இலங்கையில் சீனா அகலமாகக் கால் ஊன்றி இருப்பதற்கான அடையாளமாகும்.

இலங்கையுடன் சீனா நெருங்குகிறது என்றும் இலங்கையில் பலமாக சீனா காலூன்ற முயல்கிறது என்றெல்லாம் சொன்ன போது இதெல்லாம் இந்தக் காலத்தில் எப்படிச் சாத்தியமாகும் என்றார்கள். இந்தக் காலத்திலும் காலனிய ஆட்சியை எப்படி கொண்டுவர முடியும் என்றும் கேட்டார்கள். இந்தக் காலத்திலும் ஒரு நாடு இன்னொரு நாட்டில் கால்பதித்து ஆக்கிரமுடியுமா என்றார்கள். ஆனால் சீனா அதைச் செய்திருக்கிறது. அது மாத்திரமல்லாமல் தென்னிலங்கையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும் சீனா தன் வசப்படுத்தியிருப்பதாக தெற்கின் செய்திகள் கூறுகின்றன.

அடுத்த கட்டமாக சீனா வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தைக் குறி வைத்திருக்கிறது. அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வந்த சீனத் தூதுவர் குய் சென் ஹாங் அங்கு மூன்றுநாட்கள் தங்கியிருந்துள்ளார். அத்துடன் தமிழர்களின் பண்பாட்டு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குச் சென்று சீனத் தூதுவர் ஆராய்வுகளை மேற்கொண்டிருக்கிறார். ஈழப் பண்பாட்டில் முக்கியத்துவம் பெற்ற நல்லூர் ஆலயத்திற்குச் சென்று அங்கே ஆலய மரபுக்கு இணங்க மேல்சட்டை கழற்றி வழிபாடுகளில் ஈடுபட்டார். இது ஈழத் தமிழர்களின் மனங்களை உடுருவும் முயற்சியாகும்.

அத்துடன் இலங்கை மற்றும் இந்தியாவை இணைக்கும் ராமர் பாலத்தையும் சீனத் தூதுவர் குய் சென் ஹாங் பார்வையிட்டுள்ளார். அப்போது இலங்கை இராணுவ மற்றும் காவல்துறை அதிகாரிகளை நோக்கி, “இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் இந்தியா இருக்கிறது?” என்று அவர் கேட்டுள்ளார். இந்தியாவின் தலையைத் தொடும் தூரத்தில் வந்துவிட்டோம் என்ற தொனியில் சீனத் தூதுவர் கைகளை நீட்டி தூரத்தை விசாரித்திருப்பது, இந்தியா மீதான பகிரங்க போர் எச்சரிக்கையாகவே இதனைக் கருத வேண்டும். அத்துடன் அமைதியாக இருக்கும் தென்னிந்திய எல்லைகளில் அமைதியை குலைத்து பதற்றத்தை ஏற்படுத்தவே சீனா இந்தியாவின் கொல்லைப்புறம் வழி நுழைய முயற்சிக்கிறது.

இலங்கையில் இந்த நிகழ்வுகள் அரங்கேறிச் சில தினங்களில் இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ச திருப்பதிக்கு விஜயம் செய்திருந்தார். ஈழத்தில் இந்து சைவ ஆலயங்களை அழித்தும் ஒடுக்கியும் வரும் நிலையில் “படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்” என்ற செயலில் ஈடுபடுகிறது இலங்கை. இப்போதும்கூட குருந்தூர் மலை என்ற இந்து சமய தொன்மை இடத்தில் பௌத்த விகாரை கட்டப்படுகிறது. நீதிமன்றம் தடைவிதித்தும் கட்டுமானம் செய்யப்படுகிறது. முல்லைத்தீவில் இந்து ஆலய வளாகத்தில் சிங்கள பிக்குவின் உடலை எரித்து ஆலய பண்பாட்டு மரபுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது.

திருகோணமலையில், இந்துசமய ஆலய உரிமைக்காய் போராடிய தமிழ் சித்தர் அகத்தியசுவாமிகள் மீது சிங்களக் காடையர்கள் வெந்நீர் ஊற்றி தாக்குதல் செய்தனர். இலங்கையில் 350 ஆலயங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச பத்திரிகை ஒன்று கூறுகிறது. போரில் தமிழர்களுடன் அவர்கள் தஞ்மடைந்திருந்த ஆலயங்களும் அழிக்கப்பட்டன. இப்போதும் தமிழர்களின் ஆலயக் கடவுளர்களின் கர்ப்பக் கிரகங்களை கிண்டி அங்கே புத்தரை புதைக்க இலங்கை தொல்லியல் திணைக்களம் முற்படுகிறது.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமாக இருந்தால் அவர்களின் சமயம், பண்பாடு என அனைத்தையும் அழிக்க வேண்டும் என்ற கொள்கையில்தான் இதெல்லாம் நடக்கிறது. ஈழத்தில் இப்படி இந்துமதம் மீது இனப்போர் தொடுத்துக் கொண்டு இந்தியாவில் திருப்பதியில் சென்று தலையை முட்டுவது இரட்டைத்தமல்லவா? சீனாவின் வடக்கு விஜயத்தையும் அதன் கால் பதிப்பையும் பாதுகாக்கவே இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டதாக அரசியல் இராஜதந்திரிகள் கூறுகின்றனர். இந்தியா தனக்குள்ள வரலாற்றுக் கடமையை செய்யத் தவறுகின்றமையினாலேயே இத்தகைய நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளவரையில் சீனா இலங்கையில் கால்பதிக்கவில்லை. உண்மையில் விடுதலைப் புலிகள் ஈழத் தமிழர்களுக்கு மாத்திரமில்லாமல் சிங்கள மக்களுக்கும் தென்னிந்திய எல்லைகளுக்கும்கூட காவலாய் இருந்தார்கள். அவர்கள் இருந்திருந்தால் சீனா வடக்கில் வந்து நின்று கொண்டு இந்தியா எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று கேட்க முடியுமா? இன்றைக்கு ஒரு லட்சத்திற்கும் அதிகமான சீனர்கள் இலங்கையில் குடியேறியுள்ளதாக சொல்லப்படுகிறது. சிங்களவர்களின் ஆக்கிரமிப்பால் துடித்த ஈழநிலம் இப்போது சீனர்களின் ஆக்கிரமிப்பு இலக்கினாலும் பற்றம் கொள்கிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி 13ஆவது திருத்தச் சட்டத்தை குறைநிலையில் நடைமுறைப்படுத்தியே இப்படிச் சீனா உள்நுழைகிற வழி திறக்கப்பட்டுள்ளது. உண்மையில் 13ஆவது திருத்தம் இலங்கை மாகாணங்களுக்கு போதிய அதிகாரத்தை அளித்திருந்தால் வடக்கு கிழக்கில் சீனா கால்பதிக்க இடம் ஏற்பட்டிருக்காது. எனவே ஈழத்தின் அமைதியும் விடுதலையும் பலமான அரசியல் தீர்வும் இப் பிராந்தியத்தின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் அரணாக இருக்கும்.

**- தீபச்செல்வன். ஈழக் கவிஞர் மற்றும் எழுத்தாளர்.**

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com






Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வல்வெட்டித்துறை பட்டத்திருவிழா அம் மண்ணுக்குரிய பெருமையுடன் நடத்தப்பட வேண்டும் - சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று வல்வெட்டித்துறையில் இடம் பெறவுள்ள பட்ட திருவிழாவானது ஏற்பாட்டாளர்களினால் தமிழ் இனப்படுகொலை புரிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற உள்ளமையை நான் வன்மையாக கண்டிப்பதோடு, குறித்த பட்ட திருவிழாவானது வல்வெட்டித்துறை மண்ணுக்குள்ள பெருமையுடன் நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், "நீண்ட இனவழிப்பையும் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் முறையற்ற விதத்தில் பறிப்பதும் என கொடூர ஆட்சி நடத்தும் இந்த அரசாங்க அமைச்சர்களின் பிரசன்னத்துடன் அவர்களின் அனுசரணையுடன் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று வல்வெட்டித்துறையில் இடம் பெறவுள்ள பட்ட திருவிழாவானது வல்வெட்டித்துறை மண்ணுக்கும் மக்களுக்கும் செய்யும் துரோகமாகும்.

எதிர் வரும் பெப்ரவரி மாதம் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் எழுத்து மூல அறிக்கையை இலங்கை அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டிய நிலையில் 2009 ஆம் ஆண்டு இனப்படுகொலையை நடத்திய ராஜபக்ச குடும்பத்தினரை பிரதம விருந்தினராக அழைத்து இந்த பட்டத் திருவிழா நடத்துவது 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இனப் படுகொலையை சர்வதேச அரங்கிலிருந்து இல்லாது செய்வதற்குரிய அரசாங்கத்தின் இராஜதந்திர நடவடிக்கையே இது.

நீண்ட காலமாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் எதிர்பார்த்திருக்கும் இந்த நேரத்தில் அவர்களின் முயற்சி வீண் போகும் வகையில் இந்த செயல்பாடு சர்வதேசத்தின் உடைய பார்வை இனப்படுகொலை புரிந்தவர்களை அழைத்து இந்த பட்டத்திருவிழாவை நடாத்துவதானது சர்வதேச அரங்கிலிருந்து இலங்கை அரசாங்கத்தை தப்பிப்பதற்கு உரிய சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்கும்.



ஆகவே ஏற்பாட்டாளர்கள் இதை கவனத்தில் கொண்டு பட்டத்திருவிழா அரசியல் கலப்படமற்ற வகையில் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

உடனடியாக இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் இந்த புதிய நடைமுறையை கைவிட்டு இந்த மண்ணில் கால காலமாக நடைபெற்று வரும் பட்டத் திருவிழா போன்று இம்முறையும் நடைமுறைப்படுத்த முன்வருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்" என குறிப்பிடப்பட்டுள்ளது.



# "விஸ்வாபிமாணி கலாகீர்த்தி" பட்டம் வென்ற இலங்கைத் தமிழ் நடிகை நிரஞ்சினி சண்முகராஜா

இலங்கையின் தமிழ், சிங்கள மொழிகளில் பேசி நடிக்கும் ஒரு தமிழிச்சியான நிரஞ்சனி சண்முகராஜாவுக்கு "விஸ்வாபிமாணி கலாகீர்த்தி" என்னும் உயர் கலைப் பட்டம் அளிக்கப்பட்டு அதியுயர் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற அரச வைபவம் ஒன்றிலேயே இந்த விருதினை அவர் பெற்றுக்கொண்டார்.

நிரஞ்சினி சண்முகராஜா அவர்கள் இலங்கையில் தயாரிக்கப்பட்ட பல தமிழ், சிங்கள திரைப்படங்களில் நடித்துள்ளதுடன் சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் தயாரிக்கப்பெற்ற "சுனாமி" என்னும் பெயர் கொண்ட திரைப்படத்துக்காக சர்வதேச விருதுவென்ற இலங்கை நடிகை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசினால் அண்மைக் காலத்தில் தமிழ் திரைக் கலைஞர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட மேற்படி கௌரவம் ஒட்டுமொத்த தமிழ் கலைஞர்களுக்குமான அங்கீகாரத்தின் முன்னோடியாக பார்க்கப்படுவதாக தெரிவித்து துறைசார்ந்தவர்கள் வாழ்த்துக்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறிருக்க. தமிழ்ப் பெண்ணாக பிரகாசித்து வரும் நிரஞ்சினி சண்முகராஜா அவர்கள் நைஜீரியாவில் நடந்த உலக திரைப்பட விழாவில் சிறந்த நடிகைக்கான விருது அறிவிக்கப்பட்டு, இலங்கை திரைத்துறைக்கு பெருமை சேர்த்துள்ளார் தமிழ் நடிகையாவார்.

இலங்கை மலையகத்தில் பிறந்த நிரஞ்சனி சண்முகராஜா, இலங்கை திரைப்பட உலகில் முன்னணி கலைஞராக தற்போது வலம் வந்து கொண்டிருக்கிறார். இந்திய வம்சாவளியான நிரஞ்சனி, 1989-ல் பிறந்தவர். சிறு வயது முதல் கலைத்துறை மீது ஆர்வம் அதிகம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் நன்றாகப் பேசத் தெரிந்தவர்.

கண்டியில் கல்லூரிப் படிப்பை முடித்து 2009-ல் இலங்கைத் தனியார் வானொலிஒன்றில் தொகுப்பாளராக அறிமுகமாகி படிப்படியாக வளர்ந்து வானொலி நாடகத்தில் பின்னணி குரல் கொடுப்பவராகவும், நடிப்பவராகவும் மாறி பின்பு சிங்கள - தமிழ் மேடை நாடகங்களில் தன் முத்திரையைப் பதித்தார் நிரஞ்சனி.

திரைப்படங்களில் நடிக்க குடும்பத்தினர் முதலில் சம்மதிக்கவில்லை என்னும் நிரஞ்சனியுடைய ஆர்வமும், தன்னம்பிக்கையும், துணிச்சலும் அவர்களைப் பின்னர் சம்மதிக்க வைத்தது.

சிங்கள நாடகங்களில் சிறப்பாக நடித்தமைக்காக 2011-ல் விருது பெற்ற நிரஞ்சனி. அதிலிருந்து அவருடைய கலைத்துறை கிராஃப் மேல் நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. தொடர்ந்து திரைப்பட வாய்ப்புகள் தேடிவர தமிழ், சிங்கள படங்களில் நடித்தார்.

"இனி அவன்", "கோமாளி கிங்க்ஸ்" போன்ற திரைப்படங்களில் நடித்த நிரஞ்சனி, இலங்கை திரைப்படத்துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு அதிக பணச் செலவில் உருவாக்கப்பட்ட "கிரிவெசிபுர" என்ற வரலாற்றுப் படத்தில் நாயகியாக நடித்தார்.

அதைத் தொடர்ந்து தமிழ் - சிங்கள மொழியில் வெளியான "சுனாமி" திரைப்படத்தில் "கல்யாணி" என்ற கதாபாத்திரத்தில் மிகச்சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியிருந்ததை, இலங்கை ஊடகங்கள் பாராட்டியிருந்தன.

இந்நிலையில்தான் நைஜீரியாவில் நடந்த உலக திரைப்பட விழாவில் "சுனாமி" படத்திற்கு சிறந்த இயக்குநர், சிறந்த நடிகைக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதை இலங்கை மக்கள், குறிப்பாகத் தமிழர்கள் கொண்டாடி வருகிறார்கள்.

இலங்கையில் சுனாமி ஏற்படுத்திய பாதிப்புகளை அடிப்படையாக வைத்து இரண்டு குடும்பங்களுக்கு இடையே ஏற்படும் சிக்கல்களை உணர்வு ரீதியாக பதிவு செய்த படைப்பாக அமைந்த இப்படம் இலங்கை மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்திய நிலையில், இந்த விருது அறிவிப்பின் மூலம் தற்போது உலக மக்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தமிழ், சிங்கள நாடகங்கள், திரைப்படங்களில் சிறப்பாக நடித்ததற்காக தேசிய அளவில் இலங்கையில் இதுவரை 8 விருதுகளை பெற்றிருக்கும் நிரஞ்சனி, சர்வதேச அளவில் ஏற்கெனவே பூடானில் நடந்த ட்ரக் திரைப்பட விழாவில் விருது பெற்றுள்ளார்.

நைஜீரியாவில் "பேயல்சா உலக திரைப்பட விழா"வில் 83 நாடுகளின் 1,300 திரைப்படங்கள் கலந்துகொண்டதில், "சுனாமி"க்கு சிறந்த இயக்குநர், சிறந்த நடிகை விருது அறிவிக்கப்பட்டது அனைவராலும் பாராட்டப்பட்டது.

நடிகை என்ற வட்டத்துக்குள் தன்னை சுருக்கிக் கொள்ளாமல் பல்வேறு அரசியல், சமூகப் பிரச்னைகளில் வெளிப்படையாகக் கருத்துகளைக் கூறி வரும் நடிகை நிரஞ்சனி என்பது தன் மீது வைக்கப்படும் விமர்சனங்களுக்கும் மழுப்பாமல் நேரடியாகவே பதில் அளிக்கிறார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பல வருடங்களுக்கு முன்னர் சிங்கள திரைப்படத்துறையில் மலையகத்திலிருந்து ருக்மணிதேவி என்ற தமிழ் நடிகை இலங்கைத் திரையுலகில் இயங்கியிருக்கிறார். அதற்குப் பின் சிறந்த நடிகையாக நிரஞ்சனி புகழ் பெற்று வருகிறார் என இலங்கைத் திரையுலகத்தினர் பாராட்டி வருகின்றனர்.

தன் நடிப்புத் திறமையால் இலங்கை மட்டுமல்லாமல் உலகம் முழுதும் உள்ள தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார் நிரஞ்சனி சண்முகராஜா.

- பிரதீப்குமார் (மார்க்கம்- கனடா)

# இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் விடுதலை:



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் புதன்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களை தலைமன்னார் கடற்படையினர் கடந்த மாதம் 19 ஆம் திகதி கைது செய்தனர்.




கைது செய்யப்பட்ட மீனவர்கள் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக சட்டத்தரணி எஸ்.டினேசன் தெரிவிக்கையில், குறித்த 12 இந்திய மீனவர்களும் புதன்கிழமை (5) மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். இவர்களில் சிறுவர் ஒருவரும் அடங்குகின்றார்.

இதன் போது குறித்த மீனவர்களுக்கு எதிராக 3 குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு கடற்தொழில் திணைக்களத்தினால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இதன் போது குறித்த மீனவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில், மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் ஒரு வருட சாதாரண சிறை தண்டனை வழங்கப்பட்டதோடு, குறித்த சிறை தண்டனை 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் குறித்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த மீனவர்களில் சிறுவர் ஒருவர் உள்ளமையினால் நிபந்தனையின் அடிப்படையில் எச்சரிக்கப்பட்டு, குறித்த சிறுவன் தனது கல்வியை தொடர வேண்டும் என நீதவான் அறிவுறுத்தியதோடு குறித்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்கள் இலங்கைக்கான இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.என அவர் மேலும் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர்

# என்ன செய்யும் ஒமைக்ரான்? எலிகளிடம் நடத்திய ஆராய்ச்சியில் ஆறுதல் தகவல்கள்



உலக நாடுகளின் கண்களில் விரலை விட்டு ஆட்டிய கோவிட்-19 எனப்படும் கொரோனா தொற்று, தடுப்பூசிகளின் எதிர்ப்புக்குப் பிறகும் அடங்க மறுத்து, டெல்டா, டெல்டா பிளஸ், ஒமைக்ரான் என அடுத்தடுத்த உருமாற்றங்களின் மூலம் இன்னும் அச்சுறுத்தலாகவே நீடித்து வருகிறது.

இப்போது தென் ஆப்பிரிக்காவில் கண்டறியப்பட்டு, உலக நாடிகள் அனைத்திலும் சுனாமியாகப் பரவி வரும் ஒமைக்ரான் வேரியன்ட், டெல்டா வேரியன்ட்டை விடவும் குறைவான பாதிப்பையே ஏற்படுத்துவதாகவும், அதே சமயம் விரைவாகப் பரவுவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால், ஏன் இப்படி நடக்கிறது என்பதை விளக்கவில்லை. தற்போது, எலிகளை வைத்து நடத்திய ஆய்வுகள் அதற்கு விடை அளித்துள்ளன.

மனிதனின் சுவாச மண்டலத்தை இரண்டாகப் பிரிக்கலாம். வாய், மூக்கு, தொண்டை போன்றவை மேல் சுவாச மண்டலம். மூச்சுக்குழல், நுரையீரல் போன்றவை கீழ் சுவாச மண்டலம்.

இதில், ஒமைக்ரான் வகை வைரஸானது, கீழ் சுவாச மண்டலமான நுரையீரலில் மிகக்குறைவான பாதிப்பையே ஏற்படுத்துகிறது. பெர்லின், கேம்பிரிட்ஜ், வாஷிங்டன் உள்பட அண்மையில் பல இடங்களிலும், எலிகளை வைத்து நடந்த சோதனைகளில் இது உறுதியாகியிருக்கிறது.

இதற்கு முன்பு வெளியான ஆய்வு முடிவுகளுமேகூட, ஒமைக்ரான், டெல்டாவைவிட குறைவான பாதிப்பையே ஏற்படுத்துகிறது என்று கூறின. ஆனால், ஏன் அப்படி என்பதற்கான விடை அப்போது இல்லை.

மேலும், தென் ஆப்பிரிக்காவில் ஒமைக்ரான் அலை உச்சத்திலிருந்தபோதும், மருத்துவமனையில் சேர்ந்திருந்த நோயாளிகளிடம் ஒமைக்ரான் குறைவான பாதிப்பையே ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், முதல்கட்டமாக அதிக அளவில் இளைஞர்களிடம் மட்டுமே ஒமைக்ரான் பரவியதால் இப்படி நடக்கிறதா அல்லது முந்தைய கொரோனா பாதிப்பினாலோ, தடுப்பூசியினாலோ மக்கள் நோய் எதிர்ப்பு சக்தி பெற்றிருப்பதால் இப்படி நடக்கிறதா என்பது குறித்து அப்போது உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

ஆனால், தற்போது இந்த இரண்டு சந்தேகங்களுக்கும் விடைசொல்லியிருக்கின்றன அண்மைய ஆராய்ச்சிகள்.

ஒமைக்ரான் குறித்து விஞ்ஞானிகள் அச்சப்படக் காரணமே, இது சுமார் 50 முறை உருமாற்றம் அடைந்திருந்ததால் தான். இதனால், இதன் வீரியம் தீவிரமாக இருக்கலாம் எனக் கணித்திருந்தனர். ஆனால், தற்போது எலிகளிடையே நடத்தப்பட்ட சோதனைகளில் அப்படியில்லை என்று தெரியவந்திருக்கிறது.

ஒமைக்ரான் தாக்கிய எலிகளை ஆராய்ச்சி செய்தபோது, அவற்றின் மூக்கு பகுதியில் வைரஸின் எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்கிறது. ஆனால், நுரையீரலில் 10-ல் ஒருமடங்கு அல்லது அதற்கும் குறைவான அளவே ஒமைக்ரான் வைரஸ் எண்ணிக்கை இருந்திருக்கிறது.

பொதுவாக கொரோனா, மூக்கு, தொண்டைப் பகுதிகளை பாதித்தால் பிரச்சினையில்லை. விரைவில் குணமடைந்துவிடலாம். ஆனால், வைரஸ் நுரையீரலை அடையும்பட்சத்தில் அது நம்மை உயிரிழப்பு வரை கொண்டு செல்லலாம். ஒமைக்ரான் விஷயத்தில் அது நடக்கவில்லை என்கின்றனர் விஞ்ஞானிகள்.

"பெரும்பாலான நுரையீரல் செல்கள், டிஎம்பிஆர்எஸ்எஸ்2 (TMPRSS2) என்ற புரதத்தைக் கொண்டிருக்கும். இதற்கு முந்தைய கொரோனா வேரியன்ட்கள் நுரையீரலுக்குள் நுழைந்தபோது, இந்தப் புரதம்தான், கொரோனா வைரஸ் செல்களுக்குள் நுழைய உதவி செய்திருக்கிறது. ஆனால் ஒமைக்ரானை, இது அப்படி அனுமதிக்கவில்லை. எனவேதான், நுரையீரல் பகுதியில் ஒமைக்ரானால் பல்கிப்பெருக முடியவில்லை" என்று கருதுகிறார், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக விஞ்ஞானி ரவீந்திர குப்தா.

அப்படியெனில் இனி அச்சப்பட வேண்டாம் அல்லவா என்று கேட்டால், "அவசரப்படாதீர்கள், அப்படி சொல்லிவிட முடியாது. ஏனெனில், இந்த ஆராய்ச்சிகள் ஏன் ஒமைக்ரான் நுரையீரலை விட்டுவைக்கிறது என்பதற்கு மட்டுமே விடைசொல்லியிருக்கின்றன. இதுவும்கூட முதல்கட்ட ஆய்வுகள்தான். இதைத் தொடர்ந்து குரங்குகள் மற்றும் மனிதர்களிடமும் ஆய்வு நடத்தியபின்புதான் 100% ஒரு முடிவுக்கு வரமுடியும்" என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இன்னும் விடை தெரியாத கேள்விகள் இதுபோக,

(1) ஒமைக்ரான், ஏன் இவ்வளவு வேகமாகப் பரவுகிறது?

(2) காற்றில் ஒமைக்ரானால் எந்த அளவு திறம்படப் பரவ முடிகிறது?

(3) 50 முறை உருமாறிய ஒமைக்ரானுக்கு, வேறு ஏதேனும் ஆபத்தான குணங்கள் இருக்கின்றனவா?

இவை போன்ற கேள்விகளுக்கெல்லாம் இன்னும் விடை தெரியவில்லை.

முதன்முதலாக ஒமைக்ரான் வேரியன்ட் உறுதிசெய்யப்பட்ட தென் ஆப்பிரிக்காவில், புதிய கொரோனா அலை உச்சந்தொட்டு, தற்போது அங்கு தொற்றுகளின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்துவருகிறது. இதனால், அங்கு இரவு நேர ஊரடங்கு தளர்வுகளும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த அலையில், டெல்டாவை விடவும், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுபவர்களின் விகிதம் குறைந்திருப்பதையும் அந்நாடு உறுதி செய்திருக்கிறது. இவையெல்லாம் நமக்கு ஆறுதல் அளிக்கும் செய்திகள்.

ஆனால், இந்தியாவில் இப்போதுதான் கொரோனா எண்ணிக்கை மீண்டும் ராக்கெட் வேகத்தில் உயர்ந்துகொண்டிருக்கிறது. இனிதான் இதன் தாக்கத்தையே நாம் உணரப்போகிறோம். எனவே, நாம் மிகவும் உஷாராகத்தான் இருக்கவேண்டும் என்கின்றனர், இந்திய மருத்துவ வல்லுநர்கள்.

ஏற்கெனவே பார்த்ததுபோல, ஒமைக்ரான் மேல் சுவாச மண்டலமான வாய், மூக்கு, தொண்டையைத்தான் அதிகம் பாதிக்கிறது. அங்கிருந்து விரைவாகப் பரவவும் செய்கிறது. எனவே, நம்மிடமிருந்து பிறருக்கு கொரோனா பரவாமல் இருக்கவும், பிறரிடமிருந்து நமக்குப் பரவாமல் இருக்கவும் முகக்கவசம் என்னும் ஆயுதம் நமக்கு மிக முக்கியம்.

முந்தைய கொரோனா பாதிப்புகளிலிருந்து உருவான ஆன்டிபாடிகள்கூட, ஒமைக்ரானைத் தடுப்பதில்லை என்பதால், தடுப்பூசிகள் அதை மிக முக்கியம்.

எனவே, இந்தியாவிலும் ஒமைக்ரான் அலை ஓயும் வரை, மிகவும் கவனமாக இருக்கவேண்டியது அவசியம்.

**- மணிராஜ், திருநெல்வேலி**


## கோவிட்-19 பூஸ்டர் தடுப்பூசியை எடுத்துக்கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் பூஸ்டர் தடுப்பூசியை முன்பதிவு செய்யுங்கள்.

கோவிட்-19 -இலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நமது பாதுகாப்பு நம் அனைவரின் கையில்.



**ontario.ca/covid19 -ஐ சென்று பாருங்கள்**

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# மரண அறிவித்தல்



மலர்வு:
02 - 09 - 1930

உதிர்வு:
04 - 01 - 2022

## திருமதி பத்மாவதி வைத்திலிங்கம்

**(திருநெல்வேலி)**

**யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், மலேசியா, கொழும்பு, ஓமான், கனடா Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பத்மாவதி வைத்திலிங்கம் அவர்கள் 04-01-2022 செவ்வாய்க்கிழமை அன்று கனடாவில் காலமானார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - உத்தமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற வைத்திலிங்கம் நாகலிங்கம் (Health Inspector, Sri Lanka, Public Health Officer, Palace Medical Services, Oman) அவர்களின் ஆருயிர் மனைவியும்,

இந்திராணி, காலஞ்சென்ற சாந்தினி, சந்திரகுமார், சிந்தியா, பிறேமா, ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்ற வேதவனம் விஸ்வலிங்கம் அவர்களின் அன்பு பெறாமகளும்,

காலஞ்சென்ற பார்வதிதேவி நல்லைநாதன் அவர்களின் அன்புச் சகோதரியும்,

ஸ்ரீதரன் அவர்களின் அன்புப் பெரியம்மாவும்,

கருணாநிதி, சுனித்தா, குமரகுருபரன், குணசேகர், கீதாஞ்சலி, ஷிராணி ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்றவர்களான மகாலஷ்மி தாமோதரம்பிள்ளை, பேரானந்தம் தர்மலிங்கம், குணபூபதி கந்தசாமி, நல்லைநாதன் செல்லப்பா ஆகியோரின் அன்பு மச்சாளும், காலஞ்சென்ற A.R.பொன்னம்பலம் அவர்களின் மருமகளும்,

காலஞ்சென்ற மகாலிங்கம் சொக்கலிங்கம் மற்றும் குமாரலிங்கம் சொக்கலிங்கம் ஆகியோரின் அருமை அக்காவும்,

இராஜலஷ்மி இராசையா, காலஞ்சென்ற அன்னலஷ்மி நவரட்ணம் மற்றும் விஜயலஷ்மி அரசரட்ணம் ஆகியோரின் ஆசை மச்சாளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை சின்னதம்பி, தர்மலிங்கம் நாகமுத்து மற்றும் கந்தசாமி சின்னகுட்டி ஆகியோரின் அன்புச் சகலியும்,

ராதிகா, இந்துஜா, பிரணவன், வைதீகன், ஜானகி, மயூரி, Dylan, Brandon, மீரா, வசந்த பிரகாஷ், கமல், மோகன், செந்தூரன், ஷமித்தா ஆகியோரின் அன்புப் பேத்தியும், Bianca, சமீரா, Dhurva ஆகியோரின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் 08-01-2022 சனிக்கிழமை மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணி வரை Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave, Markham) இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, 09-01-2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப 1:00 மணி தொடக்கம் 3:00 மணி வரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் பி.ப 3:30 மணிக்கு Forest Lawn Mausoleum & Cremation Centre (4570 Yonge St, North York, ON M2N 5L6) இல் தகனம் செய்யப்படும்.***

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
இந்திரா - மகள்: (647) 718-5858
சந்திரன் - மகன்: (416) 953-1570
பிறேம் - மகள்: (416) 627-8237
சிந்தி - மகள்: (416) 843-3284
ஜெயா - மகன்: (416) 540-0362

# மரண அறிவித்தல்

அன்னையின் மடியில்

17 . 06 . 1950



ஆண்டவன் அடியில்

01 . 01 . 2022

# திரு.கனகலிங்கம் நவரத்தினம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை, கனடா, ரொரன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட திரு.கனகலிங்கம் நவரத்தினம் அவர்கள் 01.01.2022 அன்று சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், செல்வரத்தினம் அவர்களின் பாசமிகு மகனும்,
காலஞ்சென்றவர்களான சிங்கராசா அன்னபாக்கியம் அவர்களின் அன்பு மருமகனும்,
மகாலட்சுமி அம்மாவின் அன்புக் கணவரும்,
பாலு, ரமேஸ் ஆகியோரின் பாசமிகு அப்பாவும்,
அம்பிகைபாகன், விஜயலட்சுமி அம்மா(அமரர்), ரேபதிலக்சுமி அம்மா, சுந்தரலிங்கம்,
ஜெயலட்சுமி அம்மா, சிவலக்சுமி அம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரரும்,
அருந்தவராசா (அமரர்) அருள்ராசா (கனடா), புனிதராசா (கனடா) ஆகியோரின் மைத்துனரும்,
பரமேஸ்வரி (இலங்கை), பசுபதிஸ்வரி (ராதா - கனடா), பராசக்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும்,
அன்பரசி (இலங்கை) ருக்சன் (கனடா), லக்சன் (கனடா), நிவேதா (கனடா), கமல்ராஜ் (கனடா) ஆகியோரின்
அன்பு மாமாவும் ஆவார்.

09 January 2022 ஞாயிற்றுக்கிழமை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham - ON இல் பிற்பகல் 6.00 மணி தொடக்கம் 8.00 மணி வரைக்கும் பார்வைக்கு வைக்கப்பட்டுஈஸ, பின்னர் திங்கள் January 10, 2022 அன்று காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரையில் ஈமக்கிரியைகள் நடைபெற்று, தகனக் கிரிக்காக 12492 Woodbine Avenue உள்ள Highland Hills Crematorium க்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும்**
**ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

தகவல்: மனைவி, பிள்ளைகள்
416 256 3520

# குடும்ப விளக்கின்
# 3ம் ஆண்டு நினைவுநாள்



| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 15 - 09 - 1961 | 11 - 01 - 2019 |

பனிபெய்யும் தேசமதில் பாங்குடனே வாழ்ந்த
திருமகனாம் குமார் என்னும் அழகனே
காலனவன் கவர்ந்திட்ட நேரமதில்
உன்னை வீழ்த்தும் விதிகள் எழுதப்பட்டிருந்தால்
விதிகளை வீழ்த்தும் அளவிற்கு எங்களின் பலம் போய்விட்டதே
ஞாலமதில் பிறந்திட்ட உன் புகழை நாம்
இவ் நானிலமே பயன் பெறவே நடந்தாயே
கடல் கடந்து நீ சென்று நாம் வாழ வழிவகுத்தாய்
இன்றும், என்றும் உன் நினைவு அழியாது
மனங்களில் நிறைந்தீர் மாசற்ற மனிதராய் உணர்ந்தோம்
மனதை ஈர்ந்தவராய் பாராட்டு பெற்று
பதவி உயர்வுகள் தேடி வந்தன
சினம் கொள்ளல் உம்மிடத்தில் சிறிதளவும் இல்லை
சீரான உடைகள், சிங்கார நடை, சிரித்த முகத்தோடு
செந்நிற மேனி சீக்கிரம் பொருந்திடும்
நட்பு வட்டங்கள் நடுவே சிகரமாய் இருந்தீரே
குதூகலம் நிறைந்து கொண்டாடி மகிழ்ந்தவை இனி வருமோ
ஏங்கி நிற்கும் நாம் உன் பாத கமலத்தை பூசித்து வணங்குவோம்
எங்கிருந்தாலும் அனைவரையும் வாழ்த்துவாய் என்று தெரியும்

**திதி: 07-01-2022**

## திரு. சத்தியசீலன் சத்தியகுமார் (குமார்)

(யாழ். சுருவில் ஐயனார் கோவிலடி, கனடா)



அன்னாரின் 3ம் ஆண்டு நினைவுநாள் அன்னாரின் இல்லத்தில் 07-01-2022 அன்று நடைபெற்றது.

07-01-2022 அன்று வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள அகிலாண்டேச்வரி அருளகத்தில் உள்ள சிறார்கள், பெரியவர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும்.

*என்றும் உன் நினைவுடன் வாழும் குடும்பத்தினர்.*

*மனைவி, பிள்ளைகள், சகோதரிகள், மைத்துன,மைத்துனிகள், அத்தைமார், சித்திமார், சித்தப்பா.*
*உடன்பிறவா சகோதரர்கள், மருமக்கள். பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்*

# கோட்டாவின் பொருளாதார பரிசோதனை பற்றிய கண்ணோட்டம்

- கலாநிதி அமீர் அலி

இலங்கை இப்போது அனுபவித்து வருவது, ஒரு இன - மத தேசியவாத சனாதிபதி கோட்டாபய இராஜபக்சவின் கொள்கைகளால் வடிவமைக்கப்பட்ட ஒரு தொழில்சாரா பொருளாதார பரிசோதனையின் மொத்த வீழ்ச்சியாகும். அவர் இப்போது ஸ்ரீலங்காதீஸ்வர பத்ம விபூ'ணா என அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இது (பவுத்த) சங்க சமூகத்தால் எந்தவொரு அரசியல் தலைவருக்கும் வழங்கப்பட்ட ஒரு தனித்துவமான மற்றும் மதிப்புமிக்க பட்டம் ஆகும்.

2019 இல் சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கையோடு பவுத்த சாசனத்தையும் சிங்கள பவுத்தர்களையும் பாதுகாக்கப் போவதாக கோட்டாபய இராசபக்சா அறிவித்தார். ஏனைய சமயங்கள் மன்றும் சமூகங்கள் பற்றி அவர் கவலைப்படவில்லை. கைதேர்ந்த ஆனால் கருத்தியல் ரீதியாக இணைந்த தொழில்நுட்ப வல்லுநர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் வணிக அதிபர்களைக் கொண்ட ஒரு அதிகாரக் குழு அல்லது வியத்மக அமைப்பைச் சேர்ந்தவர்களைத் தன்னைச் சுற்றி வைத்துக் கொண்டார். தேவைப்பட்டால் சமூகங்கள் மற்றும் "ஒழுக்கமுள்ள, நல்லொழுக்கமுள்ள மற்றும் கட்டுப்பாடான சமூகத்திற்குள் "செழிப்பு மற்றும் மகிமை" நோக்கி இலங்கையை இட்டுச் செல்வதற்கான ஒரு வளர்ச்சிப் பரிசோதனையை மேற்கொள்ளத் தீர்மானித்தார்.

அவர் மற்றொரு ஹிட்லராக மாறினாலும், அரசியல் மயப்படுத்தப்பட்ட பிக்குகளின் தீவிரக் குழு அவரை முழுமையாக ஆதரிக்க அணியமாக இருந்தது. மற்றும் அவரது ஆட்சிக்கு உள்நாட்டுப் பாதுகாப்பை வழங்குவதற்கு மட்டுமல்லாமல், பொது நிர்வாக சேவைகளையும் வழங்குவதற்காக இராணுவம் முகாம்களில் இருந்து இழுத்து வரப்பட்டது. கோட்டாபய இராசபக்சா அவர்களுக்கு வேண்டியதெல்லாம் அவரது பணியை நிறைவு செய்வதற்கு சவாலற்ற ஒரு சர்வாதிகார ஆட்சி அமைப்பாகும். அப்படியான ஆட்சியில் சனநாயக அரசியலமைப்பில் பொதிந்துள்ள அனைத்து கட்டுப்பாடுகளும் சமநிலைகளும் **(checks and balances)** அவற்றின் பொருளை இழக்கும். இதற்கு முஸ்லீம் யூதாசுகளின் இரண்டகத்துக்கு "நன்றி" சொல்ல வேண்டும். இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றியதன் மூலம் நாடாளுமன்றம் தற்கொலை செய்து கொண்டது வளர்ச்சிக்கான "மாற்று வழி" என்று கோட்டாபய இராசபக்சாவின முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் **W.D.** இலக்'மண் விவரித்ததைப் பரிசோதனை செய்யக் களம் அமைக்கப்பட்டது.

இந்த மாற்று வழி என்று அழைக்கப்படுவதன் மிக முக்கியமான அம்சம் மற்றும் அதன் சோதனையானது, பொருளாதாரத் சிக்கல்களுக்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தீர்வுகளில் கவனம் செலுத்துவதாகும். ஆனால் இலங்கையின் பொருளாதாரம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகளாவிய உலகின் மாறுபாடுகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. அதே நேரம் இலங்கைத் தீவு பரபரப்பான சர்வதேச நீர்வழிகளில் ஒன்றான இந்தியப் பெருங்கடலின் மூலோபாய இடத்திலும் அமைந்துள்ளது. இலங்கை ஒரு புவியியல் மற்றும் பிராந்திய அர்த்தத்தில் மட்டுமே ஒரு தீவு ஆகும். ஆனால் ஒரு உலகளாவிய கிராமத்தில் அது ஒரு சமூகம் மட்டுமே. இதன் பொருள் என்னவென்றால், இலங்கையின் உள்நாட்டுக் கொள்கைகள் நாட்டிற்கு வெளியில் நிகழும் மாற்றங்களால் பாதிக்கப்படாமல் தனித்து இயங்க முடியாது.

கோட்டாபய இராசபக்சாவும் அவரது குழுவினரும் இந்த முக்கியமான உண்மையைக் கவனிக்காமல் இருந்து விட்டதாகத் தெரிகிறது. மறுபுறம் அவர்கள் தங்களது வீட்டில் தயாரிக்கப்பட்ட தீர்வுகளின் செயல்திறன் குறித்து அதிக நம்பிக்கை கொண்டதாகவும் தெரிகிறது. இரண்டு ஆண்டு தொழில்சாரா கோட்பாட்டுக்குப் பிறகு, மாற்று வழி பாறைகளில் மோதியுள்ளது. இந்தத் தோல்வி பொருளாதாரத்தை விட வேறு எங்கும் தெளிவாகவும் வலியுடனும் காணப்படவில்லை.

மாற்று வழியின் பொருளாதாரம் மூன்று முக்கியமான தூண்களின் மிகைப்படுத்தப்பட்ட வலிமையில் கட்டமைக்கப்பட்டது: இயற்கை வேளாண்மை மூலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவ் ஒரு கலப்பு நாணயக் கொள்கை மற்றும் அனைத்துலக நாணய நிதியம் இல்லாத சுதந்திரமான பொருளாதார மேலாண்மை.

இவற்றில் முதலாவது கொள்கையளவில் பாராட்டத்தக்கது. ஏனெனில் மீளுருவாக்கம் செய்யும் வேளாண்மை மூலம் உணவில் தன்னிறைவு அடைவது நாட்டின் விரிவடைந்து வரும் வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைக்க உதவுவதோடு, அதே சமயம் பணச் சமநிலையைக் குறைக்கவும் உதவும். மேலும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்கும். இருப்பினும், அதைச் செயற்படுத்தும் வழிமுறையில் சிக்கல் இருந்தது.

சில உணவுப் பொருட்களின் இறக்குமதிக்கு ஒரே இரவில் தடை விதிக்கப்பட்டால் அது தானாகவே வித்தையை நிகழ்த்திவிடும் என்று சர்வாதிகாரி இராசபக்சா கோட்டாபய நினைத்தார். பாமா எண்ணெய் இறக்குமதிக்கு அவர் தடை விதித்ததன் பின்னணியில் உள்ள ஏரணம் **(logic)** இதுதான், இது வெதுப்பக உரிமையாளர்கள் முற்றிலும் எதிர்பாராத ஒன்றாகும். இராசயன உரத்தை இறக்குமதி செய்வதைத் தடை செய்ய கோட்டாபய இராசபக்சா எடுத்த நடவடிக்கை, இப்போது நாட்டை பஞ்சத்தின் விளிம்பிற்கு கொண்டு சென்றுள்ளது. உடனடி சேதங்களைக் குறைக்க எந்த ஆயத்த வேலையும் செய்யாமல், மாற்று வழிகள் இல்லாமல், துறையில் நிபுணர்களுடன் கலந்தாலோசிக்காமல், கோட்டாபய இராசபக்சா தனது கட்டளைகள் விரும்பிய பலனைத் தரும் என்று கருதினார். இரண்டு தடைகளும் நீக்கப்பட்டாலும், ஏற்பட்ட சேதம் மிகப்பெரியது மற்றும் அதிக செலவாகும் மற்றும் அதனைச் சரிசெய்ய நீண்ட காலம் எடுக்கும்.

இரண்டாவது தூண், தொற்றுநோயால் தூண்டப்பட்ட உலகளாவிய மந்தநிலையால் பாதிக்கப்பட்டு சுருங்கி வரும் பொருளாதாரத்திற்குப் போதுமான பணப் புழக்கத்தை வழங்குவதாகும். புதிய ஆளுநராக பேராசிரியர் **W.D.** இலக்ஷ்மன் நியமிக்கப்பட்ட பிறகு, மத்திய வங்கியின் உறுப்பினர்களுடன் இராசபக்சா கோட்டாபய நடத்திய சந்திப்பு நினைவு கூரத்தக்கது. அங்கு அவர் தனது பொருளாதாரக் கொள்கைகளை செயல்படுத்த உதவுமாறு நாணய வாரியத்தை கோரினார். அன்றைய தினம் அரசியலமைப்பு ரீதியாக அதிகாரம் பெற்ற மற்றும் நாட்டின் மிக உயர்ந்த பொருளாதார நிறுவனம் தனது சுதந்திரத்தை இழந்து ஒரு எதேச்சாதிகாரரின் கருவியாக மாறியது.

மத்திய வங்கித் தலைவர், ஒரு மரியாதைக்குரிய கல்வியாளர். அவரது கல்வி நேர்மையைப் பாதுகாப்பதற்கும் ஒரு அரசியல் தலைவருக்கு சேவை செய்வதற்கும் இடையே பரிதாபமாக சிக்கிக்கொண்டார். "எந்தவொரு அறிவார்ந்த செல்வாக்கிலிருந்தும் தங்களைத் தாங்களே முற்றிலும் விடுவிப்பதாக நம்பும் நடைமுறை மனிதர்கள், பொதுவாக செயலிழந்த சில பொருளாதார வல்லுனர்களின் அடிமைகள்" என்று கெய்ன்ஸ் **(Keynes)** நினைத்ததற்கு மாறாக, மத்திய வங்கிப் பொருளாதார நிபுணர் ஒரு எதேச்சதிகார அரசியல் தலைவரின் அடிமை ஆனார். அவர் நடைமுறைப்படுத்திய பணவியல் கொள்கையானது நவீன நாணயக் கோட்பாட்டின் **(Modern Monetary Theory (MMT)** கலப்பின தயாரிப்பு ஆகும். இது அமெரிக்காவைப் போன்ற ஒதுக்கப்பட்ட நாணயங்களைக் கொண்ட பொருளாதாரங்களுக்கு ஆனது. நவீன நாணயக் கோட்பாட்டின் சாராம்சம் என்னவென்றால், பணவீக்கத்தைப் பற்றியப் பயம் இல்லாமல் பணப்புழக்கத்தை வழங்குதல் என்ற பெயரில் பணவியல் அதிகாரிகள் பணத்தை அச்சிடலாம்.

ரூபாய் ஒரு ஒதுக்கப்பட்ட கையிருப்பு நாணயம் அல்ல. அதிகப்படியான பண பரிமாற்றத்தின் பணவீக்க விளைவு தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஆனால் மத்திய வங்கித் தலைவர் தனது கணக்கீட்டில் இருந்து உணவுப் பொருட்களின் விலைகளை மிகவும் திறமையாக நீக்கி, பணவீக்கத்தில் சமாளிக்கக்கூடிய ஆனால் "கவலைக்குரிய" உயர்வைக் காட்டினார். இது புள்ளிவிவரங்களுடன் பொய் சொல்லும் தூய கலை ஆகும். லக்'மணனின் மனசாட்சி அவரைக் குத்தி பல இரவுகளை உறங்கா இரவுகளாகச் செய்திருக்க வேண்டும். அவர் தனது முழு பதவிக் காலத்தையும் நிறைவேற்றாமல் பதவி விலகினார். இப்போது, அவரது வாரிசு, பயிற்சியால் ஒரு கணக்காளர் ஆனால் அரசியலில் ஈடுபட்டவர். அதே தந்திரத்தைத் தொடர்வதில் எந்தக் கவலையும் இல்லாதவர்.

அனைத்துலக நாணய நிதியம் இல்லா பொருளாதார நிர்வாகத்தின் மூன்றாவது தூண், நட்பு நாடுகளின் நிதி உதவியுடன், நாணய பரிமாற்றம் மற்றும் கடன்கள் மூலம், மாற்று வழியில் தான் விரும்பிய இலக்கை அடையும் என்ற நம்பிக்கையுடன் தேர்ந்தெடுப்பது. இந்த மூலோபாயத்தின் குறுகிய பார்வை இரண்டு பகுதிகளில் உள்ளது. முதலாவதாக, அதிகமாக கடன் வாங்குவதாலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கடன் விழுக்காடு உயரும். மற்றது பொருளாதாரம் சுருங்கி அல்லது நத்தை வேகத்தில் வளர்ந்து வருவதால், கடன் சுமையாக மாறும். கடந்த கால மற்றும் நிகழ்கால மத்திய வங்கித் தலைவர்கள், கடனைத் திருப்பிச் செலுத்துவதில் கறைபடியாத சாதனையை நாடு கொண்டுள்ளது என்று பெருமையுடன் விளம்பரப்படுத்தினர்.

இங்கு முக்கியமானது கடந்த கால வரலாறுப் பதிவு அல்ல. மேலேயுள்ள விழுக்காடு உயரும் போது அதிகரித்து வரும் கடன் அபாயம் ஆகும். **Fitch** போன்ற அனைத்துலக கடன் முகவர் நிலையங்கள் இலங்கையின் கடன் அபாயத்தை **CC** க்கு தரமிறக்குவதற்கு இதுவே காரணமாகும். அதாவது கடன் வாங்கும் செலவு அதிகரிக்கும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் நிதி முதலீடு செய்ய ஊக்கமளிக்காது. அனைத்துலக நாணய நிதியத்தின் ஈடுபாடு அனைத்துலக நிறுவனங்களுக்கு வெவ்வேறு சமிக்ஞைகளை அனுப்பும். வெளிநாட்டு முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையை ஊக்குவிக்கும். இரண்டாவதாக, இந்தியாவிடமிருந்து $1.9 பில்லியன் வரையிலான சமீபத்திய பொருளாதார மற்றும் நிதித் தொகுப்பு மற்றும் $1.5 பில்லியன் சீனாவின் கடன் போன்ற நண்பர்கள் மற்றும் அண்டை நாடுகளின் உதவிக்கான வேட்டை வெளிநாட்டுக் கொள்கை தாக்கங்களிலிருந்து விடுவிக்க மாட்டாது.

இலங்கையின் பொருளாதாரத் துயரமானது, இந்தியா - சீனாவிற்கும் இடையிலான பதட்டத்தை அதிகரித்துள்ளது. இந்தப் பின்னணியில் இந்திய - சீன இடையில் அறிவிக்கப்படாத பனிப்போரின் பின்னணியில் இன்னும் பரந்த வெளியுறவுக் கொள்கைப் பரிமாணத்தை ஏற்படுத்தும். இந்த உதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்தியப் பெருங்கடலில் மூலோபாய ரீதியாக அமைந்திருப்பதற்கு இலங்கை விலை கொடுக்க வேண்டியுள்ளது. பொருளாதாரத்தில் அனைத்துலக நாணய நிதியத்தின் ஈடுபாடு மறைமுகமாக மேற்கத்திய நாடுகளிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வெளிப்படும் அழுத்தங்களில் சிலவற்றையாவது குறைக்கச் செய்யும்.

இவ்வாறு, கோட்டாபய இராசபக்சாவின் பொருளாதாரப் பரிசோதனை கட்டமைக்கப்பட்ட மூன்று தூண்களில் ஒன்று நடைமுறைச் சிக்கல்களால் செயலிழந்தது. மற்ற இரண்டும் கோட்பாட்டுத் தன்மை இல்லாதது. இவற்றுக்கு மேல், உள்ஊழல், சந்தை மா.ஃ.பியாவின் அரசியல் அதிகாரம், மந்தமான வரி நிர்வாகம், ஒற்றுமையற்ற அமைச்சரவை போன்ற பல சிக்கல்கள் இருந்தன. இவை தவிர, பொருளாதார ஆய்வாளர்களின் போதிய கவனத்தைப் பெறாத ஒரு சிக்கல் உள்ளது.

மேற்கூறிய அனைத்திலும் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடிந்தாலும், நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரின் தீவிர ஈடுபாடு இல்லாமல் பொருளாதாரம் எவ்வாறு செழித்து வளர்ச்சியடையும்?

சிங்கள- பவுத்தர்களின் நிலையைப் பாதுகாப்பதற்கும் முன்னேற்றுவதற்கும் கோட்டாபய இராசபக்சாவின் அர்ப்பணிப்பு, நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்றும் ஏனைய சமூகங்கள் நீண்ட கால குத்தகைதாரர்கள் மட்டுமே என்றும் தீவிர தேசியவாத பிக்குகளின் கூற்றுக்கான வெளிப்படையான ஒப்புதல். இது சிறுபான்மையினரின் குடியுரிமையின் மெய்நிகர் மதிப்பிழப்பு ஆகும்.

கோட்டாபய இராசபக்சா அல்லது அவரது சகோதரர் பிரதமரோ, இந்த ஆபத்தான கூற்றை அரசாங்கமோ அல்லது எதிர்க்கட்சியோ இதுவரை மறுக்கவில்லை என்பது வியப்பை அளிக்கிறது. அதை மறுதலிக்கத் துணிந்த ஒரே ஒருவர் இப்போது நம்மிடையே இல்லை. அதேநேரம், சிறுபான்மையினருக்கு எதிராகத் தனது தீவிர தேசியவாத ஆதரவாளர்கள் செய்யும் அப்பட்டமான அநீதிகளுக்கு கோட்டாபய இராசபக்சா காட்டும் சகிப்புத்தன்மையும், சிறுபான்மையினர் மற்றும் அவரது அரசியல் எதிரிகளின் மனித உரிமைகளை மிதிக்க சனாதிபதியின் சொந்தத் தயார்நிலையும் அவர் ஒரு பாரபட்சமான சனாதிபதியாக செயல்படுவதை காட்டுகிறது. தீவிர தேசியவாதிகள். அப்படியானால், ஒற்றுமையற்ற மற்றும் பெரும்பாலும் அதிருப்தியடைந்த மக்களுடன் பொருளாதார வளர்ச்சி எவ்வாறு வெற்றிபெற முடியும்?

தற்போதைய பொருளாதார பேரழிவு சனாதிபதி கோட்டாபய இராசபக்சாவின் முத்திரையைக் கொண்டுள்ளது, மேலும் பொருளாதார சிந்தனையில் சில தீவிரமான மாற்றம் ஏற்படாத வரை, மக்கள் தாங்கும் தற்போதைய பொருளாதார வலி 2023 ஆண்டிலும் தொடரும்.

***(*Dr. Ameer Ali, School of Business & Governance, Murdoch University, Western Australia.***

ஆங்கில மூலம் ***https://www.colombotelegraph.com/index.php/scrutiny-of-gotas-economic-experiment/***

*- தமிழாக்கம்: கனடா நக்கீரன்*


SPLC

# SPLC 55+ MEN VIRTUAL CHAT GROUP

Twice a month on Mondays

**4:00 – 5:00 PM**

Virtual Program via Zoom



Registration & Telephone inquiries: Please call 416 493 3333 ext 288 (Siva) or email sivanesan@splc.ca

Senior Persons Living Connected
3333 Finch Avenue East
www.splc.ca



வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்

VASANTHAM TAMIL WELLNESS CENTRE PRESENTS...

சமூக உளவளம் பேணும் தொடர் - 30

Psychosocial Education Series - 30

VASANTHAM TAMIL WELLNESS CENTRE

## Are we Losing our Mind?

## மதுவும், மதியும் குடும்ப சூறாவளியும்

Monday, January 3rd, 2022
Canada EST: 7:00 - 9:00 pm
U.K: 12:00 - 2:00 am    Sri Lanka: 5:30 - 7:30 am

Zoom ID: 918 584 6813
No Password



Dr. Senthuran Gunaratnam
MBBS, FRCPC, Psychiatrist

**1.Treatment for Addiction in an Acute Care Hospital Set-up**

நெருக்கடி கால சேவையை வழங்கும் வைத்தியசாலைகளில் மதுபோதைக்கு அடிமையானவர்களுக்கான மருத்துவ சேவை

**2. Negative implications of addiction on our family structure**

தமிழ்க் குடும்பங்களில் போதை ஏற்படுத்தும் மாறுகோலங்கள்



Ezhil Souparamanian
Case Manager, CMHA
Hospital to Home Program
(SHN-Centenary Hospital)

**3. Vasantham - Addiction Resources**

மதுபோதை - ஆதரவுகள் - தேடல்கள்

Join us via zoom: CLICK HERE or go to link below in the email
Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!

(647) 374-4685
VASANTHAM.CA
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW


HOSTED BY
DR. PARVATHY KANTHASAMY
CONTACT:
(416) 847-4172



# சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயில் தைப்பூச திருவிழா அழைப்பிதழ்

பவுர்ணமி 18-01-2022 செவ்வாய்க்கிழமை தைபூசத்தை முன்னிட்டு சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலுக்கு தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு 1000 நபர்களுக்கு வடை பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்னம் பாலிக்கும் தில்லை சிற்றம்பலம், அனைவரும் சாப்பிடவாருங்கள் தர்மத்தினை நீங்கள் காப்பாற்றுங்கள் தர்மம் உங்களை காப்பாற்றும் 1000 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூபாய் 50000/= ஆகின்றது இது சமயம் தங்களால் முடிந்த நன் கொடைகளை செலுத்தி இந்த தர்மத்தின் சிறந்த பலன்களை அடைய அன்போடு அழைகின்றோம்.





நன்கொடைகளை செலுத்தவேண்டிய முகவரி:

**சி. நவதாண்டவதீக்ஷிதர்**
**22/10, கிழக்கு சன்னதி**
**சிதம்பரம் 608001, 9345512976 gookulpay omganesh.**
**THIRUCHITRAMBALAM ANNADHANA TRUST**
**STATE BANK OF INDIA CHIDAMBARAM**
**BRANCH A/C. NO 30263863248.IFSC. SBIN0000823..MO,DD,CHEK**

இந்த வழியாகவும் அனுப்பலாம். உடன் ரசீது பிரசாதங்கள் முறையாக அனுப்பி வைக்கப்படும். நன்றி.

**சி. நவதாண்டவதீக்ஷிதர்**

# தமிழக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜிக்கு 15 நாட்கள் நீதிமன்றக் காவல்: சிறையில் அடைப்பு



கடந்த அதிமுக ஆட்சியில் வேலை வாங்கி தருவதாக ரூ.3.1 கோடி மோசடி செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி, குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நீதிபதி பரம்வீர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை 15 நாட்கள் ஜனவரி 20 வரை நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். இதனையடுத்து ராஜேந்திர பாலாஜி சிறையில் அடைக்கப்பட்டார்.

ராஜேந்திர பாலாஜி தன்னைக் கைது செய்வதிலிருந்து விலக்குக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு இன்று விசாரணைக்கு வருவதால் அவரது கைதை ரத்து செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது. ஆனால், அந்த வாதம் தள்ளுபடி செய்யப்பட்டது. இதற்கிடையில், நேற்று நள்ளிரவில் ராஜேந்திர பாலாஜி கைதுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த அதிமுகவினர் 100க்கும் மேற்பட்டோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த அதிமுக ஆட்சியில் பால்வளத்துறை அமைச்சராக இருந்தவரும் விருதுநகர் மாவட்ட அதிமுக மேற்கு மாவட்டச் செயலாளருமான கே.டி.ராஜேந்திர பாலாஜி, ஆவின் நிறுவனம் மற்றும் அரசுத் துறைகளில் வேலை வாங்கி தருவதாக ரூ.3 கோடியே 10 லட்சம் மோசடி செய்ததாக புகார் எழுந்தது. இதுதொடர்பாக கடந்த ஆண்டு நவ.15ஆம் தேதி விருதுநகர் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் ராஜேந்திர பாலாஜி மீது வழக்குப்பதிவு செய்தனர்.டிச.17ம் தேதி தமிழக அரசை கண்டித்து அதிமுக சார்பில் விருதுநகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற கே.டி.ராஜேந்திரபாலாஜி, போலீஸார் அவரை கைது செய்ய முயன்றதை அறிந்து தலைமறைவானார்.

அவரை பிடிக்க மாவட்ட எஸ்.பி. மனோகர் உத்தரவின்பேரில் 8 தனிப்படைகள் அமைத்து குற்றப் பிரிவு போலீஸார் அவரைத் தேடி வந்தனர். இதனிடையே தனிப்படை போலீஸாருக்கு ராஜேந்திர பாலாஜி கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டத்தில் பதுங்கி இருப்பதாகவும், பாஜக பிரமுகர்கள் உதவியோடு காரில் வலம் வருவதாகவும் ரகசிய தகவல் கிடைத்தது.இதையடுத்து அங்கு விரைந்து சென்ற போலீஸார் நேற்று பி.எம்.சாலையில் காரில் சென்ற ராஜேந்திர பாலாஜியை மடக்கினர்.

போலீஸாரின் வாகனத்தை பார்த்ததும் தப்பியோட முயன்ற அவரை, போலீஸார் சுற்றி வளைத்து கைது செய்தனர்.இந்நிலையில் அவர் நள்ளிரவு 1.15 மணியளவில் விருதுநகர் அழைத்துவரப்பட்டார். அவரிடம் மதுரை சரக காவல்துறை டிஐஜி காமினி, மாவட்ட எஸ்.பி. மனோகர் உள்ளிட்ட காவல்துறையினர் மூன்று மணி நேரம் விசாரணை நடத்தினர். விசாரணைக்குப் பின்னர் அவர் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே அவருக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

# தமிழகத்தில் ஆன்லைன் சூதாட்டத்துக்கு விரைவில் முற்றுப்புள்ளி: சட்டப்பேரவையில் ஸ்டாலின் உறுதி



ஆன்லைன் சூதாட்டத்திற்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என சட்டப்பேரவையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியளித்தார்.கடந்த அதிமுக அரசு ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடை விதித்த நிலையில் இதுகுறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில் தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.இந்நிலையில் மீண்டும் ஆன்லைன் சூதாட்டம் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது. இதனால் பலரும் ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபடத் தொடங்கி லட்சக்கணக்கில் பணம், நகை ஆகியவற்றை இழந்து வருகின்றனர்.

அவர்களில் பலர் பெருமளவில் கடனுக்கும் ஆளாகியுள்ளனர். தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டை அடுத்த பொம்மனூர் கிராமத்தைச் சேர்ந்த கோகுல் என்ற இளைஞர் தற்கொலை செய்து கொண்டார். அதுமட்டுமின்றி, கடந்த சில நாட்களாக ஆன்லைன் சூதாட்டம் தொடர்பாக 2 தற்கொலைகளும், ஒரு கொள்ளையும் நடந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தவேண்டுமென பல்வேறு அரசியல் தலைவர்களும் தமிழக அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

நடப்பாண்டுக்கான சட்டப்பேரவை முதல் கூட்டம் கலைவாணர் அரங்கில் நேற்று தொடங்கிய நிலையில், சட்டப்பேரவை கேள்வி நேரம் தமிழக வரலாற்றில் முதல் முறையாக நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது.இந்நிலையில் ஆன்லைன் சூதாட்டம் குறித்துப் பேசிய தமிழக முதல்வர் ஸ்டாலின், ஆன்லைன் சூதாட்டத்திற்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். தற்போது, ஆன்லைன் சூதாட்டம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

# பஞ்சாபை தொடர்ந்து மதுரையில் பிரதமர் மோடி பங்கேற்கவிருந்த பொங்கல் விழா ஒத்திவைப்பு: அண்ணாமலை



பிரதமர் மோடி பங்கேற்கவிருந்த பொங்கல் விழா ஒத்திவைக்கப்படுகிறது எனத் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அறிவித்துள்ளார். தமிழகத்தில் பாஜக சார்பில் ஜன.7 முதல் 12ம் தேதி வரை 1,100 இடங்களில் 'நம்ம ஊரு பொங்கல்' கொண்டாட்டம் நடைபெறுகிறது. இதன் நிறைவு விழா மதுரையில் ஜன.12ல் நடைபெறுகிறது. இதில் பிரதமர் மோடி பங்கேற்பார் எனச் சொல்லப்பட்டது.

தமிழ்நாட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 11 மருத்துவக் கல்லூரிகளை, விருதுநகரில் ஜன.12ல் பிரதமர் மோடி திறந்து வைப்பார் என்றும், அந்த நிகழ்ச்சி முடிந்ததும் மதுரை மண்டேலா நகரில் எய்ம்ஸ் மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழா நடந்த இடத்தில் மாலை 5 மணி அளவில் நடைபெறும் பொங்கல் கொண்டாட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.இந்த நிகழ்ச்சி தற்போது ஒத்திவைக்கப்படுகிறது என்று தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கரோனா தொற்று அதிகரிப்பு காரணமாக இந்த நிகழ்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது என்று செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலை தகவல் தெரிவித்துள்ளார்.அப்போது, அரசு நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்பது குறித்து கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அண்ணாமலை, ''அரசு நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்பு குறித்து மாநில அரசுதான் கூற வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, புதுச்சேரியிலும் பிரதமர் மோடி பங்கேற்கும் நிகழ்ச்சி உறுதியாகவில்லை எனப் புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் வல்லவன் தெரிவித்துள்ளார். ஜனவரி 12ம் தேதி புதுச்சேரியில் நடைபெறும் இளைஞர் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்பார் என ஆளுநர் தமிழிசை தெரிவித்திருந்த நிலையில், ''பிரதமரின் வருகை தொடர்பாக மாநில அரசுக்கு எந்த உறுதியான தகவலும் கிடைக்கவில்லை'' என்று ஆட்சியர் வல்லவன் விளக்கம் அளித்துள்ளார்.

ஏற்கனவேமோடி பஞ்சாபில் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவிருந்த நிலையில் விவசாயிகளின் போராட்டம் காரணமாக கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்டுப்பாடுகளை பின்பற்றி பாலமேடு ஜல்லிக்கட்டு: விழா கமிட்டி நிர்வாகிகள் அறிவிப்பு

பாலமேடு ஜல்லிக்கட்டு அரசின் பாதுகாப்பு வழிமுறைகளை பின் பற்றி நடத்தப்படும் என நேற்று நடந்த விழா கமிட்டி கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.அலங்காநல்லூர் அருகே உள்ள பாலமேட்டில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வரும் ஜன.15ம் தேதி ஜல்லிக்கட்டு நடக்க உள்ளது.

இதற்கிடையே கரோனாவை கட்டுப்படுத்த இரவுநேர ஊரடங்கு, ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு என பல்வேறு கட்டுப்பாடுகளை அரசு அறிவித்துள்ளது.இந்நிலையில் பாலமேட்டில் ஜல்லிக்கட்டை நடத்தும் கிராம பொது மகாலிங்க சுவாமி கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது.

கமிட்டியின் தலைவர் மலைச்சாமி தலைமை வகித்தார். செயலாளர் பிரபு,



பொருளாளர் ஜோதிதங்கமணி மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.இதுகுறித்து செய்தியாளர்களிடம் கமிட்டி நிர்வாகிகள் கூறியதாவது: ஜன.15 ம் தேதி பாலமேட்டில் அரசு வழிகாட்டு தலுடன் கூடுதல் பாதுகாப்போடு ஜல்லிக்கட்டு நடைபெறும். இதில் பங்கேற்கும் சிறந்த காளைக்கு ரூ.1.50 லட்சம் மதிப்பில் கன்றுடன் நாட்டு பசுமாடு, சிறந்த மாடுபிடி வீரருக்கு கார் பரிசாக வழங்கப்படும்.

ஜல்லிக்கட்டை தொடங்கி வைக்க முதல்வரை அழைத்து வர வேண்டும் என அமைச்சர் பி.மூர்த் தியிடம் வலியுறுத்தியுள்ளோம். முதல்வரை நேரில் சந்தித்து அழைப்பிதழ் வழங்கப்படும். கரோனா விதிகளுக்கு உட்பட்டு ஜல்லிக்கட்டை நடத்த மடத்து கமிட்டி நிர்வாகம் தயாராக உள்ளது. 650 முதல் 700 காளைகள் மட்டுமே பங்கேற்க அனுமதிக்கப்படும் என்றனர்.

# கனடாவில் எந்தெந்த நகரங்கள் புதிய குடிவரவாளர்களால் விரும்பப்படுகின்றன என்ற விபரங்கள் வெளியாகியுள்ளன



கனடாவில் எந்தெந்த நகரங்கள் புதிய குடிவரவாளர்களால் விரும்பப்படுகின்றன என்ற விபரங்கள் வெளியாகியுள்ளன என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

கனடாவின் புள்ளியியல் துறை இந்த விடயத்தில் செய்த ஆய்வு ஒன்றின் பிரகாரம், கனடாவின் வன்கூவர், ரொரன்றோ மற்றும் எட்மண்டன் ஆகிய நகரங்களையே புதிய குடிவரவாளர்கள், அங்கு நீண்ட நாட்கள் தங்கியிருக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளது.

புதிய குடிவரவாளர்கள் எங்கு அதிகம் தங்க விரும்புகிறார்கள் என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல், புதிய குடிவரவாளர்களை நாட்டுக்கு வரவேற்பதற்கான கொள்கைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு விடயத்தில் தற்போது கனடிய அரசின் பல்வேறு அமைச்சுக்கள் செயலாற்றி வருவதாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

மக்கள் பயணிக்கும் இடங்கள், அங்கு அவர்கள் எந்த கடைகளுக்கு செல்கிறார்கள், என்ன பொருட்கள் வாங்குகிறார்கள் என்பது போன்ற தரவுகளின் அடிப்படையில், எந்தெந்த இடங்கள் புலம்பெயர்வோரை கவர்கின்றன என்பதையும், அவர்கள் சென்ற இடங்களில் தொடர்ந்து நீண்ட காலம் தங்குவதா அல்லது அங்கிருந்து வேறிடத்துக்குச் சென்றுவிடுவதா என்பது போன்ற விடயங்களை எந்தெந்த காரணிகள் தீர்மானிக்கின்றன என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

கனேடிய புள்ளியியல் துறை, இது குறித்து சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வு ஒன்றில், எந்தெந்த நகரங்கள், மாகாணங்களில் கனடாவிற்கு வரும் புதிய குடிவரவாளர்கள் நீண்ட காலம் வாழ்கிறார்கள் என்பது குறித்த விவரங்கள் தெரியவந்துள்ளன. குறிப்பாக 2014ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்கள் இந்த ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

வான்கூவர், ரொரன்றோ மற்றும் எட்மண்டன் ஆகிய நகரங்களிபுதிய குடியேற்றவாளர்கள் நீண்ட காலம் வாழ விரும்புதாக தெரியவந்துள்ளது.



நகர அளவில் பார்க்கும்போது, வான்கூவருக்கு குடிபெயர்ந்த புலம்பெயர்ந்தோர், அங்கு நீண்ட காலம் வாழ்ந்துள்ளார்கள். உதாரணமாக, 2014இல் வான்கூவருக்கு 100 பேர் புதிய குடியேற்றவாளர்களில், அவர்களில் 86 பேர், 2019 வரை, அதாவது ஐந்து ஆண்டுகள் அங்கேயே தொடர்ந்து வாழ்ந்துவந்துள்ளது தெரியவந்துள்ளது.

வான்கூவருக்கு அடுத்தபடியாக, ரொரன்றோவில் புலம்பெயர்ந்தோர் நீண்ட காலம் வாழ்ந்துள்ளார்கள். அதற்கு அடுத்தபடியாக மக்கள் அதிகம் விரும்பிய நகரம் எட்மண்டன்!

குடும்ப உறுப்பினர்களால் ஸ்பான்சர் செய்யப்பட்ட புலம்பெயர்ந்தோர், மற்ற பிரிவு புலம்பெயர்ந்தோரைக் காட்டிலும் அதிக காலம் தாங்கள் குடிபெயர்ந்த நகரங்களிலேயே தங்குகிறார்கள்.

புதிய குடியேற்றவாளர்களில் அநேகர் பெரும்பாலும் தாங்கள் வாழிட உரிமம் பெறும் முன் எங்கு வேலை செய்தார்களோ, அந்த மாகாணத்தில் தங்குகிறார்கள்.

கனடாவில் கல்வி கற்ற அனுபவமும், வேலை செய்த அனுபவமும் புலம்பெயர்ந்தோர் தாங்கள் எந்த இடத்துக்கு செல்வது என்பதை முடிவு செய்வதில் முக்கிய பங்காற்றுகின்றன.

அத்துடன், புதிய குடியேற்றவாளர்களில் எந்த இடத்தில் வேலை செய்கிறார்கள் என்னும் விடயம், அவர்கள் எந்த இடத்தில் நீண்ட காலம் தங்கியிருக்கிறார்கள் என்பதை முடிவு செய்யும் முக்கிய விடயமாக உள்ளது.

மொத்தமாக பார்க்கும்போது, பெரும்பாலானபுதிய குடியேற்றவாளர்களில், தாங்கள் எந்த இடத்துக்கு முதலில் குடிபெயர்ந்துவந்தார்களோ அந்த இடத்திலேயே தங்கிவிடுகிறார்கள் என்று கூறலாம்.

**(By- Arjune)**

# நாங்கள் ஒரு தேசம் என்கின்ற உணர்வை, கொள்கையை, நிலைப்பாட்டை மீளவும் உருவாக்கியது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி – *சுமந்திரன் நா.உ*

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் “சிதைந்து போகின்ற தமிழ் தேசியமும் சிந்திக்காத தலைமைகளும்” என்ற தலைப்பில் 18.12.2021 (சனிக்கிழமை) அன்று கருத்தாய்வு ஒன்று யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கருத்தாய்வில் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், திரு. நிலாந்தன், திரு.ந.வித்தியாதரன், திரு.ம.செல்வன், பா.உ. எம்.ஏ.சுமந்திரன், பா.உ. த.சித்தார்த்தன், மு.பா.உ.எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் திரு.க. அருந்தவபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முன்னுரையை அருட்தந்தை ஜெயபாலன் அடிகளார் வழங்கினார். கருத்தாய்வை வி.எஸ்.சிவகரன் நெறிப்படுத்தினார். இந்தக் கருத்தாய்வில் திரு சுமந்திரன், நா.உ ஆற்றிய உரையின் முதல் பாகம் எழுத்து வடிவில் கீழே தரப்பட்டுள்ளது.

சுமந்திரன் நா.உ: மேடையில் என்னுடன் கூட அமர்ந்திருக்கும் நண்பர்கள் எல்லோருக்கும் மற்றும் நீண்ட நேரம் உரைகளை செவிமடுத்துக் கொண்டிருக்கும் ஆர்வலர் அனைவருக்கும் வணக்கம்!

திரு. சிவாஜிலிங்கம் ஒன்றை ஞாபகப்படுத்தினார். 1949-12-18 தமிழரசுக் கட்சி தாபிக்கப்பட்ட நாள். இன்று 2021-12-18 தமிழரசுக் கட்சியின் 72 ஆண்டு வயதாகிறது. தமிழ்த் தேசியத்தின் பிதாமகன் தந்தை செல்வா என்று அவர் சொன்னார். அதில் ஒரு பெரிய உண்மை இருக்கிறது.

ஐந்நூறு ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு நாங்கள் தேசம் என்கின்ற உணர்வை- ஒரு விவரிப்பை - ஒரு கொள்கை நிலைப்பாட்டை மீளவும் உருவாக்கியது இலங்கை தமிழரசுக் கட்சி. 1949 ஆம் ஆண்டிலே தமிழரசுக் கட்சியை உருவாக்கிய போது தந்தை செல்வா ஆற்றிய சொற்பொழிவு பின்னர் 1951 இல் திருமலை மாநாட்டில் கட்சித் தீர்மானமாக அறிவிக்கப்பட்டது. அந்த நிலைப்பாட்டிலேயே தொடர்ச்சியாகப் பயணித்து வந்திருகிறோம். அந் நிலைப்பாட்டுக்கு எங்களுடைய மக்கள் ஆதரவு 1956 இல் இருந்து தொடர்ச்சியாக இன்று வரை இருக்கிறது.

இடையில் ஒரு காலத்தில் அந்நிலைப்பாடு இன்னும் தீவிரம் பெற்று தனி நாடாக ஆக வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்திருந்தது. ஆனால் சமஸ்டிக் கட்டமைப்பிலே எங்களுடைய பாரம்பரிய பிரதேசங்களிலே எம்மை நாம் நாமே ஆளக்கூடிய ஓர் ஆட்சி முறை அமைக்கப்பட வேண்டும் என்கின்ற கொள்கைக்குக் குறைவாக எந்தக் காலத்திலேயும் எங்களுடைய மக்கள் வாக்களிக்கவில்லை.

அதுவே எங்களது நிலைப்பாடாக தொடர்ச்சியாக இருந்திருக்கிறது. யுத்தம் முடிவடைந்த பிறகு 2010 இல் இருந்து 2020 வரை உள்ள இடைப்பட்ட காலத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் முன்பாக முன்வைத்த கொள்கை நிலைப்பாடு அதுவாக தான் இருந்திருக்கிறது. தொடர்ச்சியாகச் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) சந்தித்த அனைத்துத் தேர்தல்களிலேயும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக முன்வைத்த நிலைப்பாடும் அதுவாகத்தான் இருந்திருக்கிறது. அந்தத் தேர்தல் விஞ்ஞாபனங்கள் அனைத்தையும் வரைந்ததிலே ஒரு பங்காற்றிய எனக்கு அது நன்றாகத் தெரியும்.

சென்ற ஆண்டு நாம் மக்கள் முன்பாக வைத்த நிலைப்பாட்டிலேயும் கூட எமது அரசியல் நிலைப்பாடு என்று தலையங்கம் இட்டுத் தெட்டத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளே பல கட்சிகள் உள்ளன. வெவ்வேறு கால கட்டத்தில் உள்ளே வருவார்கள், பின்னர் வெளியே போவார்கள். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு - யுத்தத்துக்குப் பின்னாலான காலத்திலே - சமஸ்டிக் கட்டமைப்பிலான ஓர் ஆட்சி முறை என்பதிலே எந்தவித சலனமும் இருக்கவில்லை. அப்படியாகவேதான் சொல்லப்பட்டிருக்கிறது.

பலர் பல சரித்திரங்களைச் சொன்னார்கள். வேறு சிலர் இப்படி இப்படியாக இருக்க வேண்டும் என்று சொல்லி அதெல்லாம் இல்லை என்ற தீர்மானத்தைத் தாமாக அறிவித்து விட்டு அமர்ந்திருக்கிறார்கள். அவை எல்லாம் இல்லை என்று அவர்களுக்கு எப்படித் தெரியும் என்று எனக்குத் தெரியாது.

ஒரு இராசதந்திரப் பொறிமுறை எங்களிடையே இல்லை - ஒரு திட்டம் இல்லை என்று அவர்கள் சொல்வதிலே ஒரு நியாயம் இருக்கலாம். ஏனெனில், அது அவர்களுக்குத் தெரியாது. இது தான் எங்களடைய இராசதந்திரத் திட்டம் என்று இந்தக் கூட்டத்தில் வைத்து பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்களோ எனக்குத் தெரியாது. அப்படியாக அறிவிக்க முடியாது என்பது அவர்களுக்கு -அரசியல் விஞ்ஞானிகளுக்குத் - தெரிந்திருக்க வேண்டும்.

இந்த பத்தி எழுத்தாளர்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டு இருப்பார்கள். இது இல்லை - அது இல்லை- இந்தியாவை புறம் தள்ளிவிட்டு அமெரிக்காவுக்குப் போய் விட்டார்கள்! யார் அய்யா சொன்னது இந்தியாவைப் புறம் தள்ளி, அமெரிக்காவுக்கு போய்விட்டோம் என்று? கற்பனையிலே பலர் எழுதிக் கொண்டிருப்பார்கள். கற்பனையிலே பலர் குழப்பிக் கொண்டிருப்பார்கள்.

2011 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்க இராசாங்க திணைக்களத்தால் அழைக்கப்பட்டு - நாங்கள் அங்கு சென்று பேசியதுதான் அதன் பின்னர் இவ்வளவு காலமும் ஜெனிவா தீர்மானங்களுக்கு அடித்தளம் என்பதை சிவாஜிலிங்கம் தெளிவாகச் சொன்னார். அப்போது நாங்கள் இந்தியாவை புறந்தள்ளி விட்டு அமெரிக்காவுக்கு ஏன் போனீர்கள் என்று யாராவது சொன்னார்களா? அப்பொழுது இருந்ததை விட இப்பொழுது கூடுதலாக இந்தியாவின் இணக்கப்பாட்டுடன் தான் இவை எல்லாம் நடைபெறுகிறது. அதை மட்டும்தான் நான் உங்களுக்குச் சொல்லலாம்.

அமெரிக்காவில் கூட ஒவ்வொரு சந்திப்பிற்குப் பிறகும் அல்லது ஒவ்வொரு நாளுக்குப் பிறகும் இந்தியாவுடன் எமது உரையாடல் இருந்திருக்கிறது. வோ'ிங்டனுக்கும் நியூ டெல்லிக்கும் இடையிலே இது சம்பந்தமாக தொடர்ச்சியான உரையாடல் நடைபெறுகிறது. அது தொடர்பில் நீங்கள் எவரும் பதைபதைக்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது. அது எல்லாம் ஒழுங்காகத்தான் நடக்கிறது.

இதற்குள்ளே சிலர் அப்படி வெட்டி ஓடுகிற நோக்கம். ”அய்யய்யோ இவை இந்தியாவை கை விட்டிட்டினம்! நாங்கள் தான் இந்தியாவுடன் நிற்கப் போறோம்” என்கிறார்கள். அதற்கு ஒரு கூட்டணி! அதற்கு செய்தியாளர் சந்திப்புகள்! இந்த இராசதந்திர அணுகுமுறைகள் இந்தக் காலகட்டத்திலே எப்பயாக இருக்க வேண்டும் என்பதை சிந்தித்து அறிவதற்கு அவ்வளவு புத்தி அவசியம் இல்லை.

இன்றைக்குத்தான் ”குவாட்” (ளுஞருயுனு) என்ற நான்கு நாடுகளின் அமைப்பு உருவாகி இருக்கிறது. அமெரிக்காவம், இந்தியாவும், யப்பானும் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் நான்கும் சேர்ந்து இயங்குவது எதற்காக? சேர்ந்து இயங்குவது எதற்காக? 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்ட போது அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே கூட பனிப்போர் இருந்தது.

திரு. சம்பந்தன் நாடாளுமன்றில் ஆற்றிய நீண்ட பேச்சு ஒன்று அந்தக் காலத்தில் செய்தது. அமெரிக்காவுக்கு திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அமெரிக்காவுக்குக் கொடுக்க வேண்டாம் - அவற்றை இந்தியாவுக்குக் கொடுங்கள் என்று தெட்டத் தெளிவாகக் கூறியிருந்தார். அப்படி ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டியதாக இருந்தது. இன்று அப்படி ஒரு நிலைப்பாடு இல்லை. அதைப் பேராசிரியர் கணேசலிங்கம் அவர்களும் சொன்னார். அவர்களுடைய எண்ணங்கள் ஒன்றாக இருக்கிற இந்தச் சூழ்நிலையிலே நாங்கள் இதனை முன்நகர்த்த வேண்டும். (தொடரும்)

***- கனடா நக்கீரன்***

# ஈழத்துத் திருக்கோவில்கள் 980



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையார் கோவில் தெல்லிப்பளை

*"திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் -உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்*
*காதலாற் கூப்புவர் தம் கை."*

இடையரின் கனவிலே வெளிப்பட்ட மருதடி வேர்க்குமிழ், "நான் வெயிலிலும் மழையிலும் அவதிப்படுகின்றேன் நீ நன்கு உறங்குகின்றாயே" எனப் புலப்படுத்தியது. சிலவேளைகளில் மனதின் அடித்தளத்தில் உறைந்து கிடக்கும் எண்ணங்கள் கனவாக வெளிப்படுவதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஆயினும் அவ்வப்போது அடியவர்கள் எண்ணத்தில் எழும் கனவுகளை, இறைவனின் அனுக்கிரகம் அல்லது அருள் என மெஞ்ஞானிகள் கூறியுள்ளனர். மருதடி மரக்குமிழைக் கனவிலே கண்டதும், மரக்குமிழ் இடையரோடு பேசியதும் இடையரைப் பேதலிக்கச் செய்தது. இது இறைவனின் அருள் என்பதில் இடையர் அசையாத நம்பிக்கை கொண்டவராகக் காணப்பட்டார். இவ்வாறான அருளின் வெளிப்பாடாக, மருதடி மரக்குமிழ்பற்றிய கனவினை இடையர் பெருமகனார் ஏற்று, விடிந்ததும் மருதமரத்தினைச் சென்றடைந்தார்.

கனவிலே கண்டவாறு காணப்பட்ட மருதமரக் குமிழை வணங்கி வழிபட்டார். தம்மால் சிறு குடிலைத்தன்னும் மருதமரக்குமிழுக்கு அமைக்கமுடியாத இயலாமையை எண்ணி வருந்தினார். ஆயினும் தனது மனச்சாந்தியின்பொருட்டு, அருகிலே காணப்பட்ட பனைஓலையை எடுத்துவந்து, வேர்க்குமிழில் வெயில் படாதவாறு சாத்தினார். இவ்வாறான ஏற்பாட்டினால் இடையருடைய மனம் ஆறுதல் பெற்றது. இவ்வாறாக மருதடி மரக்குழிழுக்குப் பனைஓலையால் பாதுகாப்பு அளித்தபின், தான்கண்ட கனவை ஊரவர்க்குத் தெரியப்படுத்தினார். ஆனால் அதன்பின்னர் இடையருக்கு என்ன ஆனதென்று எவராலும் அறியமுடியாத நிலையிலே, அவர் எங்கோ சென்றுவிட்டார். இவரது வருகையும், மறைவும் இறைவனுடைய திருவிளையாடலென ஊரவர்கள் எண்ணிக்கொண்டனர்.

மருதமரத்தைச் சார்ந்த கம்மிக்குளத்திற்கு மேற்கே பரந்திருந்த நிலப்பரப்பிலே, விஸ்வ குலத்தவர்கள் வாழ்ந்துவந்தனர். இக்குலத்திலே சைவநெறிச்செல்வராக, அன்பும் பண்பும் கொண்டவராக, நன்னியர் ஆச்சாரி என்பவர் வாழ்ந்து வந்தார். இடையர்மூலம் அவர் கனவிலே மருதமரக்குமிழ் வெளிப்பட்டதையும், அதன் அற்புதங்களையும் அறிந்து வைத்திருந்தார். இக்காரணத்தினால் மருதமரக்குமிழ்மீது மிக்க அன்பும், பக்தியும் கொண்டவராகக் காணப்பட்டார். இதன் வெளிப்பாடாகத் தினமும் மருதமரக்குமிழை வணங்கி வழிபட்டுவந்தார். இதன்பின்னர் அவரது வாழ்க்கையில் நன்மைகள் பல நிகழ்ந்ததோடு, அமைதியும், மகிழ்ச்சியும் நிலவியதை அவதானித்தார். இதனால் மனமகிழ்ச்சிகொண்ட நன்னியர் ஆச்சாரி, மருதமரக்குமிழுக்குக் கொட்டில் அமைத்து, வழிபாடியற்றி வந்தார். மருதமரக்குமிழைத் தமது குலதெய்வமாகக் கருதி போற்றி வழிபட்டார். இவ்வாறான நிலையிலே அவர் வாழ்வு நிறைவு பெற்றது.

நன்னியர் ஆச்சாரியின் மறைவுக்குப் பின்னர், அவரது மகனாகிய வல்லிபுர ஆச்சாரியார், மருதமரக்குமிழின்மீது ஆழ்ந்த பக்தி கொண்டவராகக் காணப்பட்டார். தந்தையார் வேர்க்குமிழ்மீது கொண்ட பக்தியை நன்கறிந்த காரணத்தால், ஊரவர்களின் உதவியோடு மரக்குமிழுக்கு மடாலயம் அமைக்க எண்ணங்கொண்டார். தந்தையாரால் அமைக்கப்பட்ட கொட்டிலை அகற்றி, மடாலயம் கட்டுவதற்கான வேலைகளை ஆரம்பித்தார். மடாலயத்திற்குரிய சுவரை அமைப்பதற்கு அத்திவாரம் வெட்டப்பட்டது. அவ்வேளையில் அங்கு வேலை செய்த பணியாட்களுக்கு உணவெடுத்து வருதவதற்காக, வல்லிபுர ஆச்சாரியார் தமது வீடு சென்றார். மடாலய வேலைகளில் தாமும் பணியாற்றிய காரணத்தால் களைப்புற்றிருந்த ஆச்சாரியர். சற்றுநேரம் கண்ணயர்ந்துவிட்டார்.

ஆழ்ந்த தூக்கத்திலிருந்த ஆச்சாரியார் கனவிலே மரக்குமிழ் வெளிப்பட்டு, "நீ இங்கு உறங்குகிறாய். நான் அங்கு கோடரியால் வெட்டுண்டு வேதனைப்படுகிறேன்" என்று வெளிப்படுத்தியது. தூக்கத்திலிருந்து துடிதுடித்தெழுந்த ஆச்சாரியார், வேர்க்குமிழுக்கு என்ன நடந்ததோ என்ற கலக்கத்தோடு ஓடோடிவந்து, மருதமரக்குமிழை நோக்கினார். அவர் கண்ட காட்சி ஆச்சாரியாரை வேதனைப்படுத்தியது. மருதமர வேர்க்குமிழை உற்றுநோக்கினார். மோதகவடிவிலே காணப்பட்ட வேர்க்குமிழிலிருந்து செந்நீர் வடிந்து கொண்டிருந்தது. செந்நீரைக்கண்டதும் வேதனையால் துடித்தார். என்ன செய்வதென்று அறியாது தவித்தார். இவரது செய்கைகளைக் கவனித்த பணியாளர்கள் திகைத்தனர். அப்பொழுது ஆச்சாரியார் பணியாட்களிடம் தான் கண்ட கனவை எடுத்துரைத்தார்.

பின்னர் விக்னம் தீர்க்கும் விநாயகனே அங்கு எழுந்தருளியிருப்பதாக உணர்ந்து, அவரை வணங்கி வழிபட்டு சுவரமைக்கும் பணி இனிதே நிறைவேற, அருள்பாலிக்குமாறு வேண்டிப் பணிந்தார். அடியவர் குறைதீர்க்கும் விநாயகன் அருளால், சுவர் கட்டும் பணி மீண்டும் ஆரம்பமானது. தாமே நேரில்நின்று மேற்பார்வைசெய்து, மருதமரக்குமிழுக்குப் பங்கம் ஏற்படாது, அத்திவாரம் வெட்டுவித்து சுவர் எழுப்பி, மூடுசாந்தால் கூரையிட்டுக் கருவறையையும் அமைத்தார்.

இவ்வாறாக வருத்தலைவிளானில் எழுந்தருளியுள்ள மருதடிப்பிள்ளையார் ஆலயம் உருவானது. பிள்ளையாரின் அருளையும் அற்புதத்தையும் கேள்விப்பட்ட வருத்தலைவிளான் மக்கள் மட்டுமன்றி, அயல் ஊரவர்களும் விநாயகனை நாடிவரத் தொடங்கினர். வர்த்தலைவிளான் மருதடிப்பிள்ளையாரின் ஆலய வளர்ச்சியும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி அடைந்தது. இவ்வளர்ச்சிக்குப் பலர் காரணிகளாக அமைந்தனர்.

*வளரும்...*

SHIVA DURGA ASTROLOGY CENTER










PRIVATE & CONFIDENTIAL



PANDIT: KRISHNAM RAJU

Solutions & Suggestions on:

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.
Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், வீசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

437-213-3305

# 2022ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி இருக்கும்?


கலாநிதி ராம் தேவலோகேஸ்வரக்குரு
(துன்னாலையூர் சாரதாபீடம்)

வாழ்வில் மனிதனின் அறிவியல் ஒரு எல்லைவரையே செல்லும். எமது செயற்பாடுகளுக்கு எல்லாம் இறைவன் ஏதோ ஒரு வகையில் ஒரு சூட்சும நிலை வைத்திருப்பான். இதை கடந்த இரண்டு ஆண்டுகளாக. உலகமே உணர்ந்து கொண்டு இருக்கின்றது. இதுதான் இறைவன் எனும் உயரியநிலை. பொதுவாகவே ஒரு ஆண்டின் மலர்வு பல எதிர்பார்ப்புகளை எமக்கு ஏற்படுத்தும். எமது வாழ்வில் பல திட்டம், எண்ணம் நமக்கு மேலோங்கி இருக்கும். இதற்கும் நாம் எம்மாலான உழைப்பை கொடுத்துச் செயற்பட்டாலும், கிரஹங்களின் ஆகர்ஷண சக்தியும் நமக்கு மிகவும் பலமாக அமைகின்றன. பிறக்கும் 2022ஆம் ஆண்டு முற்பகுதியிலேயே இரண்டு கிரஹப் பெயர்ச்சியும் நிகழ இருக்கின்றது. வாக்கிய பஞ்சாங்க பிரகாரம் 22.03.2022 லன்று ராகு, கேது எனப்படும் சாயக் கிரஹங்கள் முறையே இடபராசியில் இருந்து மேடராசிக்கு ராகுவும், விருட்சிகராசியில் இருந்து துலாராசிக்கு கேதுவும், பெயர்ச்சி பெறுகின்றன. அதனை தொடர்ந்து 13.04.2022லன்று குருபகவான். குடும்ப ராசியில் இருந்து மீனராசிக்கு பெயர்ச்சி அடைகின்றார். இந்த கிரஹ பெயர்ச்சியின் மூலமாக அனைத்து ராசியினர்க்கும் பலாபலன் மாறுபடும். உலக நிலையில், மாற்ற நிலைகள் அமையும். எனவே நாம் அனைவரும் நமது மரபுகளை, கடமைகளை, பாரம்பரியங்களை, மீறாமல் காத்து செயற்படுவதே இயற்கை நிலைக்கு நாம் கொடுக்கும் மரியாதை. அவரவர், தமக்குரிய பாரம்பரிய சம்பிரதாயம், வழிபாடு, கொண்டு நற்செயல் நேர்மை வழுவாத வாழ்வு இவற்றை நெறிப்படுத்தி செயற்பட்டாலே, எல்லோருக்கும் நல்ல இங்கிதங்கள் சிறப்புகள் மேன்மையாக அமையும். இனி உங்கள் ராசிகளுக்கு எப்படி என பார்ப்போம்.

## மேடராசி (அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)




மிகவும் நேர்த்தியான குணமும், தெய்வ பக்தியும் மிக அதிகம் கொண்ட மேட ராசியினர்க்கு, 2022ஆம் ஆண்டு சற்று சுமாரானதாகவே அமையும். எனவே சற்று பொறுமை நிதானமுடனேயே செயற்பட வேண்டும். 22.03.2022 அன்று உங்களின் ராசிக்கு ராகு ஜென்ம ஸ்தானம் கேது களத்திர ஸ்தானம் 7ஆம் இடமும் அமைகின்றன. அத்தோடு குரு 13.04.2022 அன்று விரயஸ்தானமாகிய 12ஆம் இடம் அமைகின்றார். எனவே எந்த விடயம் எடுத்தாலும் சற்றுப் பிரச்சினைகள் சிக்கல் நிலைகள் அமையும். தொழில் சார்ந்த வேலைப்பளு அதிகமாக இருக்கும். கடன் சிக்கல், பிரச்சினை என்பன திடீரென அமையும். குடும்ப நிலையில் மனச்சஞ்சலம் தேவையற்ற பிரச்சினைகள் என்பன அமையும். திடீர் சுகயீனம் மருத்துவ செலவு என்பன ஏற்படும். பெண்களுக்கு மனச்சஞ்சல நிலை அதிகமாகிருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலைகள் இருக்கும். மாணவர்கள் கல்வி நிலையில் அதிகமான ஊக்கமும், கவனமும் எடுக்க வேண்டும். பொதுவாக உங்களுக்கு 2022ல் சற்றுப் போராட்ட நிலை அதிகமாகவே அமையும். உங்கள் குல தெய்வ வழிபாடும், தவறாக பிதுர்க்கடன் வழிபாடும் மேற்கொள்வது மிகவும் நல்லது பொறுமை நிதானமுடன் செயற்பட்டு உங்கள் நல்ல பலன்களை ஓரளவிற்கு பெற்றுக் கொள்ளுங்கள்.

## இடபராசி (கார்த்திகை 2,3,4ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1ஆம் பாதம்)




எளிதில் தன் எண்ணங்களை வெளிப்படுத்தாது, தன்னுடைய முன்னேற்றத்திற்கு அதிகமாக முயற்சிக்கும், இடபராசி அன்பர்கட்கு 2022ஆம் ஆண்டு எல்லா வகையிலும் மிகவும் அனுகூலமாக நற்பலன்கள் அமையும். தொழில் சார்ந்த நல்ல முன்னேற்றம், பணவரவு என்பன மிகவும் சிறப்பாக அமையும் நிலைகள் ஏற்படும். புதிய முயற்சிகள், நல்ல வெற்றியைக் கொடுக்கும். குடும்ப நிலை சார்ந்த நன்மைகள் அமையும். வெளிநாட்டு பிரயாணங்களை எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் ஏற்படும். திருமணம் போன்ற சுபகாரிய பலன்களுக்கும் இடமுண்டு. 22.03.2022லன்று அமையும் சாயக்கிரஹ பெயர்ச்சி உங்களின் ராசி நிலைக்கு ராகு 12இல் கேது 6ல் அமைவது, மிகவும் சிறப்பு நிலையே. எதிர்பாராத திடீர் நன்மைகள் அமையும். நீண்டகால சிக்கல் நிலைகள் சுமகமாக அமையும். 13.04.2022அன்று குருவின் பெயர்ச்சி உங்கள் ராசிக்கு லாபஸ்தானமாகிய 11ஆம் இடம் அமைவது, எல்லா வகையிலும், மிகவும் சிறப்பான நற்பலன்களைக் கொடுக்கும். அதற்கு ஏற்ப நீங்கள் திட்டமிட்டு நற்பலன்களை பெறலாம். பெண்களுக்கு குடும்ப நிலை சார்ந்த நன்மைகள் அமையும். மாணவர்கட்கு சிறப்பான பலன்கள் ஏற்படும். வீடு, வாகன, சேர்க்கை அமையும். எல்லா நிலையிலும் அதிக நன்மைகள் ஏற்படும். அதற்கு ஏற்ப தர்ம செயல் கொண்டு வெற்றிகாண்க.

## மிதுன ராசி (மிருகசீரிடம் 2ம், 3ம், 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்)




எதையும் சாணக்கியத்தோடு செய்து தன்னிலையை மிகவும் சிறப்பாக காத்து நிற்கும் திறன் கொண்ட மிதுனராசி அன்பர்களே! உங்களின் ராசி நிலைக்கு 2022ஆம் ஆண்டு ஓரளவிற்கு அனுகூலமாக அமையும் நிலையுண்டு. 22.03.2022அன்று அமையும், ராகு, கேது,பெயர்ச்சி உங்களின் ராசி நிலைக்கு 11இல் ராகுவும். 5இல் கேதுவும், அமைகின்றன. இவை சிறு சிறு அனுகூலமான நன்மைகள் கொடுக்கும். கேதுவின் 5ஆம் இட சஞ்சாரம், பூர்வீக சொத்துக்கள் சார்ந்த பிரச்சினைகளை கொடுக்க சந்தான விருத்தி தடைகள் அமையும். ராகுவின் 11ஆம் இட சஞ்சாரம் மூத்த சகோதரர்களுடன் சிறு சிறு மனச்சஞ்சலம், பிரச்சினைகளை கொடுக்கும். எனவே அதற்கு ஏற்ப மிகவும் பொறுமை நிதானமுடன் செயற்பட வேண்டும். 13.04.2022அன்று அமையும் குருப்பெயர்ச்சி உங்களின் ராசிக்கு தொழில் நிலை சார்ந்த அலைச்சல், வேலைப்பளு, இடமாற்றம் போன்ற பலன்களைக் கொடுக்கும். அதற்கு ஏற்ப தொழில் நிலையில் மிகவும் பொறுமை, நிதானம் கொண்டு செயற்படுவது நல்லது. பொதுவாக எந்த விடயம் எடுத்தாலும் சற்று இழுபறிகளும் தாமத நிலைகளும் அமையும். பெண்களுக்கு சற்று மனச்சஞ்சல நிலைகள் அதிகமாக அமையும். மாணவர்களின் கல்வி நிலையில் ஊக்கம் தேவை. தேவையற்ற வீண் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைகள் இருக்கும். குல தெய்வவழிபாடும் பிதுர்கடன் வழிபாடும் செய்து கொள்வது மிக நல்லது. பொறுமையோடு செயற்பட்டு வெற்றி காண்க.

## கடகராசி (புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)




எதிலும் ஒருவித சஞ்சலமான மனநிலையை கொண்டு அவசர முறையினால் பல சிக்கல் எதிர்கொள்ளும் கடகராசியினர்க்கு 2022ஆம் ஆண்டு ஓரளவிற்கு அனுகூல பலன்கள் கொடுக்கும் நிலையுண்டு. 22.03.2022இல் அமையும் ராகு, கேது, பெயர்ச்சியானது, ராகு 20ஆம் இடமும், கேது 4ஆம் இடமுமாக உங்களின் ராசி நிலைக்கு அமைகின்றன. ராகுவின் 10ஆம் இடமானது தொழிசார்ந்த அலைச்சல், சிக்கல், நிலைகளைக் கொடுக்கும். பதவிசார்ந்த மாற்றம், சக தொழிலாளர் எதிர்ப்புகள் என்பன இருக்கும். பணவரவு, சற்று மத்திமமானதாகவே அமையும். கேதுவின் 4ஆம் இட சஞ்சாரம், உடல் நிலை சார்ந்த உபாதைகள், தாயார் வழிச் செலவும், தாயாருக்கும் உடல் நிலை உபாதைகள் கொடுக்கும். மற்றும் 13.04.2022இல் அமையும் குருப்பெயர்ச்சி எதிர்பாராத திடீர் நன்மைகள் அதிஷ்ட பலன்கள் என்பன அமையும் நிலையுண்டு. இந்தக் குருப்பெயர்ச்சியின் மூலம் தொழில் சார்ந்த திடீர் நன்மைகள் என்பன அமையும் நிலைகள் இருக்கும். பெண்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான நன்மைகள் அமையும். குடும்ப நிலை சார்ந்த அனுகூலங்கள் இருக்கும். மாணவர்கள் கல்வி நிலையில் சற்று முயற்சியும் ஊக்கமும் எடுக்க வேண்டும். மற்றும் புதிய முயற்சிகளில் சிறு சிறு இழுபறி நிலைகள் அமைந்தாலும், எதிர்பார்க்கும் நிறைவுகளை பெற்றுக் கொள்ள முடியும். பொதுவாகவே 2022ஆம் ஆண்டில் நீங்கள் அனுகூலமான நன்மைகளைப் பெறக்கூடிய பலன்கள் உண்டு. சஞ்சலமற்ற நிலை கொண்டு நற்பலன் பெறுங்கள்.

## சிம்மராசி (மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)




துணிந்து செயலும், சிந்தனையும், தன்னிலை செயல்நிலை நகர்வும் கொண்ட சிம்மராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு 2022ஆம் ஆண்டில் சற்று நிதானமாகவும் பொறுமையாகவும் செயற்பட வேண்டும். எடுக்கும் முயற்சிகளில் சிக்கல், இழுபறி நிலைகள் இருக்கும். தொழில் சார்ந்த வேலைப்பளு சற்று அதிகமாகவே அமையும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலை இருக்கும். 22.03.2022அன்று அமையும் ராகு, கேது, பெயர்ச்சி, ராகு 9ஆம் இடம், கேது 3ஆம் என அமைவது ஓரளவிற்கு சிறு சிறு நற்பலன்களை எதிர்பாராது அதிஷ்ட நிலைகளை கொடுக்கும் பலன் இருக்கும். 13.04.2022 அன்று அமையும் குருப்பெயர்ச்சி உங்களின் ராசிக்கு அட்டமஸ்தானம் எனப்படும் 8ஆம் இடம் அமைவது சற்று எதிர்பாராத சிரம நிலைகளைக் கொடுக்கும். உடல் நிலையில் திடீர் சுகயீனம் அமையும். பணவரவு சற்று மத்திமமானதாகவே இருக்கும். தொழில் சார்ந்த வேலைப்பளு அதிகமாகவே இருக்கும். குடும்ப நிலையில் சற்றுக் குழப்பமான நிலைகள் அமையும். கடன் பிரச்சினைகளில் சிக்கல் இழுபறிகள் அமையும். பெண்களுக்கு சற்று மத்திமமான சுமாரான பலனே இருக்கும். மாணவர்களின் கல்வி நிலையில் அதிகமான முயற்சியும், நிதானமான நிலையும் மிக நல்லது. பொதுவாகவே 2022ஆல் ஆண்டில் உங்களில் ஒவ்வொரு செயற்பாட்டிலும் நிதானத்தோடு செயற்பட்டு அனுகூலமான வெற்றிகளைப் பெற முயற்சியுங்கள்.

## கன்னிராசி (உத்தரம் 2,3,4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2ஆம் பாதம்)




மிகவும் அமைதியாக இருந்து ஆளுமையான செயல்களை செய்யும் சாணக்கியம் கொண்ட கன்னிராசி அன்பர்களே! 2022ஆம் ஆண்டு உங்கள் ராசிநிலைக்கு எப்படி அமையும் என எதிர்பார்ப்பீர்கள். ஓரளவிற்கு நல்ல அனுகூலங்களை பெறக்கூடிய நிலைகள் இருக்கும். 22.03.2022அன்று அமையும் ராகு, கேது, பெயர்ச்சி உங்களுக்கு ராகு 8ஆம் இடமும், கேது 2ஆம் இடமும் அமைகின்றன. ராகுவின் 8ஆம் இடம் உடல்நிலை உபாதைகள், இடையிடையே கொடுக்கும் பலன் இருக்கும். வேலைப்பளு அதிகமிருக்கும். மனநிலை சோர்வு இருக்கும். கேதுவின் 2ஆம் இடம் வார்த்தை பிரயோகத்தின் மூலமாக வீண் சச்சரவுகளை தரும். குடும்ப நிலையில் சிறு சிறு சிக்கல் நிலையிருக்கும். 13.04.2022இல் அமையும் குருப்பெயர்ச்சி எல்லா வகையிலும் குடும்ப மகிழ்வை கொடுக்கும். சுபகாரியம் எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் நிறைவானதாக இருக்கும். உறவினர்களின் மூலம் நன்மைகளும் உதவிகளும் கிடைக்கின்ற நிலை இருக்கும். தொழில் நிலை சார்ந்த சிறுசிறு திடீர் நன்மைகள் இருக்கும். புதிய முயற்சிகளிலும் அனுகூலமான நிலைகள் அமையும் பலன் இருக்கும். பெண்களுக்கு நன்மையும் சிறப்பும் அமையும். மாணவர்கட்கு நல்ல முன்னேற்றம் இருக்கும். எனவே 2022ஆம் ஆண்டில் உங்களின் எதிர்பார்ப்புகளுக்கு உரிய பலன் அனுகூலமாக அமைய இடமுண்டு. அதற்கு ஏற்ப குல தெய்வ வழிபாடு பிதுர்கடன், என்பன நிறைவாக செய்து நலம் பெறுக.

(அடுத்த வாரம் தொடரும்)

# அன்பின் தொனி - 636

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் - Be Holy**

**பரிசுதம் என்றால் என்னத்தைக் கருதுகிறோம்?**

### D. அன்பும் நீதியும் சிலுவையில் வெளிப்பட்டது

தேவ குமாரனாகிய இயேசு எமது பாவங்களுக்காக தாமே நமக்குப் பதிலாக சிலுவையிலே மரித்ததினால் தேவனுடைய அன்பும் அவருடைய நீதியான நீயாயத்தீர்ப்பும் வெளிப்பட்டன. பாவத்திற்குத் தண்டனையாக அவருடைய நீதி இரத்தம் சிந்துதலை எதிர்பார்க்கிறது, அவரது அன்பே அவரது இந்த எதிர்பார்ப்பை தமது குமாரன் இரத்தம் சிந்திய மரணத்திற்கூடாக நடப்பித்துக் காண்பித்தது.

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். - **யோவான் 3: 16-17**

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம். - **ரோமர் 5: 8-11**

### E. சிலுவை உலக வரலாறின் மையமாக இருக்கிறது

இயேசு கிறிஸ்துவின் கல்வாரி சிலுவை மரணம், இந்த உலகில் மனுக்குல ஜீவியத்தின் மைய அம்சமாக அமைந்திருக்கிறது. முதல் மனுஷன், மனுஷி ஆகிய ஆதாம் ஏவாள் பாவம் செய்த அந்தக் கணத்திலிருந்தே, இயேசு சிலுவையில் மரிக்க வேண்டுமென்பது தேவனால் திட்டமிடப்பட்டிருந்தது. இதைக்குறித்து ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தில் குறிப்பிட்டு எழுதியிருப்பதை நாம் கவனிக்கக்கூடியதாய் இருக்கிறது. தேவன் தாம் வாக்குப்பண்ணியதை, மனிதர் மீட்ப டையும்படி சிலுவையில் செய்து முடிப்பார் என்று அந்த நாள்முதலே மனுக்குலம் விசுவாசத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. இன்று நாம் எமக்குமுன் நடந்தவற்றை திரும்பிப் பார்த்து, சிலுவையில் இயேசு நமக்காகச் செய்து முடித்ததை விசுவாசித்து, பாவ மன்னிப்பையும், புது வாழ்வையும் இலகுவாகவும், இலவசமாக பெற்றுக்கொள்கிறோம்.

### இயேசு சிந்திய இரத்தம்

கல்வாரி சிலுவையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தியதின் மூலமாகவே நாம் நமது பாவங்களிலிருந்து மன்னிப்பைப்பெற்று விடுதலை பெறுகிறோம். அதன் மூலம் தேவனுடைய பிரசன்னத்தில் ஏற்றுக்கொள் ளப்படும் தகுதியை அடைகிறோம்.

நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும், இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது. - **எபிரேயர் 9: 22**

அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். - **எபிரேயர் 13: 12**

நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களறநம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென். - **வெளிப்படுத்தல் 1: 6**

குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. - **1 பேதுரு 1: 1**

அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென் போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். - **1 யோவான் 1: 7-9**

### A. இரத்தத்தில் உயிர் இருக்கிறது

ஒரு மனிதன் பாவம் செய்யும்போது மரணத்தைச் சம்பாதித்துக் கொள்கிறான். "பாவத்தின் சம்பளம் மரணம்" இயேசு நமக்குப்பதிலாக, நமது இடத்தில் சிலுவையில் தமது இரத்தத்தை சிந்தி மரித்ததின் மூலம் எமக்கு வரவேண்டிய தண் டனையைச் செலுத்தித் தீர்த்திருக்கிறார். பாவ நிவாரண பலியாக, நமது பாவ நிவிர்த்திக்காக, சிலுவையில் இயேசு இரத்தம் சிந்தி தமது ஜீவனை விட்டார். இதன் நிமித்தம் நாம் ஆண்டவரோடு ஒன்றுபட முடிந்தது. நாம் இனிமேலும் தேவனுக்கு விரோதியாய் இராமல் அவரது நண்பராகவும், அவரது குமாரர், குமாரத்திகளாகவும் இருப்போம் என்பதை அவரது இரத்தம் உறுதிப்படுத்துகிறது. விசுவாசத்தின் மூலம் இயேசு நமக்காக சிலுவையில் செய்து முடித்ததை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது, நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக் காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன், ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. - **லேவியராகமம் 17: 11**

தொடரும்...




# நெருக்கம் அதிகரிக்கும் இரகசியம்

உணர்ச்சிக் கொந்தளிப்புகள்
ஓம்காரீஸ்வரர் மலைக்குகைகளில் தவம் செய்து கொண்டிருந்த காலம் அது ஒரு நாள் மாலை பொழுது முழுதாய்ச் சாய்ந்த மங்கலான வெளிச்சத்தில் இயற்கையை ரசித்தபடி சின்ன மலைக்குன்றில் அமர்ந்திருந்தேன்.

ஆள் நடமாட்டமே இல்லாத அந்தப் பகுதியில் தூரத்தில் இருக்கும் மரத்தடியிலிருந்து ஒரு வயதானவர் கம்பளியை போர்த்திக் கொண்டு என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

மனித நடமாட்டத்தையே பார்க்க முடியாத அந்தப் பகுதியில் புதிதாய் ஒருவரை கண்டதும் ஆச்சரியமடைந்தேன்.

யார்அவர்? அவருக்கு என்ன வேண்டும்? வழிதவறி இங்கு வந்துவிட்டாரோ?‘ என சிந்தித்தப்படி குன்றிலிருந்து குதித்தேன்.

குதித்தபின்தான் தெரிந்தது

அது மனிதர் அல்ல. கரடி!

பொழுது சாயும் வேளையில் இருள் அதிகமாக இருந்ததால் இரண்டு காலில் நடந்து வந்த கரடி மனிதன்போல தென்பட்டது. அருகே பார்த்த பிறகுதான் கரடி என்பதே புரிந்தது. ஆனால் இப்போது என்ன செய்ய முடியும்.

எனக்கும் கரடிக்கும் சில அடிகள் மட்டுமே இடைவெளி இருந்தது. என் உடலை கரடியிடமிருந்து காப்பாற்ற எந்த வழி வகையும் எனக்கு அப்போது புரியவில்லை.

காரணம் முன்னால் கரடி பின்னால் பாறை!

அந்த நிமிடத்தில் என்னுள் பதட்டம் இல்லாமல் இருக்க முடிந்ததால் உணர்ச்சி கொந்தளிப்பு இல்லாமல் இருந்ததால் தெளிவாய் என்னால் யோசிக்க முடிந்தது. தளர்வாய் நிதானமாய் இருக்க முடிந்தது.

என்னால் எதுவும் செய்ய முடியாது என்பது ஆழமாய்ப் புரிந்ததால்... அந்தக் கரடியை நேருக்கு நேராக எந்தச் சலனமுமில்லாமல் பார்த்தேன்!

சில நொடிகள் கரடியும் என்னைப் பார்த்தது!
பின் தலையை இடது புறமும் வலது புறமும் ஆட்டிவிட்டுச் சட்டென திரும்பிச் சென்றது.

அதெப்படி அந்தக் கரடி என்னை எதுவும் செய்யாமல் சென்றிருக்கும்!‘என்று உங்களுக்கு எப்படி இப்போது ஆச்சரியமாக இருக்கிறதோ அப்படித்தான் எனக்கும் அப்போது ஆச்சரியமாக இருந்தது!
ஒரு சின்ன கதை...

ஒரு ஜென் ஞானி சீடர்களோடு அமர்ந்து சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்துக்குள் திடீரென மிகப்பெரிய ராஜநாகம் ஒன்று புகுந்து விட்டது. ராஜநாகத்தைப் பார்த்த பீதியில் கூட்டம் கலைந்தோடியது.
தப்பித்தோடும் சீடர்களோடு ஜென் ஞானியும் வேக வேகமாக ஓடினார்.

எப்போதும் நிதானத்தோடு அமைதியின் உச்சத்தில் வாழும் ஞானியும் தங்களைப் போலவே தப்பியோடுவது சீடர்களுக்கு மிகவும் புதிரான ஒன்றாகத் தோன்றியது. சந்தேகத்தைக் கிளப்பியது.

கடைசியாக ஒரு மரத்தடிக்கு வந்து எல்லோரும் ஓய்வாக அமர்ந்ததும் ஒரு சீடன் நாங்கள் பயந்தோடுவது நியாயமானது. ஞானமடைந்த நீங்களும் பயந்தோடினால் அப்புறம் உங்களுக்கும் எனக்கும் என்ன வித்யாசம்?“ என படபடக்கும் குரலில் கேட்டான்.

ஜென் ஞானி “நீ பயந்தோடினாய். நான் தப்பித்தோடினேன்.

நான் உடலைக் காப்பாற்ற ஓடினேன். நீ பீதியால் தூண்டப்பட்டு ஓடினாய்.. அதனால்தான் நான் ஓடும்போதும் இங்கு வந்த பின்னும் நிம்மதியாகவே இருக்கிறேன். நீ இன்னும் படபடப்பிலேயே இருக்கிறாய் என்றார்.

உடலைக் காப்பாற்றுவதற்காகச் சிந்தித்துச் செயல்படுவதும் தப்பிப்பதும் நம் தெளிவின் வெளிப்பாடு.

இது தேவையான நடவடிக்கை. அவசர அபாய சூழ்நிலை உருவானதும் சரியா-கச் சிந்திக்க முடியாமல் பீதி தூண்ட
தப்பித்தோடுவது மனக்குழப்பத்தின் வெளிப்பாடு உணர்ச்சி கொந்தளிப்பின் வெளிப்பாடு இது நரம்பு மண்டலத்திற்குக்
கெடுதி. இதனால் சக்தி விரயமாகும். மனிதன் இதிலிருந்து மீள வேண்டும்.

உடலைக் காப்பாற்றுவதற்காக சிந்தித்து செயல்படுவதும். தப்பிப்பதும் நம் தெளிவின் வெளிப்பாடு. இது தேவையான
நடவடிக்கை.

உடலின் ராசாயன மாற்றங்களுக்கும்
உணர்வுக்கும் நேரடி தொடர்பு உண்டு

ஓம்காரீஸ்வரர் மலையில் கரடி என்னைத் தாக்காமல் சென்றது எப்படி?‘ என்ற அன்றைய கேள்விக்கு...
சமீபத்தில் அறிவியல்பூர்வமான விளக்கம் ஒன்றை படித்தேன். விலங்குகளை வளர்ப்பது பற்றி மிக அழகாக விளக்கும் புத்தகம் அது.

மனிதர்களைப் போன்றே விலங்குகளுக்கும் உள்ள தனிப்பட்ட உணர்வுகள் குணங்கள் விருப்பங்கள் பற்றி அப்புத்தகத்தில் அழகாய் விளக்கியிருந்தார்கள்.

நம் உடலில் இருந்து வெளிப்படும் ஒரு குறிப்பிட்ட வாசனைதான் ஒரு விலங்கு நம்மைத் தாக்குவதற்குக் காரணம்.

பயம் நம்மைப் பற்றியதும் நம் உடலுக்குள் பல மாற்றங்கள் நிகழ்கிறது. பயம் வரும்போது நம் உடலில் இருந்து வெளிப்படும் குறிப்பிட்ட வேதிப்பொருளின் வாசனை அருகே உள்ள மிருகத்தை தூண்டுகிறது.

விளைவு? மிருகங்கள் மனிதனைத் தாக்குகிறது“ எனக் குறிப்பிட்டிருந்தார்கள்.

தொடர்ந்து செய்த தியானங்கள்
என்னுள் நிதானத்தை முழுமையாக
மலரச் செய்திருந்தது.

பயத்தாக்குதல் இல்லாத ரம்யமான உணர்வு நிலையிலேயே வாழ ஆரம்பித்த பின்தான் இச்சம்பவம் நிகழ்திருக்கிறது.
கரடியைப் பார்த்ததும் என்னுள் பயத்தாக்குதல் நிகழவில்லை.

உடலில் பயத்தாக்குதல் நிகழாத அளவுக்கு நிதானத்தை நம்முள் பெருக்கி விட்டால்... நாமும் நம்மைச் சுற்ற
இருப்பவர்களும் பாதிக்கப்படமாட்டோம். நம்மையும் மற்றவரையும் சங்கடத்தில் ஆழ்த்தும் தேவையற்ற
வேதிப்பொருட்களும்ஹார்மோன்களும் நம்முள் சுரக்காது.
பதஞ்சலி யோக சூத்திரம் சொல்லும் அருமையான வாழ்வியல் தத்துவம் ஒன்று. வன்முறை துளியுமில்லா மனிதனின் அருகாமை மிருகங்களைக்கூட ஆனந்தமடையச் செய்யும்.

(தொடரும்...)




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com


(சென்ற வார தொடர்ச்சி) (அத்தியாயம் 38)

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவன் பழையாறைக்கு திரும்பும் பயணம்

அப்பொழுது ‘நான் மதுராந்தக தேவரோடு வந்த நிமித்தக்காரன் ஒற்றன் அல்ல‘ என்றான். ‘இவன் பொய்யன் இவனை சிறைப்பிடியுங்கள்’ என்றான் பினாகபாணி. மக்களோ குழப்பத்தில் ஆழ்ந்தனர். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியான் அங்கே வந்தான். ‘யார் அந்த நிமித்தக்காரன்? இளவரசி அழைத்து வரச் சொன்னார்’ என்றார். வந்தியத்தேவனின் மனம் குளிர்ந்து மகிழ்ந்தது. பினகபாணியோ ‘இல்லை இவன் ஒற்றன்’ என்றான். ஆனால் ஆழ்வார்க்கடியானோ, ‘இல்லை இவன் நிமித்தக்காரன்’ என்றான். ‘சரி நிமித்தக்காரன் என்றால் அதை நிருபித்துக் காட்டு’ என்றான் பினகபாணி. ஆழ்வார்க்கடியான் தன் கண் ஜாடையால் குதிரையில் வரும் காவல்காரர்களைக் காட்டினார். உடனே வந்தியத்தேவன் ‘இதோ இந்தக் காவலர்கள் துக்கச் செய்தி கொண்டு வருகிறார்கள்’ என்றான். காவலர்கள் சனக் கூட்டத்தை நெருங்கியதும் ‘எங்கள் இளவரசர் பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கிவிட்டார்.’ என்றனர். சனங்களோ பெரும் துயரத்தில் மூழ்கி புலம்பத் தொடங்கினர். அந்த வேளை ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான். அப்பொழுது வந்தியத்தேவன் ‘அப்பனே நீர் சமய சஞ்சீவியாக என்னைக் காத்தாய்’ என்றான். ‘இது தான் எம் தொழில்’ என்றான் ஆழ்வார்க்கடியான். பின்னர் நீல நிற ஓடைப் பக்கம் வந்தனர். அங்கு ஒரு ஓடம் தென்பட்டது. அந்த ஓடத்தில் மாதரசி குந்தவை இருந்தாள். அவளைக் கண்ட வந்தியத்தேவன் மெய் மறந்து, உள்ளம் குளிர்ந்து நின்றான். அதே வேளை தன் அன்னையை பார்கச் சென்றார் இளவரசர் மதுராந்தகர். அவர் அன்னையோ தன் மருமகள் சுகமா, மாமனார் வீட்டில் யாவரும் நலமா? தனாதிகாரி வீட்டில் யாவரும் சுகமா? என விசாரித்தார். சக்கரவர்த்தியின் நிலை எப்படியிருக்கிறது? புறப்படுமுன் அவரைப் பார்த்தாயா? என்றார். இளவரசரோ ‘அவர் உடல் நிலையும், மனநிலையும் நலிந்தே இருக்கிறது குற்றம் செய்தவர்கள், அநீதி செய்தவர்கள், பிறர் உடமையை பறித்தவர்கள் மன வேதனை கொள்வது இயல்புதானே’ என்றார். அதற்கு செம்பியன் மாதேவி அவர் என்ன குற்றம் செய்தார் யாருடைய உரிமை, உடமையை அபகரித்தார்? என்று கேட்க ‘நான் இருக்க வேண்டிய சிம்மாசனத்தில் இத்தனை வருடங்களாக அவர் அமர்ந்து இருப்பது தான் பெரிய குற்றம் அதற்கு என்னைப் பெற்ற அன்னையும் துணை போகிறார்’ என்றார் இளவரசர். அதற்கு செம்பியன் மாதேவி ‘மகனே யார் உனக்கு துர் போதனை செய்தார்கள்?’ என்றார். ‘நியாயமாக எனக்கே உரிய சோழ சிங்காசனததை நான் ஒரு நாளும் கைவிடமாட்டேன். சிவபதம் அடைந்த என் தந்தை வந்து சொன்னாலும் கேட்கமாட்டேன் கரிகால் பெருவளத்தான் அணிந்திருந்த மணி மகுடம் எனக்கே உரியது’ என்றார். அப்பொழுது அரண்மனை வாசல் அருகே பெரும் ஆரவாரம் கேட்டது. ஓலக்குரலும், சாபக்குரலும், கோபக்குரலும் கேள்விக் குரலும் ஓங்கி ஒலித்தன. இந்தப் பேரொலிகளைக் கேட்டு, ‘மகனே சோழ சாம்ராட்சியத்திற்கு ஏதோ கேடு வந்துவிட்டது. நான் அரண்மனைக்கு வெளியே சென்று என்ன விடயம் என்று தெரிந்து வருகிறேன்’ என்று கூறி எழுந்து சென்றார்.

ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் குந்தவையைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனை நோக்கி ‘இளைய பிராட்டி வெகு நேரமாக உனக்காக காத்திருக்கிறார். அவரிடம் சென்று நீ கொண்டு வந்த நல்ல செய்தியை முதலில் சொல்’ என்றார். அதைக் கேட்டு ‘இது என்ன எப்படி இவருக்கு தெரியும்? இவர் என்னிடம் கேட்காமலே எல்லாவற்றையும் தெரிந்து கொள்கிறார்’ என்று நினைத்தபடி நின்றான். ஆழ்வார்க்கடியான் ‘நான் திரும்பிப் போகிறேன்’ என்று சென்றான். வந்தியத்தேவன் குந்தவையின் முகத்தைப் பார்த்த வண்ணம் ஊமையாக நின்றான். தான் என்ன செய்தி கொண்டு வந்தேன், எதற்கு வந்தேன் என்பதை எல்லாம் மறந்து குந்தவையின் திரு முகத்தைப் பார்த்த வண்ணம் நின்றான். குந்தவை ‘என்ன நிமித்தக்காரரே படகை திருப்பிக் கரைக்குப் போகலாமா?’ என்றார். ‘இளவரசரை அழைத்து வந்தீரா? எங்கே விட்டு வந்தீர்? அவர் சுகமாக இருக்கிறாரா? யாரிடம் விட்டு வந்தீர்? என்பதை முதலில் சொல்லும்’ என்றார். அப்பொழுது வந்தியத்தேவன் ‘தாங்கள் ஒப்படைத்த காரியத்தை பல தடைகளைத் தாண்டி, இன்னல்களை எதிர் கொண்டு வெற்றிகரமாக முடித்து விட்டேன் இளவரசரை ஓடக்காரப் பெண் பூங்குழலியிடமும், சேந்தன் அமுதனிடமும் விட்டு விட்டு வந்தேன். அவர்கள் இளவரசருக்காக உயிரை கொடுப்பார்கள் அவருக்கு கடும் சுரம் தான் ஆனால் இளவரசரை அவர்கள் காப்பாற்றுவார்கள்’ என்றான். இவ்வாறாக வந்தியத்தேவன் குந்தவையிடம் கூறிக் கொண்டிருக்கையில் மக்களின் ஓலக் குரல்கள் ஒலித்தன. குந்தவையின் தோழி வானதி சோகக் கடலில் ஆழ்ந்திருந்தாள். அதனால் மற்றைய தோழியர் குந்தவையைத் தேடினர். அரண்மனையில் அவர் இல்லாததால் ஓடைப் பக்கமாக வந்து தேடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது வாரணி அரண்மனைத் தோழி குந்தவையைக் கண்டதும் அங்கு ஓடி வந்தாள். ‘பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கிவிட்டடாராம்’ என்று பெரும் துக்க செய்தியை சொல்லி விட்டு கதறி அழுதாள். மற்றய பெண்களும் ஓ வென்று அழுதார்கள் இதைக் கேட்ட வானதி உணர்வின்றி அசையாது நின்றாள். இதைப் பார்த்த மற்றைய பெண்கள் உன் துர் அதிஸ்ரம் இளவரசர் கடலில் மூழ்கி விட்டார் என்று கூறியதும் அவளால் பொறுக்க முடியவில்லை. ஓடக் கரைப் பக்கமாக ஓடினாள். கொடும்பாணர் சிறிய வேளாளர் இவளின் தந்தை இவர் கொடிய போர்களில் ஈடுபட்டிருந்தார்.ெ இவள் அன்னை வானதி பிறந்து சில காலத்தில் காலமானார். வானதியை அவர் தந்தை வளர்த்து வந்தார். அவரும் வீர பாண்டியனை துரத்திக் கொண்டு ஈழத்திற்கு சென்று போர் செய்தார். அப்போரில் உயிர் நீத்தார். இவரை சரித்திரம் ஈழத்துப் பட்ட சிறிய வேளாளர் என்கிறது. தாய் தந்தையை இழந்த வானதி கடும் துயரத்தில் வாழ்ந்து வந்தாள். பழையாறை அரண்மனைக்கு போன பிறகு குந்தவையின் அன்பு வானதிக்கு ஆறுதலும், குதுாகலமும் அளித்தன. குந்தவையின் நடை, உடை, பாவனை, சாதுரியப் பேச்சு வானதியை மாற்றியது. அத்துடன் பொன்னியின் செல்வரை பார்க்க நேர்ந்ததும் அவள் மனம் இளவரசரையே நாடியதும் அவளின் வாழ்க்கைப் போக்கை மாற்றியது. குடந்தை சோதிடர் சொன்ன சோதிடம் அவள் பொன்னியின் செல்வரையே தன் கணவனாக நினைக்கத் தோன்றியது. இவ்வாறு வானதி பொன்னியின் செல்வரை அன்பு செய்தாள் அவரின் இந்த இழப்பு அவளால் தாங்க முடியவில்லை. ‘நானும் தண்ணீரில் மூழ்கி அவருடன் சங்சகமம் ஆவேன்’ என்றபடி தண்ணீரில் குதிக்கச் சென்றாள். அப்பொழுது படகில் குந்தவையும், வந்தியத்தேவனும் இருப்பதைக் கண்டாள். அவர்கள் வந்தால் தன்னைத் தடுத்து விடுவார்கள் என்று அடுத்த கணமே தண்ணீரில் விழுந்தாள். படகில் வந்து கொண்டிருந்த குந்தவை தண்ணீரில் விழுந்தது வானதி என்று கண்டு உடனே அவளைக் காப்பாற்றி தன் மடி மீது வைத்து அவள் மயக்கம் தெளியும் வரை காத்திருந்தாள். ‘எம் படகு இங்கு இல்லை எனின் இவள் கதி என்னவாயிருக்கும் இவள் தண்ணீரில் விழுந்ததை நாம் கண்டிருக்காவிட்டால் ஐயோ! அதை நினைக்க என் மனம் வலிக்கிறது’ என்றாள் குந்தவை. அப்பொழுது வானதிக்கு மயக்கம் தெளிந்தது. ஆனால் அவள் கண்களை மூடி குந்தவை மடியில் படுத்திருந்தாள். ‘இளவரசர் மீது இந்தப் பெண்ணிற்கு ஆசை அவள் உள்ளத்தில் வேரூன்றிக் கிடக்கிறது’ என்றார். அப்போது வந்தியத்தேவன், ‘இது நல்லதல்ல அதனால் துன்பமும், துயரமும் தான் இவளிற்கு மிச்சம்’ என்றான். ‘ஏன் இவளை விட உயர் குலப் பெண் வேறு யார் அருள்மொழிக்கு தகுந்தவர்கள் இருக்கிறார்கள்? அவள் ஆசையும் நிறைவேறும்’ என்றார் குந்தவை. ‘அதற்கு வந்தியத்தேவன் அது தான் இல்லை அவள் ஆசை நிறைவுறாது’ என்றான். ‘அப்படியானால் இளவரசர் நாகபட்டினத்ததில் சூடாமணி விகாரத்தில் இருக்கிறார் என்று சொன்னது பொய்யா?’ என்று குந்தவை கேட்க, வந்தியத்தேவன், ‘இளவரசர் அங்குதான் இருக்கிறார். ஆனால் அவர் உள்ளத்தில் அந்த ஓடக்காரப் பெண் இருக்கிறாள்’ என்றான். ‘இது என்ன இந்த ஓடக்காரப் பெண் உலகாளப் பிறந்தவனை மணக்க முடியுமா?’ அதற்கு வந்தியத்தேவன், ‘அந்த ஓடக்காரப் பெண் பூங்குழலி என்னை இலங்கைக்கு கொண்டு சேர்த்தவள். அவள் தான் என்னையும், இளவரசரையும் கடலில் இருந்து காப்பாற்றியவளும் இளவரசரை சூடாமணி விகாரத்திற்கு கூட்டிக் கொண்டு போயிருப்பவளும் அவளேதான்!’ என்றான். இவற்றையெல்லாம் தன் காதுகளால் கேட்டுக் கொண்டு கண்களை மூடியிருந்தாள் வானதி. இளவரசர் சூடாமணி விகாரத்தில் இருக்கிறார் என்ற செய்தி அவளின் உள்ளத்தில் எரிந்த நெருப்பை அணைத்தது. பூங்குழலி செய்யும் அன்பு அவள் உள்ளத்தை உடைத்தது. ‘இது என்ன வேதனை என் அன்பின் ஆழத்தை எப்படி அவருக்கு காண்பிப்பேன்’ என்று மனம் வருந்தினாள் வானதி. வந்தியத்தேவன் ஈழத்தில் நடந்தவைகளையும், கடற் பயணத்தின் போது நடந்த யாவற்றையும் குந்தவைக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். ‘ஈழநாட்டில் இளவரசரைக் காப்பாற்றிய பெண்ணிற்கும் பழுவூர் ராணி நந்தினிக்கும் தோற்றத்தில் எத்தனை ஒற்றுமை! அதை என்னால் நம்பவே முடியவில்லை’ என்றான். அப்பொழுது வானதி கண்களைத் திறந்தாள். ‘வானதி எப்படி இருக்கிறது?’ என்றார் குந்தவை. ‘எனக்கு ஒன்றுமில்லை உங்களிற்கு சிரமம் தந்துவிட்டேன்’ என்றாள் வானதி. அவ்வேளை ஆழ்வார்க்கடியான் அங்கு ஓடி வந்தான். ‘தேவி இளவரசர் கடலில் மூழ்கிய செய்தியால் துயர் கொண்டு, மக்கள் கலக்கம் அடைந்து கலகம் செய்கிறார்கள். தாங்கள் உடனடியாக அரண்மனை வாசலிற்கு வந்து சனங்களிற்கு சமாதானம் சொல்ல வேண்டும்’ என்றான். பழையாறை மாளிகையின் முன் புறம் ஒரு பிறை வடிவான விசாலமான இடமாக இருந்தது.



அந்த நிலா முற்றத்தில் சற்று பெரிய உயரமான மதில் சுவர்கள் காணப்பட்டன. அந்த நிலா முற்றத்திற்கு மூன்று வாயில்கள் உண்டு. சில வாயில்களில் அரண்மனை சேவகர்கள் சேவை புரிந்தனர். இந்த நிலா முற்றத்தில் ஆயிரக் கணக்கான சனங்கள் சேர்ந்திருந்தனர். பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கிய துயரச் செய்தியைத் தாங்க முடியாமல் சோக முகங்களுடன் அழுகை ஒலிகளும், கூக்குரல்களும், கோபக் கனல்களுமாக அங்கு காட்சி தந்தது. செம்பியன் மாதேவி தன் மகன் மதுராந்தகருடன் பேசிக்கொண்டிருந்த போது கேட்ட பெரும் கூச்சலால் உடனே அவர் நிலா முற்றம் நோக்கி வந்தார். தெய்வீகம் பொருந்திய அவர் முகத்தைப் பார்த்த சனங்கள் அமைதி கொண்டனர். ஆரவாரம் அடங்கியது எல்லோரும் அவர் என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலுடன் நோக்கினார்கள். இச் சமயம் தஞ்சாவூர் துாதர்கள் சனக் கும்பலில் இருந்து முன் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களை அழைத்து வந்த சேவகன் ‘பெருமாட்டி இவர்கள் தங்களிற்கு முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள்’ என்றான். உடனே செம்பியன் மாதேவி சனக் கூட்டத்தைப் பார்த்து கை அமர்த்தி அமைதி பேணினார். பின்னர் சேவகன் செய்தியைக் கூறினான். ‘தாயே மிகத் துயரமான செய்தி கொண்டு வந்திருக்கும் அபாய்க்கிய சாலிகள் நாம் சக்கரவர்த்தியின் கட்டளையின் பேரில் அருள்மொழிவர்மர் இலங்கையில் இருந்து கோடிக் கரைக்கு வந்து கொண்டிருந்தார் வரும் வழியில் சுழல் காற்றில் கப்பல் அகப்பட்டுக் கொண்டது. துணையாக வந்த கப்பல் உடைந்து மூழ்கிவிட்டது. அதிலிருந்தவர்களைக் காப்பாற்றுவதற்காக இளவரசர் கடலில் குதித்தார் பின்னர் அகப்படவில்லை. கரை எங்கும் தேடுவதற்கு ஏற்பாடு செய்தாகிவிட்டது. சக்கரவர்த்தியும் மலையமான் மகளும் இச் செய்தியைக் கேட்டு ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கிறார்கள். தங்களையும், மதுராந்தகரையும் இளைய பிராட்டியையும் தஞ்சைக்கு வருமாறு எங்கள் மூலம் செய்தி அனுப்பியுள்ளார்’ என்றவுடன் செம்பியன் மாதேவி கண்கள் தாரை தாரையாக நீர் வார்க்க சனங்களோ ஓ வென்று அழுது புலம்பினார்கள். சனங்களில் ஒரு கூட்டத்தவர் ‘அவர் கடலில் மூழ்கவில்லை அவரை பழுவேட்டரையர்கள் கொன்று விட்டார்கள் சக்கரவர்த்தியை தஞ்சாவூர் அரண்மனையில் சிறை வைத்துள்ளார்கள் அவரை விடுதலை செய்து பழையாறிற்கு கொண்டு வர வேண்டும் எங்கே இளைய பிராட்டி அவரை நாங்கள் பார்க்க வேண்டும்’ என பல விதமான கோஷங்களை எழுப்பினர். செம்பியன் மாதேவி இளைய பிராட்டியை அழைத்து வர செய்தி அனுப்பினார். ஆழ்வார்க்கடியாரும் குந்தவையிடம் விரைந்து சென்று செய்தியைக் கூறினார். உடனே குந்தவை நிலா முற்றத்தின் மேல் மாட முகப்பிற்கு வந்தார். அப்பொழுது செம்பியன் மாதேவியின் கண்களில் கண்ணீர் ஊற்றெடுப்பதைக் கண்டு குந்தவையின் கண்களிலும் கண்ணீர் சொரிந்தது. அப்பொழுது சனங்கள், ‘கட்டளையிடுங்கள் நாங்கள் தஞ்சை சென்று பழுவேட்டரையரை பழிக்குப் பழிவாங்கி சக்கரவர்த்தியை மீட்டு வருகிறோம்’ என்று கத்தினர். இளைய பிராட்டி கீழே நின்ற ஆழ்வார்க்கடியானை அழைத்து அவர் காதில் செய்தி சொன்னார். ஆழ்வார்க்கடியான் சனங்களைப் பார்த்து கையமர்த்தி பின், ‘பொன்னியின் செல்வன் இறந்திருப்பார் என்று இளைய பிராட்டியால் நம்ப முடியவில்லை. இன்னுமோர் சமயம் காவேரித் தாய் இளவரசரை ஏந்திக் காப்பாற்றியது போல் சமுத்திர ராஜனும் அவரைக் காப்பாற்றியிருப்பார் என்று நம்புகிறார் நிமித்தக்காரரைக் கேட்டதில் அவரும் அப்படியே சொன்னார். இளவரசரைத் தேடிக் கண்டு பிடிக்க இளவரசி தக்க ஏற்பாடு செய்வார் உங்கள் அனைவரையும் வீட்டிற்குத் திரும்புமாறு கேட்டுக் கொள்கிறார்’ என்றான். ‘நிமித்தக்காரன் தன் வாயால் இதைச் சொல்லட்டும் எங்கே நிமித்தக்காரன்’ என்றனர் சிலர். அப்பொழுது வந்தியத்தேவன் மேல் மாடம் தாவி ஏறி, ‘இளவரசருக்கு பெரிய கண்டம் நேர்ந்தது உண்மை ஆனால் அவர் உயிருக்கு ஆபத்து ஒன்றும் இல்லை நிச்சயம் அவர் கிடைத்து விடுவார்’ என்றான். கீழிருந்து ஒரு குரல் ‘இவன் ஒற்றன்’ என்றது. வந்தியத்தேவன் அதைக் கேட்டு கீழே பார்த்தான். அது வைத்தியரின் மகன் பினகபாணி உடனே வந்தியத்தேவன் அங்கிருந்து குதித்து இருவரும் யுத்தம் செய்தனர். மக்கள் அதை வேடிக்கை பார்த்தனர். அந்த பெரும் பரபரப்பு மத்தியில் சங்கநாதமும், கொம்புகளின் முழக்கமும் கேட்டன. அதைத் தொடர்ந்து ‘முதல் மந்திரி அநிருத்தர் வருகிறார் வழிவிடுங்கள்’ என்ற குரல் முழங்கியது. அநிருத்தரும் அங்கு கவலையுடன் கூடியிருந்த மக்களுக்கு தன் ஆறுதலையும், ஆசியையும் கூறியபடி முன்னோக்கி கவலை படர்ந்த முகத்துடன் வந்து சேர்ந்தார். மேல் மாடத்தில் நின்ற பெரிய பிராட்டியையும், குந்தவையையும் கண்டு வணக்கம் தெரிவித்தார். பின்னர் யுத்தம் செய்யும் முரடர்களை கைது செய்ய கட்டளையிட்டார். பின்னர் மேல் மாடம் சென்று சனங்களைப் பார்த்து ‘உங்கள் கவலையும், கோபமும் நான் அறிவேன். சக்கரவர்த்தியும், ராணிமார்களும் உங்களைப் போல் சோகத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் கவலை அதிகமாகும் படி எதையும் செய்யாதீர்கள். இளவரசரைத் தேடுவதற்கு எல்லா ஏற்பாடும் செய்து இருக்கிறது. சக்கரவர்த்தியும் அரண்மனையில் பத்திரமாக இருக்கிறார். அவர் அரண்மனையில் வேளக்காரப் படையினர் இரவு பகல் என்று பாராது காவல் புரிகின்றனர். அவரை சீக்கிரம் பழையாறை அழைத்து வருவேன். இலங்கையில் உள்ள வீரர்களும் விரைவாகத் திரும்பி வந்து விடுவார்கள் ஏனெனில் ஈழப் போரும் வெற்றியுடன் முடிவுற்றது. நீங்கள் அமைதியுடன் வீடு திரும்புங்கள்’ என்றார். சனங்களும், ‘சக்கரவர்த்தி வாழ்க! அன்பின் அநிருத்தர் வாழ்க!’ என்று வாழ்தியபடி கலைந்து சென்றனர்.

(தொடரும்...)

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**



மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்




# 'மஹாகவி' பாரதி பாடல்கள்

***அத்தியாயம் - 05***

தமிழச்சியின் தாய்ப்பால் குடித்தவன் தமிழ் அறிந்தவன் எழுதுபவன் வாசிப்பவன் பேசுபவன் தமிழைச் சுவாசிப்பவன் எவனும் "மஹாகவி" சுப்பிரமணிய பாரதி எனும் நாமத்தை எக்கணமும் சிந்தையில் வைத்தே தொழுவான்!
அப்படிப்பட்ட தமிழனே பாரதியைக் கொண்டாடுவான்.

"நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற்குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல்
உமைக்கினிய மைந்தன் கணநாதன்,
நம் குடியை வாழ்விப்பான்!
சிந்தையே இம்மூன்றும் செய்!" , என்றுரைத்த பாரதி வழி வந்தவர்களே அவனது வாரிசுகளேயாவர்!. அவ்வழியில் வாரிசுகளில் ஒருவராக வந்தவரான "நாமக்கல் கவிஞர்" பாட்டுக்கொரு புலவன் பாரதிக்குப் பிறகு, கவிதை உலகில் நாட்டு மக்களின் வாட்டத்தைப் போக்க "நான்" என்று முனைந்தவராவார்!

"அஞ்சியஞ்சி உடல் வளர்க்கும் ஆசையாலே
அடிமை மனம் கொண்டிருந்த அச்சம் போக்கி
வெஞ்சமரில் வேல்பகைவர் வீசினாலும்
விழித்த கண்ணை இமைக்காத வீரன் போல
நெஞ்சுறுதி உண்டாக்கும் கவிகள் பாடி
நேர்மையுடன் சுதந்திரத்தை நினைக்கச் செய்து
விஞ்சைமிகும் மனப்புரட்சி விரவச் செய்த
வித்தகனாம் "பாரதி ஒரு ஆசான்" மெய்தான்! எனப் பாரதியைக் கொண்டாடி வழி முடிந்தவர் நமது நாமக்கல் கவிஞர் வெ இராமலிங்கம் பிள்ளை ஆவார்.

இவ்வாறு கற்றோரால் காமுற்றுப் போற்றப்படும் மகாகவியின் பாடல்கள் சினிமா சித்திரங்களுக்கு எவ்வாறு அணி சேரத்தன என நோக்குங்கால் முதன் முதலாக மக்கள் திலகம் எம் ஜி ஆர் அவர்களுக்கும் பாரதி பாடல் புகழ் சேர்ந்துள்ளதை எண்ணி ஆனந்தம் கொள்கிறேன்.

"அந்தமான் கைதி" இப்படம் 1952 இல் வெளியானது. குடும்ப உறவுகளுக்கிடையே ஏற்படும் லௌகீகப் பிரச்சனைகளைக் கொண்டு எழுதப்பட்ட ஒரு சமூகப் படமாகும். மக்கள் திலகம் திரையுலகில் தனக்கு ஒரு அங்கீகாரத்தை எதிர்பார்த்து வளர்ந்து வந்த காலமது. இப்படத்தில் இடம்பெற்ற பாரதி பாடல் "காணி நிலம் வேண்டும்.." என ஆரம்பிக்கும் பாடலாகும். நாயகன் (எம்ஜிஆர்) நடராஜனுக்கும், அவருடைய காதலிக்கும் இப்பாடல் வரிகள் வெட்டி ஒட்டப்பட்டதாக அமைத்து இசையமைப்பாளர் கோவிந்தராஜுலு நாயுடு என்பவரால் இசை அமைக்கப்பட்டிருந்தது. இசைச்சித்தர் சி.எஸ். ஜெயராமனும் - பாடகி எம் எல் வசந்தகுமாரியும் பின்னணி குரல் வழங்கியிருந்தனர்.

படத்தில் இடம்பெற்ற பாடல் வரிகளை மட்டும் இங்கு பதிவு செய்துள்ளேன்.

"காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அங்கு
தூணில் அழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறுத்தினவாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித் தர வேண்டும் - அங்குக்
கேணியருகினிலே தென்னை மரம்
கீற்று மிளநீரும். (காணிநிலம்)

பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும் - நல்ல
முத்துச்சுடர் போல - நிலாவொளி
முன்பு வரவேணும் அங்கு
கத்துங்குயிலோசை - சற்றே வந்து
காதிற் படவேணும் - என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே - நன்றாயிளந்
தென்றல் வரவேணும் (காணிநிலம்)

அடுத்து 1955 இல் வெளிவந்த படம் "கள்வனின் காதலி". இப்படத்தின் மூலம் கதை "கல்கி" இதழில் தொடராக ஆசிரியர் கிரு'ணமூர்த்தி (அமரர். கல்கி) அவர்களால் தொடராக எழுதப்பட்ட நாவலாகும். கவிஞர் எஸ்.டி சுந்தரம் வசனம் எழுதியிருந்தார். பி.பானுமதி அம்மாவுடன் முதன் முதலாக நடிகர் திலகம் ஜோடி சேர்ந்து நடித்த படம் இதுவாகும்.

கள்வனாக நடித்த முத்தையனும் (சிவாஜி) காதலி கல்யாணியாக பானுமதியும் இணைந்து பாடிய பாடலே "மனதில் உறுதி வேண்டும்".. என ஆரம்பிக்கும் பாரதியின் நம்பிக்கை வரிகள். நடிகர் திலகம் நடித்து முதலாவது பாரதி பாடலாக இப்பாடல் அமைந்தது. திருமதி பானுமதி பெண் குரல், ஆண் குரல் ஏழிசை வேந்தர் (அமரர்) ரி. எம் சௌந்தரராஜன் இருவரும் பாடியிருப்பார்கள். இப்பாடலுக்கு (அமரர்கள்) கோவிந்தராஜுலு நாயுடுவும் - பின்னணி பாடகர் கண்டசாலா இருவரும் இணைந்து இசையமைத்திருந்தார்கள்.

"மனதில் உறுதி வேண்டும்" பாடல் வரிகள் காதலன் காதலிக்காகப் பிரித்து பாட வைத்திருப்பார்கள். இதோ பாடல் வரிகள்:



"மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்.
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்

கண் திறந்திட வேண்டும்
காரியத்திலுறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
(பெரிய கடவுள் காக்க வேண்டும்)
மண் பயனுற வேண்டும்
வானகமிங்கு தென்பட வேண்டும்!

"மகாகவி" கண்ட கனவுகள் மெய்ப்பட வேண்டும் எனும் இலட்சியத்தை வலியுறுத்துவது போல சிவாஜி - பானுமதி ஆகிய கலைஞர்களுக்கு காதல் காட்சி அமைந்திருந்தது. மேலும் இப்படத்தின் தலைப்புப் பாடலாக (TITLE SONG) "மகாகவி"யின்
"தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா..." என ஆரம்பிக்கும் பாடலை பிரபல பின்னணி பாடகியான திருமதி எம் எல் வசந்தகுமாரி, திருமதி கானசரஸ்வதி இருவரும் பாடியிருந்தார்கள்.

அடுத்த இதழில்... அறிஞர். அண்ணா அவர்கள் அது கதைக்கு - கலைஞர் மு கருணாநிதி உரையாடல் எழுதியிருந்த படத்தில் இடம்பெற்ற மஹாகவி பாரதி பாடல் என்ன..?

- வீணை மைந்தன்


## ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு

# இணையத்தில் தமிழ் கற்பிக்க

# ஆசிரியர்கள் தேவை

**உலகப் புகழ் பெற்ற ஒஸ்ரேலியா - பாரதி பள்ளியின் உலகளாவிய தமிழ் வகுப்புகள், கனடாவிலிருந்து இயங்க உள்ளன.**

*முன் அனுபவம் அவசியமில்லை.*

*முறையான பயிற்சி வழங்கப்படும்.*

**பாரதி பள்ளி**
**BHARATHI ACADEMY**
www.bharathi.org.au
Email: admin@bharathi.org.au
Tel.: 416 400 1053
WhatsApp: +94 77 055 3143



## இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால் பதிக்கும் கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'

நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, ஏப்ரல் மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022 மார்ச் மாதம் 14ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன.


படைப்புக்களை தபால் மூலமாகவோ
அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை (416) 732-1608 என்னும்
WhatsApp இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

இலங்கைச் சிறப்பிதழில் பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பிவைக்கப்பெறும்

தபால் முகவரி: Managing Editor
Uthayan Publishers
4062 Ellesmere Road
Scarborough, Ontario
CANADA. M1C 1J2

மின்னஞ்சல் முகவரி: uthayannews@yahoo.com




# "நீங்களும் சொற்பொழிவாளர் ஆகலாம்" என்னும் நூலை எமக்களித்த "நவீன பாரதி" இளசை சுந்தரம் அவர்கள் மௌனித்துவிட்டார்

**- கனடாவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**



அகில இந்திய வானொலியின் மதுரை நிலையத்தின் முன்னாள் தலைமை இயக்குனரும். பிரபல பட்டி மன்றப் பேச்சாளரும். கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்தின் சார்பில் பல தடவைகள் கனடாவிற்கு அழைக்கப்பெற்று கௌரவிக்கப்பெற்றவரும். உதயன் சர்வதேச வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றவருமான "இளசை சுந்தரம்" அவர்கள் அண்மையில் மதுரையில் காலமானார் என்ற கவலையளிக்கும் செய்தியை அனைவரோடும் பகிர்ந்து கொள்கின்றோம்.

பன்முக ஆற்றலும் நட்பு பாராட்டும் குண இயல்பும் கொண்ட "இளசை சுந்தரம்" அவர்களின் மறைவு குறித்து இன்னும் அறிந்து கொள்ளாத நண்பர்களுக்காகவும் "உதயன்" சார்பில் அஞ்சலி செலுத்துவதற்காகவும் இந்த தகவலை இங்கு பதிவு செய்கின்றோம்.

- கனடா உதயன் ஆசிரிய பீடம்

# கடந்தவையும் கடப்பவையும் (17)

**- உமா மோகன் -**

*ஆவரங்கால் தாண்டிச் செல்ல புத்தூர் - பத்து*
*சிறிய ஊர்களின் தொகுதியாம் இப் புத்தூர்*

*பத்தூர் மருவி புத்தூர் ஆனதாம்*
*மக்கள் அதிகம் செறிந்த ஊரிது - பலரும்*

*அறிந்த ஸ்ரீ சோமாஸ்கந்தாவும் இங்குதான் உள்ளது - அன்று*
*செறிவாக இல்லை மாணவர் ஆயினும்*

*வீதியில் ஆங்காங்கே விலகித்தான் சென்றனர்*
*பாதைகளில் பள்ளிக்குப் போவோரைப் பார்த்துவிட்டு*

*நம் நிலையை நோவது புதியதல்ல எங்களுக்கு*

*புத்தூரைத் தாண்டியதும் பார்வைக்குச் சிற்றூர்தான் - தமிழ்*
*பற்றோடு வாழ்ந்த மாமனிதன் பிறந்த இடம்*

*புற்றெடுக்கும் கறையான்கள் பரந்து*
*பற்றிடாமல் ஏடுகளைத் தட்டி - அவர்*

*மீட்டெடுத்து காத்ததனால் தட்டுகிறோம் மார்பதனை*
*காட்டுகிறோம் பலருக்கு தமிழரின் பண்பாட்டுச்*
*சான்றுகளை -*

*"பார்!*

*சங்கத் தமிழ் நூல்கள் எம்மிடத்தில் உண்டு - அவை*
*மங்காத் தமிழின் பெருமையை காட்டுகின்றன"*
*என்று*

*செல்லரித்த ஏடுகளை மீட்டெடுத்து*
*காத்து அதை ஒப்பிட்டு*

*பரிசோதித்து பின் அச்சிட்டுத் தந்தவர்*
*"நீதிநெறி விளக்கம்" அவர் முதற் பதிப்பாம்*

*பதிப்புத்துறையின் முன்னோடி பாண்டிய மன்னனும்*
*எடுக்க முடியா நூல்களையும் தான் எடுத்து - பின்*

*பரிசோதித்து அச்சிட்டுத் தந்தவராம் - பலருக்கும்*
*தெரியாத் தொல்காப்பியப் பொருளதிகாரம்*

*இவர் தந்ததாலாம் தமிழர் வாழ்வியலை*
*எவரும் அறிய முடிந்தது*

*இத்தகைய சிறப்பு மிக்க சி. வை தாமோதரம் பிள்ளையைப்*
*பெற்ற அந்த ஊராம் சிறுப்பிட்டி*

*பெருமைக்குரிய அம் மனிதர் பிறந்ததாலோ*
*புனிதமான அவ்வூரும் - அன்று*

*அமைதியாக இருந்தது...*


*(தொடரும்)*

# சென்னை TASTY THAMILA நிறுவனத்தின் "பொங்கல் பொதி"கள் தற்போது கனடாவில் கிடைக்கின்றன

சென்னையில் இயங்கிவரும் TASTY THAMILA நிறுவனத்தின் தயாரிப்புக்களில் ஒன்றான "பொங்கல் பொதி" பொதி செய்யப்பட்டு தற்போது கனடாவில் கிடைக்கின்றன. ஸ்காபுறோவில் கென்னடி-எங்ளிங்கடன் சந்திப்புக்கு அருகில் உள்ள சங்கர் அன்கோவில் இந்தப் பொதிகள் விற்பனைக்கு உள்ளன.

SHANKAR & CO: (416) 759-5100

இந்த "பொங்கல் பொதி"கள் சில அதன் இறக்குமதியாளர்களால் இன்று ரொறன்ரோவில் உள்ள வர்த்தகப் பிரமுகர்கள் திருவாளர்கள் கணேசன் சுகுமார். சங்கர் நல்லதம்பி மற்றும் சமூக சேவையாளர் திரு. விசு கணபதிப்பிள்ளை ஆகியோர்க்கும் அதன் இறக்குதியாளர்களால் நேரடியாக வழங்கப்பெற்றன.







# இவ்வார ராசிபலன்

**07-01-2022 வெள்ளி தொடக்கம் 13-01-2022 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** உண்மையான நன்மைகளை சந்திக்கக் கூடிய வாரம். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சோதனைகள் தீரும். ஆற்றல் வெளிப்படும். சுயத்தொழில் லாபம் தரும். தனவரவு சீர்படும். தகுதி மேம்படும். தாயார் உடல்நலம் பாதிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சிக்கன நடவடிக்கை தேவை. தொழில் மந்த நிலை காணும் தருணம். பணியில் செல்வாக்கு சேரும். தடைப்பட்ட நிலை மாறும். உத்தியோக மாற்றம் ஏற்படும். நலிந்த தொழில் மேன்மை பெறும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலன் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். பகைவர் பணிந்து நிற்பர். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும்.

வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுகை அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,3,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,K




**ரிஷபம்:** கிருபைகள் சேரும் வாரம். பகைவர் பணிந்து நிற்பர். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். சுபிட்ஷங்கள் பெருகும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் லாபம் தரும். நெருக்கடிகள் குறையும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பாகப் பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அழகு நாச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B




**மிதுனம்:** பெண்களால் ஆதாயம் சேரக்கூடிய வாரம். விவசாயம் பலன் தரும். உடல்நலம் மேம்படும். சகோதரியினால் நன்மை உண்டு. கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். தொழில் அபிவிருத்தி அடையும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். நினைவாற்றல் பெருகும். திருமண தீபம் சுடர்விடும். அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். வணிகத்தொழில் வளம் கூடும். இலக்கிய ஆர்வம் கூடும். இனம் புரியா சந்தோ'ம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களிடம் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். மங்கல செய்தியால் மனம் மகிழும். ஆரோக்யம் சீராகும். காதல் எண்ணம் ஏற்படும். சகோதாரிளால் சஞ்சலம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 2,9,7,6
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,U




**கடகம்:** வரவும், உறவும் வலிமையாகக் கூடிய வாரம். நிதி நிலைமை சீராகும். பணவரவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். உடல்நலனில் கவனம் தேவை. உடன் பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு அகலும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து சேரும். விபரீத எண்ணம் விலகும். வழக்குகளில் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். நோய் நொடிகள் அகலும். பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை. உறவினர் வருகை தொல்லை தரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். திடீர் பயணம் ஏற்படும். குளிர்பான தொழில் கவனம் தேவை. குதூகலம் அதிகமாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு ஏற்படும். காதலால் மகிழ்ச்சி உண்டு. கனவுத்தொல்லை உண்டு. வாழ்வில் வசந்தம் உண்டு. கைப்பொருள் களவுப் போகும். சுபச்செய்தி கூடி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. சுபச்செய்தி கூடி வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகர், அதிர்ஷ்ட எண்: 4,9,1,2
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,J




**சிம்மம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். உறவினரால் உற்சாகம் கூடும். சகோதரியினால் லாபம் உண்டு. தொழிலில் வளர்ச்சி கூடும். பூர்வீகச் சொத்து கிட்டும். எதிர்பார்ப்புகள் உருவாகும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். திட்டம் வெற்றி பெறும். அரசியல் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். வில்லங்கம் விலகும். விரக்திகள் மறையும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். மின்சாரத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வீடு வாங்கும் யோகம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோ'மான சூழ்நிலை உருவாகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். பூமியால் லாபமுண்டு. பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். பெண்களால் பெருமை சேரும். வணிகத்தொழில் விரிவடையும். மாற்றுத் தொழில் உருவாகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஅர்த்தநாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,5,6,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**கன்னி:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். புதிய முயற்சிகள் பலன் அளிக்கும். அரசாங்க அனுகூலம் கூடும். எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாய் வழி உறவு லாபம் தரும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். அலுவலக பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை நிறைவேறும். பெண்களுக்கு யோகம் கூடும். பொறுமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. சொல்லில் கவனம் தேவை. பூர்வீக சொத்து வந்து சேரும். விபரீத போக்கு மாறும். உடல் சோர்வு ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். தன்னம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகளை தள்ளி போடவும். ஆலய தரிசனம் அமைதி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 6,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Z




**துலாம்:** சுப விரயம் ஏற்படக்கூடிய வாரம். நண்பர்களிடத்தில் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புதுமுயற்சிகளை தள்ளிப்போடவும். விளையாட்டில் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோ'ம் கூடும். உறவினரால் உதவிகள் கிட்டும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைதூரப்பயணம் ஏற்படும். பணியாட்களின் ஒத்துழைப்பு கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: மேல்மலையனூர் அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: 1,7,9,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K





**விருச்சிகம்:** பொறுப்பான வாழ்க்கையில் முன்னேற்றம் கிடைக்கும் வாரம். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழிலில் முன்னேற்றம் தரும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய்வழி உறவில் விரிசல் வரும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். பாராட்டுக்கள் கூடும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். பாகப் பிரிவினை ஏற்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பொன், பொருள் சேரும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குலதேவதை, அதிர்ஷ்ட எண்: 2,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,D





**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக்கும் வாரம். பொன், பொருள் சேரும். முதலீடுகளில் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பரைச் சந்திக்க நேரிடும். பயணம் வெற்றித்தரும். விருந்தினர் வருகையுண்டு. வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. கணவன், மனைவி உறவு மேம்படும். உடல்நலம் மேம்படும். சகோதரியினால் நன்மை உண்டு. கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நிருதிலிங்கம், அதிர்ஷ்ட எண்: 5,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K





**மகரம்:** திருப்புமுனையைச் சந்திக்கக் கூடிய வாரம். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். மனக்கசப்பு ஏற்படும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனை மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். விளையாட்டுதுறையில் வெகுமதி கூடும். பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். தெய்வீகப் பற்று கூடும். ஊக்கம் அதிகரிக்கும். வெகுமதி தேடி வரும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவுகள் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். காதல் கைக்கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காட்டேரி முனிசாமி, அதிர்ஷ்ட எண்: 8,3,2,4
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K




**கும்பம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். தாய், தந்தை உதவி உண்டு. எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கை உண்டு. புதியத்தொழில் வாய்ப்பு உருவாகும். புத்திரர்களால் மேன்மையுண்டு. குடும்ப வளம் கூடும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவினரால் நன்மை ஏற்படும். மனஅமைதி கூடும். திக்கற்ற நிலை மாறும். மேல்திகாரியின் பாராட்டு கிட்டும். இடமாற்றம் ஏற்படும். தாய் நலனில் அக்கறை தேவை. வழக்குகள் சாதகமாகும். மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை. எதிரிகள் தொல்லை குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ எல்லையம்மன், அதிர்ஷ்ட எண்: 7,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,S




**மீனம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். வெற்றிகள் குவியும். பாராட்டு அதிகமாகும். உத்யோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். நிதானம் நல்லது. மங்களச் செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உறவினர்களால் உதவி கிட்டும். வியாபாரம் லாபம் தரும். உடல் ஆரோக்யம் கூடும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகல எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. வெளிநாட்டு நபரால் வெகுமதி உண்டு. பயணம் அனுகூலம் தரும். புதுதொழில் அமையும். திட்டங்கள் எளிதாகும். உணவு தொழில் உயர்வு பெறும். இசையார்வம் கூடும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். நல்லோர்களின் வாழ்த்து கிட்டும். எதிரிகள் தொல்லை குறையும். தனவரவு அதிகரிக்கும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உதவிகள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்பு விலகும். உடல்நலனில் அதிக கவனம் தேவை. ஆன்மீக சிந்தனை அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஆனந்தப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 1,4,6,9
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,W


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லரை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
Tasty தமிழா
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள்,
மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
Tasty Tamila தயாரிப்புகள்
இப்போது சங்கர் அன் கோவில்
கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers,
Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti,
Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள்
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
பொங்கல் பொதி
PONGAL POTHI
ABC
Tasty Tamila புதிதாக அறிமுகம்
செய்துள்ள
பொங்கல் பொதிகள்
சங்கர் அன் கோ வில் கிடைக்கும்
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25ஆவது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE, TRANSMISSION, RUSTPROOFING, OILCHANGE, TYRES, AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3

உதயம் 1344 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 7, 2022

# இல தமிழ் நாட்டின் பிரபல சோதிடர் நெல்லை வசந்தன் அவர்கள் வியாழனன்று காலமானார்



தமிழ்நாட்டின் பிரபல ஜோதிடர் நெல்லை க.வசந்தன் உடல்நலக்குறைவு காரணமாக வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

நெல்லை மாவட்டம், கோவில்பட்டி அருகே உள்ள வானரமுட்டி என்ற ஊரைச் சேர்ந்த நெல்லை வசந்தன், ஜோதிடத்தில் மிகவும் புகழ்பெற்றவர். இவருடைய ஆய்வுகள், இந்திய பல்கலைக்கழகங்களிலும் வெளிநாட்டு கல்வி நிறுவனங்களிலும் போற்றப்பட்டவை. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே ஜாதகத்தை வைத்து துல்லியமாக கணித்துக் கூறியவர். வெளிநாடுகளில் இருந்தும் இவரை பலரும் தொடர்புகொண்டு வந்தனர்.

இயற்கை சீற்றம் குறித்தும் பலமுறை துல்லியமாகக் கணித்தவர். உலகம் முழுவதும் எண்ணற்ற அரசியல் தலைவர்கள், சினிமாத் துறையினர், தொழில் மேதைகள் என பலரும் இவருடைய ஆலோசனையைப் பெற்றுள்ளனர்.

கனடா உதயன் பத்திரிகையோடும் அதன் ஆசிரிய பீடத்தோடும் நெருங்கிய தொடர்பில் இருந்த நெல்லை வசந்தன் அவர்கள் கனடாவிற்கு 2019ம் ஆண்டு வருவதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேளையில் அவருக்கு இருதய நோயின் தாக்கம் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்ததால். அந்தப் பயணம் பின்போடப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஒன்றாரியோ மாகாணத்தில் கடந்த வருடத்தைப் போன்று வர்த்தக நிறுவனங்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்படுமா?

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் நேற்று தொடக்கம் மாகாண அரசாங்கத்தால் அறிவிக்கப்பெற்ற தொற்றுநோய் காரணமான வர்த்தக மையங்கள் மற்றும் பாடசாலைகள் மூடல் காரணமாக பாதிக்கப்படவுள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது போன்று நிதி உதவிகள் மற்றும் சலுகைகள் ஆகிய உதவிகளை ஒன்றாறியோ அரசாங்கம் பரிசீலித்து வருகிறது என்றும் ஆனால் அவசர உதவி மற்றும் எதிர்காலத்திற்கான திட்டம் விரைவில் அறிவிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றும் தொழில்துறை வழக்கறிஞர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்

(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)

# உலக சாதனை நிகழ்வு ' 31 நாள் 1330 திருக்குறள் முற்றோதல் மார்கழித் திருவிழா 16/12/2021 - 15/01/2022 வரை நடைபெறுகின்றது

உலகத் திருக்குறள் மையம் சென்னை அதன் ஒன்பது புலனங்களில் ஒன்றான உலகத் திருக்குறள் பரப்பு மையம், திருக்குறள் முற்றோதல் பயிற்றகம் தஞ்சாவூர் – 5 இணைந்து நடத்தும் 31 நாள் 1330 திருக்குறள் முற்றோதல் மார்கழித் திருவிழா 16-12-2021- 15-01-2022 வரைநாளாந்தம் நடைபெற்றுவரும் உலகச் சாதனை நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது

இந்த நிகழ்ச்சியை கலிபோர்னியாவைச் சேர்ந்த டாக்டர் செந்தமிழ்ச் செல்வி முருகேசன், கனடா கவிஞர்கள் கழக உறுப்பினர்களான கவிஞர் அகணி சுரேஸ் மற்றும் கவிஞர் க.குமரகுரு, ஆகியோரும் தொடக்கி வைத்த கௌரவத்தைப் பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி உள்ளே 12ம் பக்கத்தில்)

# "விஸ்வாபிமாணி கலாகீர்த்தி" பட்டம் வென்ற இலங்கைத் தமிழ் நடிகை நிரஞ்சினி சண்முகராஜா



இலங்கையின் தமிழ், சிங்கள மொழிகளில் பேசி நடிக்கும் ஒரு தமிழிச்சியான நிரஞ்சனி சண்முகராஜாவுக்கு "விஸ்வாபிமாணி கலாகீர்த்தி" என்னும் உயர் கலைப் பட்டம் அளிக்கப்பட்டு அதியுயர் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற அரச வைபவம் ஒன்றிலேயே இந்த விருதினை அவர் பெற்றுக்கொண்டார்

நிரஞ்சினி சண்முகராஜா அவர்கள் இலங்கையில் தயாரிக்கப்பட்ட பல தமிழ், சிங்கள திரைப்படங்களில் நடித்துள்ளதுடன் சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் தயாரிக்கப்பெற்ற 'சுனாமி' என்னும் பெயர் கொண்ட திரைப்படத்துக்காக சர்வதேச விருதுவென்ற இலங்கை நடிகை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது

(தொடர்ச்சி உள்ளே 14ம் பக்கத்தில்)

# இலங்கைக்கு சட்டவிரோதமாக படகில் செல்ல முயன்ற மல்லாவியை சேர்ந்த இளைஞன் தனுஸ்கோடியில் கைது – (யாழ்ப்பாண நிருபர்)



தமிழ்நாட்டிலிருந்து. தனுஸ்கோடி கடற்பரப்பினுடாக சட்டவிரோதமாக இலங்கைக்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை இரவு தமிழ்நாட்டின் கடல் எல்லை பாதுகாப்புப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது

இலங்கையில் இருந்து விமானம் மூலம் தமிழகத்திற்கு சென்று தங்கி இருந்த இலங்கையைச் சேர்ந்த குறித்த நபர் விசா முடிந்ததால் சடஸ்டவிரோதமாக படகு மூலம் இலங்கைக்கு செல்வதற்கு தனுகோடிக்கு சென்றுள்ளார்.

சந்தேகத்திற்கிடமாக கடற்கரையில் நின்ற குறித்த நபர் குறித்து அப்பகுதி மீனவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவு இடத்திற்கு சென்ற கடல் எல்லை பாதுகாப்புப் பிரிவு பொலிஸார் குறித்த நபரை கைது செய்தனர்.

-கைது செய்யப்பட்ட நபர் கடல் எல்லை பாதுகாப்புப் பிரிவு பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

-கைது செய்யப்பட்ட நபர் வன்னி பிராந்திய மல்லாவி பகுதியைச் சேர்ந்த சமிந்தன் என்னும் வயது-24 உடையவர் என தெரிய வந்துள்ளது.

# தமிழ் பேசும் மூத்தோர்களுக்கான பலதரப்பட்ட சேவைகளை வழங்கும் Senior Persons Living Connected

**Scarborough** இல் **3333 Finch Avenue East** என்ற முகவரியில் அமைந்துள்ள **Senior Persons Living Connected (SPLC)** நிறுவனம் தமிழ் பேசும் வயது முதிர்ந்த மற்றும் மூத்தோர்களுக்கான பலதரப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றது. நீங்கள் சமூக இடைவெளியைக் கருத்திற்கொண்டு தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்ற இக்காலகட்டங்களில் உங்களுடைய மனநலம் மற்றும் உடல் நலம் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பொருத்தமான சேவைகளை வழங்கிவருகின்றனர். இணையவழி மூலம் வாரார்ந்த மற்றும் மாதாந்த மெய்நிகர் நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. இந் நிகழ்வுகளில் பங்குகொண்டு பயன் பெறுங்கள் அத்தடன் நீங்கள் தன்னார்வுத் தொண்டர்களாக எமது நிறுவனத்தில் இணைந்து செயற்படலாம்.

மேலதிக தகவல்களை இணையத்தளத்திலோ **(splc.ca)** தொலைபேசி மூலமோ (416 493 3333) பெற்றுக்கொள்ளலாம். *(விளம்பரம்: 20ம் பக்கம்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்று கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker